
கோகுலம்

GOKULAM

ஏப்ரல் '93 ரூ. 3.00



“The Only Shoes that Suit My Lifestyle”.




Kapil Dev, one of world's greatest cricketing star, well known for always making the right decisions. That's why Action shoes are his action partner. Now you too can be an action man like him. Make your choice from an exciting international styled range. Only from action shoes.

- Multicoloured Soles.
- Latest International Styling.
- Tough, Hi-fashion Uppers.

You get the same shoes, we export!


action®
SHOES

shoes for the new generation...



கோகுலம்


1993 ஏப்ரல் மாத இதழ்
மலர் : 11 இதழ் : 3




அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள். முஸ்லீம் வாசகர்களுக்கு இனிய ஈத்பெருநாள் நல்வாழ்த்துகள்.

இந்த இதழ் உங்களிடம் வந்து சேரும் போது உங்களில் பெரும்பாலோருக்கு ஆண்டுத் தேர்வுகள் தொடங்கி, நடந்து கொண்டிருக்கும். தேர்வு என்பது என்ன? படித்த, கற்பிக்கப்பட்ட பகுதிகளை உங்களால் எந்த அளவு நினைவில் வைத்துக் கொள்ள முடிந்துள்ளது என்பதை அளவிடும் பரிசோதனைதானே? கோகுலம் வாசகர்கள் திட்டமிட்டுச் செயல்படுபவர்கள். அதனால் தேர்வுகள்தான் அவர்களைக் கண்டு அஞ்ச வேண்டுமே தவிர, அவர்கள் தேர்வைக் கண்டு கலங்காதவர்கள். அப்படித்தானே?




"போட்டிகளில் பரிசுதான் கிடைக்கவில்லை என்றாலும், சரியான விடை எழுதியவர்களின் பெயர்களையாவது வெளியிடக் கூடாதா? இந்த சாக்கிலாவது எங்கள் பெயர் கோகுலத்தில் வரும்படி செய்யலாமே?" என்று தொடர்ந்து பலரும் எழுதி வருவதைப் பரிசீலித்தோம். இந்த இதழில் பரிசு பெறாத, ஆனால் சரியான விடை எழுதியவர்களின் பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன. உங்களுக்கு மகிழ்ச்சிதானே? கூடுமான வரை இந்த முயற்சி தொடரும். எல்லாம் இடமில்லாததுதான் காரணம்.



சில பெரியவர்கள், கோகுலம் சிறுவர் பத்திரிகை என்பதையே மறந்து விடுகிறார்கள். பெரியவர்கள் மட்டுமே படிக்கக்கூடிய ஜோக்ஸ், பாடல்கள், கதைகளை இவர்கள் கோகுலத்திற்கு அனுப்பி வைக்கிறார்கள்! இது வீண் முயற்சி.

உங்களிலும் கதை, கட்டுரை, பாடல்களை எழுதுவோர் கூட இன்னமும் சரியான முகவரியைத் தருவதில்லை. இது பற்றி எத்தனையோ முறை எழுதி விட்டேன். முழு முகவரி இல்லாத எதுவும் ஏற்கப்பட மாட்டாது. அதோடு, காகிதத்தின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதுங்கள். ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெற எண்ணினால், போதிய தபால்தலைகளைக் கூடவே வைத்து அனுப்புங்கள். முதலில் கதைகளை அனுப்பி விட்டு ஒரு வாரம் பொறுத்து தபால்தலைகளை அனுப்பாதீர்கள்.




அடுத்த இதழில் விடுமுறைப் போட்டியும் உண்டு. கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்தி வாங்கச் சொல்லுங்கள். பிறந்த நாள் விழாக்களின் போதும், பாராட்டும் நேரங்களிலும் கோகுலத்திற்கு சந்தா கட்டிக் கொடுப்பதை விட சிறந்த பரிசு உண்டா?

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்

(கௌரவ ஆசிரியர்)


உயிர்களிடத்தில் அன்பு வேணும்
தெய்வம் உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.



கோகுலம்


இந்த இதழில்...

ஏப்ரல் 1993






★ கண்ணனுக்கு இணையான வீரன்! - பக். 45



★ பெருமாள் மாடு! - பக். 95



★ ஐஸ்கிரீம் - பக். 32



★ அடை காக்கும் அப்பா! - பக். 77




மணம் நாறும் மலர்கள்!

வாசனை வீசும் மலர்களைத்தான் தெரியும். நாற்றமடிக்கும் மலர்களைத் தெரியுமா?

ரீல் விடவில்லை. அதிசயங்கள் நிறைந்த தென் ஆப்பிரிக்காவின் காடுகளில்தான் இந்த மலர்கள் இருக்கின்றன. இந்த மலர்கள் நாற்றமடித்து மனிதர்களையும், விலங்குகளையும் அண்ட விடாது செய்வது மட்டும்தான் அதிசயம் என்று எண்ணி விடாதீர்கள். இவைகளின் அளவும் கூட மலைக்க வைப்பவை. ஒவ்வொரு மலரும் மூன்றடி விட்டம் கொண்டவை! ஐந்து இதழ்கள். இதழ்கள் ஒவ்வொன்றும் சுமார் ஒரு அங்குலம் கனம் கொண்டவை. பூவின் மத்திய பாகம் ஒரு கிண்ணம் போல் இருக்கிறது. மலரின் நிறம் கருமையான பச்சை. மஞ்சள் நிறப் புள்ளிகள் கண்கொள்ளாக் காட்சி. ஒவ்வொரு பூவும் சுமார் ஏழு கிலோ எடை இருக்கும்! இதன் அழகைப் பார்த்து யாராவது மயங்கி அருகே சென்றால் குடலைப் புரட்டி வாந்தி எடுப்பார்கள்! அப்படி ஒரு துர்நாற்றம் வீசும்! இந்தக் குடல் புரட்டி ராட்சசப் பூவின் பெயர் ''ரெப்லேஷியா ஆர்னோ விடாய்''. ஒருவர் இதில் படுத்துக் கொள்ளலாம்!

இங்கிலாந்தைச் சேர்ந்த தாவர இயல் அறிஞர்களான டாக்டர் ஓடோ ஆர்டோ, அவரது உதவியாளர் பேஸரி ஆகிய இருவரும் 1878-ஆம் ஆண்டு ஆராய்ச்சிப் பணிகளுக்காக சமுத்ரா தீவுக்குச் சென்றிருந்தார்கள். ஆதிவாசிகள் சிலர் எதையோ நீண்ட மூங்கில் கழிகளில் கட்டித் தோளில் சுமந்து வந்ததைக் கண்டனர். அது ஆறடி உயரம் கொண்ட ஒரு இராட்சச மலர்! அதன் அடியில் பெரிய கிழங்கும் இருந்தது! இதைக் குறித்த முழு விவரங்களையும் சேகரித்துக் கொண்டு இருவரும் லண்டன் திரும்பினர்.

இந்த இராட்சசப் பூவை லண்டனில் வளர்க்க வேண்டும் என்ற ஆசையால் தூண்டப்பட்டு பல முயற்சிகள் தாவர இயலாளர்களால் மேற்கொள்ளப் பட்டன. லண்டனின் புகழ்மிக்க கிவ் கார்டனில் இந்த மலரின் விதைகள் போடப்பட்டு முளைக்க வைக்கும் முயற்சிகள் கவனமாக மேற்கொள்ளப் பட்டன. முளைத்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 1887-ல் இந்தச் செடி பூக்கும் நிலையை அடைந்தது. நூற்றுக்கணக்கில் மக்கள் கூடி ஆவலாகப் பார்த்துக் கொண்டிருக்க இந்த ராட்சசப் பூ மலர்ந்தது! ஆனால் பூத்த ஒரே நாளில் இது கருகி விட்டது!



அமெரிக்காவிலும் இதை வளர்த்துப் பார்க்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. நியூயார்க் நகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆவலோடு காத்திருக்க இந்த அதிசய மலர் பூத்தது. 1937-ஆம் ஆண்டு ஜூன் 7-ஆம் நாள் மலர்ந்தது இது. நான்கு நாட்கள் இருந்து, வாடிக் கருகியது!

அமெரிக்காவின் தென் பகுதியில் ஒரு அதிசயப் பூங்கொடி வளர்கிறது. இந்த பூவின் பெயர் எரிடோ லேகியா கிரேண்டி ஃபுளோரா. இது சுமார் நான்கடி சுற்றளவும் இரண்டடி பரப்பளவும் கொண்டது. ஊதாவும் பழுப்பும் கலந்த நிறம். வெளிப்பகுதி வெளிர் மஞ்சள் நிறம். இதற்கு, 'பெலிகன் பிளவர்' என்ற பட்டப் பெயரும் உண்டு. இது மொட்டாக இருக்கையில் பெலிகன் பறவையின் தலைப் பகுதியைப் போலவே தோற்றமளிக்கும். பூவில் இருந்து மூன்றடி நீளமுடைய வால் போன்ற ஒரு பகுதி கீழ் நோக்கிய வண்ணம் வளர்ந்து தொங்கும்! இது பெலிகன் பறவையைப் போலவே தோற்றமளிக்கும்.



இனிமேல் யாராவது மலரைப் போன்றவர் என்று கூறினால், அவர் என்ன பொருளில் கூறுகிறார் என்பதைக் கவனியுங்கள். ஒருவேளை அவர் குடல் புரட்டிப் பூவான ''ரெப்லேஷியோ ஆர்னோ விடாய்''யைக் குறிப்பதாகக் கூட இருக்கலாம்!

- ஜப்பார்

ரெட்டை வால் பாபு!

எண் விளையாட்டு!

வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது. வெளியே போய் யாரையாவது வம்புக்கு இழுத்தோ விஷமம் செய்யவோ வாய்ப்பே இல்லை. பாபுவால் சும்மாவும் இருக்க முடியாது. என்ன பண்ணலாம் என்று யோசித்தான். ஒரு ஐடியா தோன்றியது. வாளியை எடுத்து வந்தான். கூடத்தின் முற்றத்தில் கூடுவாயில் மழைத் தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது. அங்கே அந்த வாளியை வைத்தான். மழைத் தண்ணீர் ''தரதர''வென்று பெரிய சத்தத்தோடு வாளியில் விழுந்தது.

''என்னடா ஆச்சு! என்று பரபரப்புடன் கேட்டுக் கொண்டே பாட்டி வந்தாள். ஏண்டா பாபு இப்படி விஷமம் பண்றே?'' என்று கேட்டாள்.

''என்னால் சும்மா இருக்க முடியாதே பாட்டி?'' என்று திருப்பிக் கேட்டான் பாபு.

பாட்டி யோசித்தாள். ''பாபு, நான் உன் மூளைக்கு வேலை தரேன்'' பாபு அருகே வந்து அமர்ந்து கொண்டான் ஆவலாக.

''உன் நண்பன் யாருடைய பிறந்த நாளாவது உனக்குத் தெரியுமா?''

''ஓ, தெரியுமே, சொல்லவா?''

''வேண்டாம். அதை நான் கண்டு பிடிக்க சொல்றேன். பிறந்த தினத்தோட 12ஐ வைச்சுப் பெருக்கு. மாதத்தோட 31ஐ வைச்சுப் பெருக்கு. ரெண்டையும் கூட்டு. அதை மட்டும் என்னிடம் சொல்லு?''

''234 பாட்டி!''

''உன் நண்பனின் பிறந்த நாள் ஜூன் 4. சரிதானே?''

''எப்படிக் கண்டு பிடிச்சே பாட்டி?'

234-ஐ 12 ஆல் வகு. வருகின்ற மிச்சம்தான் பிறந்த மாதம். இதை வைச்சு, பிறந்த நாளைக் கண்டுபிடித் துடலாமே?''

''மீதியே வராம சரியா வகுபட்டா என்ன பண்றது?''

''அப்படியும் வரும். அப்படி வந்தால் பிறந்த மாதம், 12 ஆம் மாதம்னு வைச்சுக்கணும். அதாவது டிசம்பர்.''

''வேறு ஏதாவது ரூல் உண்டா?''

''இருக்கு. மீதியா வரும் எண்கள் எதுவா இருக்கும்? 1,2,3,4,5,6,7,8,9, 10,11 ஆகியவைதானே? இதில் ஒற்றைப் படை எண்கள் எதெல்லாம்?''

''1,3,5,7,9,11'' என்றான் பாபு.

''இதில் 6க்குக் கீழே வந்தால் ஜூ சேர்த்துக்கோ. 6க்கு மேல் வந்தால் ஜூக் கழிச்சுக்கோ.''


''புரியலையே பாட்டி?''

''மீதியா 1,3,5 வந்தால் இவைகளோட ஜூ கூட்டிக்கோ. 7,9,11 வந்தால் ஜூக் கழிச்சுக்கோ.''

''எதிர் வீட்டு சீனிக்குப் பிறந்த நாள் ஜூலை முதல் தேதி. அப்போ 1X12+7X31 என்றால் 229 வருது. இதை 12-ஆல் வகுத்தால் ஈவு 19, மீதி1. இந்த 1 உடன், ஜூ வைச்சுக் கூட்டினால் 7! ஜூலை மாதம்! சரியா வருது பாட்டி!''

''உன் குட்டித் தங்கை கோதையின் பிறந்த நாள், இந்தக் கணக்குப்படி சரியா வருதா பார்?''

''அவளுக்கு மார்ச் 2. அப்போ 2X12+3X31 என்றால் 117 வருது. இதை 12ஆல் வகுத்தால் ஈவு 9, மீதி 9. இது ஜூ விட அதிகம். அதனாலே ஜூ இதிலிருந்து கழிச்சா மீதி 3, அட! மார்ச் மாதம்! சரியா வருது பாட்டி!''



மழை சிறிது நின்றது. பாட்டியிடம் தான் கற்றுக் கொண்டதை நண்பர்களிடம் சொல்லிக் காட்டி அவர்களைத் திணறவைக்க ரெட்டை வால் பாபு வெளியே ஓடினான்!

- எஸ். நடராஜன்,
சென்னை - 8.



INDIA'S LARGEST SELLING COMICS
DIAMOND COMICS
CARTOONIST PRAN'S
CHACHA CHAUDHARY and SABU'S
50th GOLDEN JUBILEE ISSUE
CHACHA CHAUDHARY AND TRIPLE NINE
PRAN'S CHACHA CHAUDHARY AND TRIPLE NINE
FREE
Chacha Chaudhary's Magnetical Sticker (Worth Rs. 5/-)
OTHER NEW DIAMOND COMICS
FAULADI SINGH & Terror of Dr. John
Car Poster Free
SPIDERMAN- 1
Sticker Free
LAMBUMOTU & Snow Demon
DIAMOND COMICS DIGEST
MANDRAKE-11
CHACHA BHATIJA & Glass Pitcher

வேலையும் நேரமும் மிச்சம்!

முருகன் ஆலங்குடி கிராமத்தில் வசித்து வந்தான். அவனுடைய அப்பா அந்த ஊரில் தபால்நிலைய அலுவலராக இருந்தார். அவன் அந்த ஊரிலுள்ள நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் படித்து வந்தான்.

முருகன் படிப்பில் சுமார். ஆனால் படுசோம்பேறி. இரண்டு நாட்களுக்குச் செய்ய வேண்டிய வேலைகளை முன்பே செய்து விட்டு, மற்ற நாட்களை சோம்பேறியாகவே இருந்து பொழுதைக் கழிப்பான்.

''ஏண்டா, தலைக்கு இவ்வளவு எண்ணெயைத் தடவி இருக்கிறே?'' என்று கேட்டால், 'நாளைக்கும் சேர்த்து எண்ணெய் தடவி விட்டேன். நாளைக்கு எண்ணெய் தடவற வேலையும், நேரமும் மிச்சம்தானே?'' என்று பதில் சொல்வான்.

''இவ்வளவு நேரம் குளிக்கிறியே..? உடம்புக்கு ஏதாவது வந்தால் என்ன செய்வது?'' என்று கேட்டால், ''நாளைக்கும் சேர்த்துக் குளிக்கிறேன். நாளைக்கு குளிக்கிற வேலையும், நேரமும் மிச்சம்தானே?'' என்பான்.

முருகனுடைய போக்கைக் கண்டு அவனுடைய அம்மாவும், அப்பாவும் மிகவும் கவலை அடைந்தனர்.

ஒரு நாள்...

''முருகா, கடைக்குப் போய் காய் கறி வாங்கி வா'' என்றாள் அவன் அம்மா.

''அம்மா, இரண்டு நாட்களுக்கும் சேர்த்து இன்றே காய்கறி சொல்லிடு. வாங்கி வருகிறேன். நாளைக்கு என்னால் கடைக்குப் போக முடியாது'' என்றான் முருகன். வீட்டிற்கு ஒரே செல்லப் பிள்ளை. அவனை ஏதாவது சொல்லிக் கண்டித்தால், அன்று முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம்தான். சாப்பிடாது அழும்பு செய்வான். அவன் போக்கில் விட்டுத்தான் அவனைத் திருத்த முடியும் என்று ஒரு திட்டம் போட்டாள் அம்மா.

அன்று இரவு.

''முருகா, சாப்பிட வா'' என்று அழைத்தாள் அம்மா.

''இதோ வரேன்மா'' என்று சமையலறைக்குள் வந்த முருகன் ஆச்சரியமடைந்தான்.

''ஏம்மா, நாம இரண்டு பேர்தானே. ஏன் தட்டில் இத்தனை சாப்பாடு போட்டிருக்கே?'' என்று ஆவலுடன் கேட்டான் முருகன்.


''ஒண்ணுமில்லை. எல்லாமே உனக்குத்தான். நீதானே சொல்வே நாளைக்கு செய்யற வேலையையும் இன்னிக்கே செய்துட்டா, நாளைக்கு வேலையும், நேரமும் மிச்சம்னு? அதுதான் நாளைக்கும் சேர்த்து உனக்குச் சாப்பாடு போட்டிருக்கேன். சாப்பிடு. நாளைக்குச் சாப்பிட வேண்டாம். சாப்பிடற நேரமும், வேலையும் மிச்சம்'' என்று அம்மா பொறுமையாகச் சொன்னாள்.

''அம்மா, என்னை மன்னிச்சிடுங்க. அன்றைய வேலையை அன்றைக்கே செய்கிறேன். அதுதான் எனக்கும், என்னைச் சுற்றி உள்ளவங்களுக்கும் நல்லது'' என்று திருந்திய மனதுடன் சொன்னான் முருகன்.

- வி. சத்யகவி, முடிகொண்டான்.



வீட்டுக்கு ஒரு மரம்! ஊருக்கு ஒரு கௌரிசங்கர்!



ராசிபுரம் என்றதும் புகழ்பெற்ற அதன் வெண்ணெயும் கவை மணக்கும் நெய்யும்தான் நினைவுக்கு வரும். இனி இந்த இரண்டையும் தவிர கௌரிசங்கரின் நினைப்பும் வர வேண்டும்!

ராசிபுரத்தில் பிளஸ் டூ படிக்கும் மாணவன் கௌரி சங்கர், மற்ற மாணவர்களிடமிருந்து மாறுபட்டவன். அவன் ஒவ்வொரு முறையும் மூச்சை இழுத்து விடும் போதும் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பற்றி எண்ணுகிறான்; கவலை கொள்கிறான்; சூழல் மாசுபடுவதைத் தடுக்கத் தன்னால் இயன்றதைச் செய்து வருகிறான்.

இந்தப் பணியில் இவனுக்கு உதவியாக இரண்டு அமைப்புகள் உள்ளன. ஒன்று ட்ரீகிளப் (மரம் வளர்க்கும் இயக்கம்). இன்னொன்று ''என்விரான் நியூஸ்'' எனப்படும் ஒரு மாத இதழ். ட்ரீ கிளப்பின் தலைவர் வித்யாசாகர்தான் ஆங்கில மாத இதழ் ''என்விரான் நியூஸின்'' பதிப்பாளரும் கூட. கௌரி சங்கர் இந்த இதழின் ஆசிரியர்.

''மரம் நடும் இயக்கத்திற்குத் தூண்டுகோலாக இருப்பதுதான் ராசிபுரம் ட்ரீகிளப். இது கடந்த ஆண்டு ஏப்ரலில் தொடங்கப்பட்டது. இப்பொழுது 37 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆண்டுக் கட்டணமாக ரூபாய் பத்து வசூலிக்கிறோம். தற்பொழுது 14 வயதுக்கு மேற்பட்டவர்களை மட்டுமே உறுப்பினர்களாக ஏற்கிறோம் என்றா லும், தெருத் தெருவாக துணை அமைப் புகளை ஏற்படுத்தும் போது வயது வரம்பும், கட்டணமும் இல்லாமல் போய் விடும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் இதன் பணிகளில் இந்தப் பகுதி பள்ளி மாணவர்கள் எல்லோருமே பங்கு கொள்ளும்படி எங்கள் 'கிளப்' பாடு பட்டு வருகிறது'' - என்கிறார் கௌரி சங்கர்.

''ட்ரீ கிளப் தொடங்கும் நோக்கம் எப்படித் தோன்றியது?''

''எங்கள் ஊரில் வனவிலங்கு பாதுகாப்பு பற்றி ஒரு பேச்சுப் போட்டியை நடத்தினார்கள். அதில் பங்குகொள்ள,

தகவல்களைத் திரட்ட நான் பல புத்தகங்களைப் புரட்டினேன். அப்பொழுதுதான், நாமும் இதில் ஏதாவது செய்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. மனித சமுதாயத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாக்க மரங்கள் எத்தகைய மகத்தான பணிகளைச் செய்கின்றன என்பதை உணரும் வகையில் நான் ஒரு சிறு கதையையும் படித்தேன். இது என்னுடைய ஆர்வத்திற்கு உரமிட்டது. இதன் விளைவே ''ட்ரீ கிளப்''.




''இந்த ஓர் ஆண்டில் ட்ரீ கிளப் ஏதாவது சாதித்திருக்கிறதா?''

''மரம் நடுவதைத் தவிர, மரம் வளர்ப்பதின் அவசியத்தையும், சுற்றுச் சூழல் மாசுத் தடுப்பையும் மக்கள் மனதில் பதியவைக்க ஒரு கட்டுரைப் போட்டி வைத்தோம். சிறிய ஊரான ராசிபுரத்தில் நடைபெற்ற இதில் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு எங்களுக்கு உற்சாகமூட்டினார்கள். ''ட்ரீ கிளப்புக்கும் கட்டுரைப் போட்டிக்கும் என்ன சம்பந்தம்?'' என்று எங்களை முதலில் கிண்டலடித்தவர்கள் கூட திகைக்கும்படி அந்தப் போட்டி அமைந்தது. உண்ண உணவு, இருக்க வீடு என்பதைப் போல், சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்க, வீட்டுக்கு ஒரு மரம் தேவை என்ற அவசியத்தை மக்கள் மனத்தில் பதிய வைக்க இது பெரிதும் உதவியுள்ளது. இனி மரக்கன்று வளர்க்க நாங்கள் வீடு வீடாகப் போகும் போது எங்கள் பணி எளிதாக இருக்கும்.''

''உங்க பையன் உடம்பெல்லாம் காயமா இருக்கே ஏன்?''

''பரிட்சைக்கு 'விழுந்து விழுந்து' படிச்சானாம்!''

– ஆறுபாதி புகழேந்தி.



''என்விரான் நியூஸ்'' பத்திரிகை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?''

''பத்திரிகை என்றதும் பொழுதுபோக்கு அம்சங்கள் எல்லாம் நிறைந்தது என்று எண்ணி விடாதீர்கள். எங்கள் இலட்சியத்திற்கு உதவக்கூடிய ஒரு செய்திப் பத்திரிகைதான் இது. இரண்டே பக்கங்கள். ஆங்கிலத்தில் டைப் செய்து, ஜெராக்ஸ் பண்ணி வெளியிடுகிறோம். சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்க எடுக்கப்படும் உலக அளவிலான முயற்சிகள், மரம் வளர்ப்பதன் அவசியம், வனவிலங்குகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள் போன்றவை இதில் தரப்படுகின்றன. உறுப்பினர்களின் கேள்விகளுக்கும் இதில் பதில் தரப்படுகிறது. அச்சிட்டு வழங்க எங்களுக்கு வசதி இல்லை. அடக்கச் செலவே ஒரு பிரதிக்கு 67 காசு ஆகிறது. இருந்தாலும் ஓர் இலட்சியப் பத்திரிகை அல்லவா? அதனால் ஆண்டுச் சந்தாவாக ஐந்து ரூபாய் வைத்திருக்கிறோம். உள்ளூரில் 127 பேர்கள்தான் சந்தாதாரர்கள். வெளியூரிலும் ஒருசில சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் கையை விட்டுத்தான் செலவு செய்கிறோம். இந்த அதிகப்படி செலவை, சில பத்திரிகைகளுக்கு ஏஜென்சி எடுத்து ஈடுகட்டுகிறோம். போராட்டம்தான்!''

''படிக்க வேண்டிய வயதில் எதற்காக இந்த வேண்டாததையெல்லாம் இழுத்து விட்டுக் கொண்டு திரிய வேண்டும்?'' என்று சீண்டிப் பார்த்தோம்.

''இந்த மண்ணில்தான் நாம் பிறந்தோம். நமக்கு வேண்டியதை வழங்கி நம்மை உயிர் வாழ வைப்பதும் இந்த மண்தான். இதற்கு நாம் நன்றி செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் உண்மையில் நாம் அதற்குத் துரோகம் தான் செய்து கொண்டிருக்கிறோம். நம் முன்னோர்கள் நம்மைப் போல் இருந்திருந்தால், நாம் மூச்சுத் திணறி எப்போதோ மறைந்திருப்போம். இப்பொழுதாவது நாம் இந்த மண்ணைப் பற்றி; சுற்றுச் சூழலைப் பற்றி நினைக்க வேண்டும். இதன் தூய்மையைப் பாது

காக்க; சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்க நம்மால் ஆனதைச் செய்ய வேண்டும் என்ற தவிப்பு எனக்கு இருக்கிறது. ஏதாவது செய்ய வேண்டும் என்று நான் துடிக்கிறேன். இதிலே, ''ட்ரீ கிளப்பும்'', ''என்விரான் நியூசும்'' என்னுடைய தவிப்பின் உருவங்கள். என்னைப் போல் இந்த நாட்டு மக்கள் எல்லோரும் தவித்து, இந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்திற்கு வேகமளிக்க வேண்டும். சிறுவர்கள் மனத்தில் இது பதிந்து விட்டால் என் இலட்சியம் நிறைவேறி விடும். வருங்கால உலகம் அவர்களுடையதுதானே? நான் இதில் ஈடுபாடு கொண்டிருப்பதால் என் கல்வி பாதிக்கவில்லை.''

''எல்லோரும் உங்களுக்கு ஆதரவு தருகிறார்களா?''

''ட்ரீ கிளப் தலைவரும், என்விரான் நியூஸ் வெளியீட்டாளருமான வித்யாசாகர் அவர்களும், என் பெற்றோரும், எனது நண்பர்களான சத்திய மூர்த்தி, இராஜேந்திர பிரசாத், என் ஆசிரியர்களும் எனக்கு ஊக்கமளித்து வருகிறார்கள். தொடக்கத்தில் என்னைக் கேலி செய்தவர்கள் கூட இன்று மாறி வருகிறார்கள் என்பது எனக்குக் கிடைத்திருக்கும் வெற்றி அல்ல. இந்த இயக்கங்களின் நோக்கத்திற்குக் கிடைத்திருக்கும் வெற்றியே.''

கௌரிசங்கரைப் பற்றி அவனது பெற்றோரும், ஆசிரியர்களும், ஆதரவு காட்டி வரும் ட்ரீகிளப் தலைவரும், அவனது நண்பர்களும் கண்டிப்பாகப் பெருமைப்படலாம். எந்த ஒரு விளம்பரமும் ஆரவாரமும் இன்றி இவர் இதுவரை செய்துள்ள பணிகளும் இவரது இலட்சியமும் மற்றவர்களுக்கு ஒரு வழி காட்டி. பள்ளி மாணவர்களிடையே மரம் வளர்ப்பது குறித்தும், சுற்றுச்சூழல் மாசுபடுவது குறித்தும் இவரது பணிகளால் ஒரு புதிய விழிப்பு ஏற்பட்டுள்ளது. இது எல்லோருடைய உற்சாகத்தாலும், ஒத்துழைப்பாலும் நல்ல முறையில் வளர்ந்து பயனளிக்க பல்லாயிரக்கணக்கான கோகுலம் வாசகர் சார்பில் வாழ்த்துகள்!



''ஏங்க, உங்க பையன் கோயில்ல நுழைஞ்சதுமே ''பொய்'' பேசறான்.''

''அவன் கோயில்ல நுழைஞ்சதுமே ''மெய்'' மறந்திடுறான்!''

- தீ. ஜெகதீஸ்.



''ஒரு பழமொழி சொல்லு.''

''வாழைப் பழத்தில் ஊசி ஏற்றினாற்போல்...''

''வேற தெரியாதா?''

''நீங்கதானே பழமொழி சொல்லச் சொன்னீங்க!''

- வி. சுரேஷ்குமார்.



''வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு பிடிக்காத விலங்கு எது?''

'''வரி'க்குதிரை தான்!''

- குடந்தை. கவீட் ரவி.




மேஜிக் கலையையும் பள்ளிகளில் பாடமாக்க வேண்டும்! - இப்படிக் கூறுவது யார் தெரியுமா? பதினோரு வயது நிறைந்த சிறுவன் ஹரீஷ்தான்!

தெருவில் சாதாரண வித்தை காட்டி வந்து சின்னச் சின்ன மேஜிக் வித்தைகளைக் காட்டினாலே சிறுவர் கூட்டம் திரண்டு விடும். மேஜிக் ஷோ என்ற முழு நேர மாயஜால வித்தைக் காட்சியையே மேடையில் செய்து காட்டினால் எத்தனை கூட்டம் கூடும்! அதுவும் மேஜிக் ஷோவைச் செய்பவன் ஒரு சிறுவன் என்றால் கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்! அப்படித்தான் தேர், இரு நாள் கூட்டமாக சிறுவன் ஹரீஷின் மேஜிக் ஷோவுக்கு மக்கள் திரளுகிறார்கள்.

புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதை நிரூபித்துக் காட்ட வந்தவன் ஹரீஷ். ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த அவனுடைய தந்தை கோபாலும் ஒரு சிறந்த மேஜிக் கலைஞர். ஊர் ஊராக மேஜிக் ஷோ செய்து பயணம் செய்யும் போது கோபால் தமது குடும்பத்தையும் அழைத்துக் கொண்டுதான் போவார். இதனால் தந்தை மேஜிக் ஷோ செய்வதைக் குழந்தைப் பருவத்தில் இருந்தே ஹரீஷ் கூட இருந்து கவனித்து வந்திருக்கிறான். அவனுக்கும் மேஜிக் வித்தைகளில் ஈடுபாடு பிறந்தது.

மகனின் விருப்பத்திற்குத் தடை போட எண்ணாத கோபால், அவனுக்கும் சில சின்ன அயிட்டங்களைக் கற்றுக் கொடுத்து, இரண்டரை வயதில், தானே கைபிடித்து அழைத்து வந்து ஹரீஷை மேடையேற்றினார். அவன் செய்து காட்டிய அயிட்டங்களுக்கு ரசிகர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கவே, மேஜிக் கலையின் எல்லா நுணுக்



கங்களையும் கோபால் முழுமையாக அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். எட்டே வயதில் முழு நேரக் காட்சி களைத் தனியாகச் செய்து காட்டும் அளவுக்குத் திறமை பெற்றான் ஹரீஷ்!

இந்தியாவின் எல்லா முக்கிய நகரங் களிலும் ஹரீஷின் மேஜிக் ஷோ நிகழ்ச் சிகள் நடந்தன. மக்களின் பாராட்டை அள்ளிக் குவித்தன. இந்தியாவின் பிரபல முன்னணி, மேஜிக் கலைஞர் களான புரொபசர்லால், மங்கல் சீனியர், மங்கல் ஜூனியர், ஆனந்த், சர்க்கார், அசோக் பண்டாரி போன்றவர்கள் ஹரீ ஷின் மேஜிக் அயிட்டங்களைப் பார்த்து வியந்து பாராட்டியிருக்கிறார்கள். இந்தியாவின் முக்கிய நகரங்களைத் தவிர, இங்கி லாந்து, இத்தாலி போன்ற வெளிநாடுகளிலும் கூட ஹரீஷ் தனது மேஜிக் நிகழ்ச் சிகளை நடத்தி புகழ்க் கொடி நாட்டியிருக்கிறான்.


தேசிய அளவில் இவன் தனது திறமைக்காக மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றிருக்கிறான். கோப்பை, பாராட்டுப் பத் திரங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது!


ஹரீஷ், காலி டப்பா வில் இருந்து புறாக்களை வரவழைக்கிறான்! எரிக் கும் திராவகத்தில் குளிக்கி றான்! பெண்ணை அந்தரத் தில் மிதக்க வைக்கிறான்! இவை தவிர இன்னும் திகைக்க வைக்கும் எத் தனையோ அயிட்டங்கள்! புகழும் பணமும் குவியக் கேட்கவா வேண்டும்?

இவ்வளவு அற்புதத் திறமை வாய்ந்த கலை ஞனை சினிமா உலகம் மட் டும் பாராட்டாமலா இருக் கும்? சில இந்தித் திரைப் படங்களிலும், மேடைநாட கங்களிலும் கூட ஹரீஷ் நடித்து தன் திறமைகளைக் காட்டி யிருக்கிறான்.

இந்த இளைய கலைஞன் இப் பொழுது ஏழாம் வகுப்பில் படித்து வருகிறான். படிப்பிலும் சோடை யில்லை என்பதை இவன் காட்டி வரு கிறான். இந்த மாஜிக் கலைஞனின் விருப்பம் என்ன தெரியுமா? பள்ளிப் பாடங்களில் ஒன்றாக மாஜிக் கலை யையும் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும் என்பது. அரசாங்கம் இதை வரவேற்குமோ என்னவோ தெரியாது. ஆனால் நாடு முழுவதும் உள்ள தம்பி தங்கைகள் எல்லாம் கண்டிப்பாக வர வேற்பார்கள் என்பது உறுதி!

- அப்துல்





தலைகீழ் தம்புசாமி!

ஒருநாள் தலைகீழ் தம்புசாமிக்கும், அவருடைய மனைவிக்கும் தகராறு ஏற்



பட்டு, பேச்சு முற்றியதால் தம்புசாமி, மிகுந்த சினத்தோடு, அருகில் இருந்த ஒரு கம்பை எடுத்துக் கொண்டு மனைவியை அடிக்க விரைந்தார்.

அவருடைய கோபத்தைக் கண்டு பயந்த தம்புசாமியின் மனைவி, அவர் உண்மையாகவே தன்னை அடிக்கப் போகிறார் என்று அஞ்சி, அவரிடம் அகப்படாமல் வெளியே ஓடினாள்.

தம்புசாமி, ''நீ எங்கே சென்றாலும் உன்னை விட மாட்டேன். உன் இடுப்பை ஒடித்து விடுகிறேன் பார்'' என்று கத்திக் கொண்டு, கம்பை உயர்த்தியபடி மனைவியின் பின்னால் ஓடினார்.

அவர் விடாமல் துரத்தி வருவதைக் கண்டு அவர் மனைவி விரைந்து ஓடினாலும், அவரிடமிருந்து தப்பிக்க இயலாது என்று எண்ணினாள்.

மனைவியை தம்புசாமி நெருங்கிப் பிடிக்கப் போகும் சமயத்தில், அவருடைய மனைவி அருகில் இருந்த வீட்டுக்குள் நுழைந்து விடவே தம்புசாமியும் அவள் பின்னாலேயே அந்த வீட்டிற்குள் நுழைந்தார்.

அந்த வீட்டில், அன்று கல்யாண விருந்து நடக்க இருந்ததால், விருந்து சமயத்தில் தலைகீழ் தம்புசாமியின் மனைவியும், பின்னாலேயே தம்புசாமியும் நுழைந்ததைக் கண்டு அந்த வீட்டுக்காரர் திகைப்படைந்தார்.


பின்னர் விஷயத்தை அறிந்த வீட்டுக்காரர், தம்புசாமியை சமாதானம் செய்தார். பின்னர் விருந்தில் பங்குகொள்ள வைத்தார். தம்புசாமியும் மனைவியும் விருந்து உண்டனர்.

தகராறு காரணமாகச் சென்ற தம்பு சாமியும், அவர் மனைவியும் சமாதானத் தோடும், விருந்து உண்ட மகிழ்ச்சியோ டும் வீட்டுக்குத் திரும்பி வந்தனர்.

வீட்டுக்குள் வந்தவுடன் தம்புசாமி தம் மனைவியைப் பார்த்து, ''நான் இன்று சண்டை போட்டதால்தானே அறுசுவை விருந்து கிடைத்தது? இனி எங்கேயாவது கல்யாண விருந்து நடந் தால் கூறு. உன்னிடம் சண்டை போடு கிறேன். நீ ஓடு. நான் துரத்துகி றேன். இருவரும் கல்யாண வீட்டுக்குள் நுழைந்து விடுவோம்'' என்று சிரித்தார்.

- வே. பூங்குன்றன்.

ஒன்றும் கிடையாது!



ஹோஜா ஒருநாள் தலையில் சுமையைச் சுமந்து கொண்டு கடைத் தெருவில் திரிந்து கொண்டிருந்தார். வழியில் ஒருவன் வந்து, ''ஐயா! சுமை யை நான் சுமந்து வருகிறேன்; எவ்வளவு கூலி தருவீர்கள்?'' என்று கேட்டான்.

''கூலியா...? ஒன்றும் கிடையாது!'' என்று கூறி விட்டார் ஹோஜா.

''பரவாயில்லை'' என்று சொல்லி விட்டு அவரது சுமையை வலியப் பிடுங் கிச் சுமந்து கொண்டு வந்து அவர் வீட்டு வாசலில் வைத்து விட்டு, ''கூலியைக் கொடுங்கள்'' என்று கேட்டான் அந்த விடாக்கண்டன்.

''நான்தான் கூலி ஒன்றும் கிடை யாது என்றேனே?'' என்றார் ஹோஜா.

''நீங்கள் சொன்ன அந்த ஒன்றும் கிடையாததைத்தான் கொடுங்க என்று கேட்கிறேன்'' என்றான் அவன்.

''சரி; இவன் வீண் வம்பு செய்வதற் காகவே வந்திருக்கிறான்'' என்பதைப் புரிந்து கொண்ட முல்லா அவனை வீட் டுக்குள் அழைத்துப் போனார்.

அங்கே தரையில் ஜமுக்காளம் விரிக் கப்பட்டிருந்தது. கூலியாளிடம், ''ஜமுக் காளத்தை எடுத்து விட்டு அடியில் என்ன இருக்கிறது என்று கையை விட்டுப் பார்!'' என்றார் ஹோஜா.


அவனும் அது போல் ஜமுக்கா ளத்துக்கு அடியில் கையால் துழாவிப் பார்த்து விட்டு, ''ஒன்றும் கிடையாது'' என்றான்.

''நீ கேட்டது அதுதானே? எடுத்துக் கொண்டு போ!'' என்றார் ஹோஜா.

- சி. மணி, புத்தனாம்பட்டி.

கவலை இல்லா சோதிடன்!

சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய பட்டத்து ராணிக்கு உடல் நலம் குன்றியது. மருத்துவர்கள் வந்து பார்த்து, மருந்துகள் கொடுத்து சிகிச்சை செய்தனர். அரசருக்கு சோதிடத்தில் மிகுந்த நம்பிக்கை உண்டு. அரண்மனை சோதிடனை வரவழைத்து, ராணியின்



சோதிடத்தைக் கணித்துப் பார்த்தார். "முப்பது நாட்களுக்குள் ராணி இறந்து விடக்கூடும்" என்று சோதிடர் கூறினார். அரசருக்குக் கவலை அதிகரித்தது.

ராணி முப்பதாவது நாளில் சோதிடர் கூறியபடி இறந்து விட்டாள். அரசர் அள வற்ற துன்பம் அடைந்தார். சோதிடர் கூறியதாலேயே ராணி இறந்து விட்டாள் என்று அரசர் விபரீதமாக எண்ணி, கோப முற்று, சோதிடனை சிரச்சேதம் செய்யு மாறு உத்தரவிட்டார்!

சோதிடர் அரசருடைய உத்தரவைக் கேட்டுக் கலக்கமோ, கவலையோ அடையவில்லை! மிகவும் உற்சாகமா கவே இருந்தார். அதை அறிந்த அர சர் வியந்து போய், சோதிடனிடம், "உயிரை இழக்கப் போகிறாயே... உனக்கு அதனால் கவலை உண்டாக வில்லையா?" என்று கேட் டார்.

அதற்கு சோதிடர், "நீங்களே உயிர் துறக்கும் போது என் உயிர் என்ன பெரிதா? எனது கவலையெல்லாம் உங்கள் உயிரைப் பற்றித்தான். என் னைப் பற்றி எனக்குக் கவலையில்லை" என்று கூறினார்.

அரசர் திடுக்கிட்டு, "என்ன! என் உயிர் போகப் போகிறதா? எப்பொ ழுது?" என்று பதற்றமாகக் கேட்டார்.

"அரசே, நான் உயிர் துறந்த இரண் டாவது நாளில், உங்களுடைய உயிரும் போய் விடும். அதை முன்பே நான் கணித்து வைத்திருக்கிறேன். அதற்கா கவே நான் கவலைப்படுகிறேன்" என் றார் சாமர்த்தியக்கார சோதிடர். அவரை அரசர் உடனே விடுதலை செய்தார் என் பதைக் கூற வேண்டுமா?

– பண்ருட்டி பி. பாலாஜி.

அவரைக்காய் பொரியல்

என் நண்பன் ரமேஷ் இனிய தோழன். எனது பிறந்த நாளன்று அவனை அழைத்திருந்தேன். அனைவ ரும் சாப்பிட அமர்ந்தோம். அன்று எங்கள் வீட்டில் அவரைக்காய் பொரி யல். அது என் நண்பன் ரமேஷுக்கு பிடிக்காது. அவரைக்காய் அவனுக்குப் பிடிக்காது என்பது எங்களுக்கும் தெரி யாது!



அவரைக்காயைப் பார்த்தவுடன் ரமேஷின் முகம் மாறியதை நான் கவ னிக்கவில்லை. ஏதோ யோசித்து விட்டு அவரைக்காயை முதலில் சாப்பிட்டான். உடனே என் தாயார் இன்னும் சிறிது வைத்தார். வேறு வழியின்றி அதையும் சாப்பிட்டான், அவசரமாக.

'ரமேஷ்! உனக்கு அவரைக்காய்னா ரொம்பப் பிடிக்குமா?'- என்று கேட்ட படி மறுபடியும் கொஞ்சம் வைத்தார் அம்மா.

அடுத்த நாள் காலை பள்ளியில் ரமேஷிடம், "உனக்கு அவரைக்காய் பொரியல்னா ரொம்பப் பிடிக்குமா! எனக்குத் தெரியவே தெரியாதே?" என்று கேட்டேன்.

"அட! நீ வேற. அவரைக்காய்னால் எனக்கு சுத்தமா பிடிக்காது. அதனால பிடிக்காததை முதல்ல சாப்பிட்டுத் தீர்த் துடுவோம்னு சாப்பிட்டேன். அதைத் தப்பா புரிஞ்சிட்டு உங்கம்மா அதையே போட்டு அசர வைச்சிட்டாங்க. உன் பிறந்த நாள் விருந்துக்கு ஒரு கும்பிடு! போதும் சாமி!" என்றான் ரமேஷ்!

– அ. கங்காதரன், கீழப்புலியூர்.

என்ன பயன்?

கந்தன் என்று ஒரு வேலைக்காரன் இருந்தான். குளிப்பது அவனுக்கு அறவே பிடிக்காது. குளிக்கக் கூட அவன் சோம்பேறித்தனம் தடையாக இருந்தது. 'வாழைப்பழச் சோம்பேறி' பட்டத்திற் குத் தகுதியான ஆள். "ஏன்டா குளிக் கவே மாட்டேங்கறே?" என யாராவது கேட்டால், "குளித்தாலும் அதற்குப்

பின் உடல் அழுக்காகத்தானே போகி றது? வீணாய் தண்ணீரை வீணாக்க வேண்டுமா?'' என்பான். முதலாளி அறி வுரை கூறிப் பார்த்தார். எதுவும் பலிக்க வில்லை.

''ஏண்டா, செருப்பைத் துடைக் கலே?'' - முதலாளி கேட்டார்.

''துடைச்சி என்ன செய்ய? தெரு விலே போகும் போது திரும்பவும் தூசி, அழுக்கு படியத்தானே போகுது?''- தனது சோம்பேறித்தனம் ஒவ்வொன்றிற் கும் புதுப் புது விளக்கத்தை கந்தன் தந்தது முதலாளிக்கு எரிச்சலைக் கொடுத்தது. அன்று நள்ளிரவு வரை கந்தனை வீட்டில் இருக்கச் செய்தார். ''முதலாளி பசி வயிறைக் கிள்ளுது. வீட்டிற்குப் போகவா?'' என்று கந்தன் கேட்டான்.

''சாப்பிட்டு என்னடா பயன்? திரும் பவும் மூன்று மணி நேரத்தில் பசிக்கத் தானே போகிறது? வீணா எதற்குச் சாப்பிடறே?'' என்று கேட்டார் முத



லாளி. கந்தனுக்கு உடனே உறைத்தது! தன் தவறை உணர்ந்தான். சாக்கு போக்குச் சொல்வதை கந்தன் அன்று டன் விட்டு விட்டான்.

- ககாராஜ், மதுரை - 2.

கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர். கு. கணேசன்

★ சி. விஜயகுமார், விழுந்தமாவடி.

? உடற்பயிற்சிகளை காலையில் செய்வது நல்லதா? மாலையில் செய்வது நல்லதா? ஏன்?

! காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் உடற்பயிற்சிகளை செய்வது நல்ல பலனளிக்கும். அதற்குக் காரணம் அப்போதுதான் உடலுறுப்புகள் அதிக வேலையில்லாமல் ஓய்வாக இருக்கும். சைகிளைத் துடைத்து எண்ணெய் போடுகிற மாதிரி, அந்நேரத்தில் உடற்பயிற்சிகளை மேற்கொண்டால் உடலுறுப்புகளுக்கு ரத்த ஓட்டம் நன்றாகக் கிடைக்கும். இதனால் உறுப்புகளில் இருக்கும் கழிவுகள், வியர்வை, சிறுநீர், மலம் மூலம் துப்புரவாக வெளியேறிவிடும். உறுப்புகள் சுத்தமடையும். சுறுசுறுப்படையும். அதன் பிறகு பகல் முழுவதும்



நாம் செயல்படுவதற்கு புத்துணர்வும், புதுப்பொலிவும், உற்சாகமும் கொடுக்



கும். இவையெல்லாம் காலையில் உடற்பயிற்சி செய்வதால் கிடைக்கக்கூடிய நன்மைகள்.

★ ஜெ. நெடுமாறன், குடியாத்தம்.

? வெட்டுக்காயம் பட்ட இடத்தில் எருக்கம்பால் இடுகிறார்களே, இது சரியா டாக்டர்?

! தவறு, தம்பி! எருக்கம்பாலில்



இருக்கும் நச்சுப் பொருள் காயத்தில் வெளித் தெரியும் திசுக்களை அரித்துப் புண்ணாக்கும். சீழ் பிடிக்கும் காயம் பெரிதாகும். சிலருக்கு உயிருக்கு ஆபத்து தரக்கூடிய ரணஜன்னி (TETANUS) வரக்கூடும். விபரீதத்தைத் தேடிப் போவானேன்? வெட்டுக் காயத்தை ஒரு சுத்தமான துணியால் அழுத்தமாகக் கட்டுப் போட்டு, மருத்துவர் உதவியை நாடுவதே நல்லது.

★ வை. ஸ்ரீராம், அண்ணாநகர்.

? நாய்க்கு வெறி பிடிக்கக் காரணமாகும் கிருமியின் பெயர் என்ன?



! ரேப்டா வைரஸ் (Rhabdo Virus)

★ எஸ். கணபதி, என். குமார், மிதிலைப் பட்டி.
? சிறுநீர்க்கடுப்பு என்பது யாது? இதனைப் போக்க எளிய வழி முறை களைக் கூறுங்கள்.



! சிறுநீரின் அளவு குறைந்து அமிலத் தன்மைக்கு மாறும் நிலையில் தோன்றும் தொந்தரவுதான் சிறுநீர்க் கடுப்பு. இது கோடை காலத்தில் வியர்வை அதிக மாகச் சுரந்து சிறுநீர் சுரப்பு குறைந்து விடுவதால் வரக்கூடும். சாதாரண காலங் களில் நுண்ணுயிர்க் கிருமிகள் சிறுநீர்ப் பாதையில் அழற்சி உண்டாக்கினாலும், சிறுநீர்க்கல் தோன்றினாலும் சிறுநீர்க் கடுப்பு தோன்றும். காரணம் தெரிந்து மருத்துவம் பெறுவது நல்லது. எனினும் சிறுநீர்க் கடுப்பைப் போக்க கீழ்க்காணும் எளிய வழிகள் உதவும். தண்ணீர் நிறை யக் குடிக்க வேண்டும். திரவ உணவை அதிகம் சேர்க்க வேண்டும். தினமும் குறைந்தது 3 லிட்டர் அளவுக்குக் குறை யாமல் திரவ ஆகாரம் உட்கொள்ள வேண்டும். பதனீர், பார்லி, மோர், இள நீர், பழச்சாறுகள் போன்றவற்றை அதிக மாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - 1.
? பிளாஸ்டிக், ரப்பர் செருப்புகளை அணிவது உடலுக்குக் கெடுதலா, டாக்டர்?



! ரப்பர் செருப்புகளால் கெடுதல் இல்லை. பிளாஸ்டிக் செருப்புகள்தான் மிகுதல். 'கால் ஆணி', பித்தவெடிப்பு போன்ற உபாதைகள் வருவதற்கு பிளாஸ் டிக் செருப்புகள் துணை போவதால் அவற்றை அணிவது கூடாது.

★ வே. பூங்குன்றன், வடபாதிமங்கலம்.
? செயற்கை ரத்தம் உற்பத்தி செய் கிறார்களாமே, உண்மையா டாக்டர்?



! 1940 - ம் ஆண்டிலிருந்தே செயற்கை ரத்தம் தயாரிக்கும் முயற்சிகளில் மேல் நாட்டு ஆய்வாளர்கள் தீவிரமாக இருக் கிறார்கள். கடந்த சில ஆண்டுகளில் ஓரளவிற்கு வெற்றியும் பெற்றிருக்கி றார்கள். அமெரிக்காவில் மியாமி பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த



வாழ்வைத்தா!

எதிரே கண்ணில் தெரிகின்ற
இருபத்து ஒன்றாம் நூற்றாண்டே
வருக வருக நீ வருக - நம்
வையம் செழிக்க வரம் தருக!

உன்னுள் நுழையும் தலைமுறையின்
உள்ளம் முழுக்க வயலாக்கி
உலகம் எல்லாம் ஒன்றென்னும் - நல்ல
ஒருமைப் பாட்டை விளைவாக்கு!


உழைத்தே எதையும் பெற்றிடவும்
ஒசிப் பழக்கம் தவிர்த்திடவும்
உன்னுள் நுழையும் எல்லார்க்கும் - மெய்
ஊக்க சக்தி நீ வழங்கு.

அறிவின் திறத்தால் நாள்தோறும்
ஆயிரம் புதுமை செய்தாலும்
அழிவின் திசைக்கே போகாமல் - மக்கள்
ஆக்கம் காக்க ஊக்கம்தா!

வறுமை ஒழிய வளம்நிறைய
வாழும் உயிர்கள் மகிழ்ந்திருக்க
எதனைச் செய்ய வேண்டுமென - நீ
எல்லா ருக்கும் சொல்லித்தா

எதிரே கண்ணில் தெரிகின்ற
இருபத்து ஒன்றாம் நூற்றாண்டே.....
உன்னுள் நாங்கள் வரவுள்ளோம் - எமக்கு
ஒளிமய மான வாழ்வைத்தா!

- ரா. பொன்ராசன்.



ஃபிராங்க் காலன் என்பவரும் அலபாமா மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த லேலண்ட் கிளார்க் என்பவரும் கூட்டாக ஆராய்ச்சி மேற் கொண்டு ரசாயனப் பொருள்களால் ஆன 'பெர்ஃபுளோரோ கார்பன்' எனும் செயற்கை ரத்தத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இதற்கும் இயற்கை ரத்தத்திற்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. குறிப்பாக செயற்கை ரத்தத்தில் பிரிவுகள் இல்லை. பெர்ஃபுளோரோ கார்பனில் ஆக்ஸிஜன் அடங்கியுள்ளது. இதை ரத்தத்தில் செலுத்தும் போது ஆக்ஸிஜன் விடுபட்டு உடம்புக்குச் செல்கிறது. இயற்கை, ரத்தம் செய்யும் முக்கியப் பணியான 'ஆக்ஸிஜன் சப்ளை' இம்மாதிரியாக செயற்கை ரத்தம் மூலம் நடக்கிறது. இது மனித உடலில் நான்கு மணிநேரமே வேலை செய்கிறது. எனவே, செயற்கை ரத்தம் பணி செய்யும் காலத்தை அதிகமாக்க தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

☆ ☆ ☆ ☆ ☆



புதுத் துணி வேண்டாம்!

ஆர். ஆமினா பீவி

பின் இரவு முடியும் நேரம். சூரிய உதயத்திற்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருக்கும். அம்மா, இக்பாலை எழுப்பினாள். அது ரம்ஜான் நோன்புக் காலம். அதனால் அப்பாவும் அம்மாவும் முன்பே எழுந்து விட்டிருந்தார்கள்.

இக்பால் எழுந்து அவசரம் அவசரமாகக் காலைக் கடன்களை முடிக்கவும் பக்கத்து மசூதியில் இருந்து அலான் ஒலிக்கவும் சரியாக இருந்தது.

இக்பால் அமைதியாக அமர்ந்து கொண்டு புனித குரானிலிருந்து சில பகுதிகளை ஓதினான். நோன்பை இடையூறு இன்றி வெற்றிகரமாக முடிக்கத் தேவையான மன, உடல் வலிமையைத் தரும்படி வேண்டிக் கொண்டான். மணி எட்டடித்தது. பையைத் தூக்கிக் கொண்டு அம்மா - அத்தாவிடம் கூறிக் கொண்டு பள்ளிக்குக் கிளம்பினான்.

இக்பால் செல்வதையே பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்தார் அவனது அப்பா ரஹீம். இக்பால் அவரது ஒரே மகன். ரஹீம் கடுமையான உழைப்பாளி. கூலி வேலை செய்து பிழைத்து வந்தார். கஷ்டமான நிலைமைதான். இருந்தும் நேர்மையாளராக இருந்து வந்தார். தன் மகனையும் அப்படியே வளர்த்து வந்தார்.

தான்தான் கூலி வேலை செய்யும்படி ஆயிற்று, தன் மகன் இக்பாலாவது நன்கு படித்து பெரிய பதவிக்கு வரவேண்டும் என்ற நியாயமான ஆசையில், ரஹீம் இக்பாலைப் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார். உள்ளூரில் உள்ள நடுநிலைப் பள்ளியில் எட்டாவது வரை நன்கு படித்தான் இக்பால். பள்ளி நிர்வாகமே அவனுடைய திறமையைக் கண்டு, டவுனில் உள்ள தங்கள் மேநிலைப் பள்ளியில் அவனுக்கு இடம் கொடுத்து ஏற்றுக் கொண்டது. இக்பால் படிப்பில் மட்டுமல்ல, இறை பக்தியிலும் பணிவிலும் ஒழுக்கத்திலும் கூடச் சிறந்து விளங்கினான். மகனைப் பற்றி பெற்றோர்களுக்கு அளவில்லாத பெருமை.

இப்பொழுதெல்லாம் சில நாட்களாக இக்பாலைப் பற்றி அம்மாவுக்குச் சிறிது மன உளைச்சல். வழக்கம் போல் பள்ளி விட்டதும் அவன் நேராக வீட்டுக்கு வருவதில்லை. மிகவும் தாமதமாக ஒன்பது மணிக்கு மேல்தான் வருகிறான். அம்மா எப்படிக் கேட்டாலும் பிடி கொடுத்துப் பதில் கூறுவதில்லை. உழைத்து அலுத்துச் சலித்து பத்து மணிக்குமேல் வீடு திரும்பும் கணவனின் மன அமைதியைக் குலைக்க அம்மா விரும்பவில்லை. ஆனால், எத்தனை நாட்களுக்குத்தான் பொறுமையாக இருக்க முடியும்?

அன்று எதேச்சையாக சீக்கிரமே வீடு திரும்பி விட்டார் ரஹீம். நியத் (பிரார்த்தனை)தை முடித்துக் கொண்டு நோன்புக் கஞ்சியைக் குடிக்கும் போதுதான் ரஹீம் கேட்டார்.

''இக்பால் எங்கே? பெருநாள் பரிசா அவனுக்கு புது டிரஸ் வாங்க கடைக்குக் கூட்டிக்கிட்டுப் போக வந்தேன்.''

ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்த அம்மா விஷயத்தை உடைத்து விட்டாள்.


''அதையேன் கேட்கிறீங்க... நோன்பு ஆரம்பித்தது முதல் இப்படித் தான்... நீங்க ரொம்பக் கோபப்படு வீங்களேன்னு நானும் சொல்லலை.... தினமும் ஒன்பது பத்து மணிக்குத்தான் வீட்டுக்கு வர்றான். ஒவ்வொரு நாளும் அவன் நேரங்கழிச்சு வரும்போது என் மனசு படாதபாடு படறது. அதோட அவன் போக்கும் சரியில்லை. ரம்ஜான் பெருநாள் நெருங்கிடுச்சேன்னு வீடு வாசலையெல்லாம் ஒட்டடை அடிச்சி, தூசுதட்டி சுத்தம்பண்ணினப்போ இக்பா லின் பெட்டி, புத்தகப்பையையும் ஒழுங்கு பண்ணி வைச்சேன். அப்போ அவன் பையில நூறு ரூபாய்க்கு மேல பணம் வச்சிருப்பதைப் பார்த்தேன். எனக்கு ஒன்னுமே புரியலை. அது யார் காசோ, எப்படி இவன் கைக்கு வந்துச்சோ....?

''அம்மா 'ஓ' வென்று அழுதாள்.

ரஹீமின் மனமும் குழம்பிய குட்டை போலானது.

''சரி...சரி.....புலம்பாதே....அவன் வரட்டும் - பார்த்துக்கிறேன்.''

சிறிது நேரத்திற்குப்பின் மெதுவாக உள்ளே வந்தான் இக்பால். தந்தையை அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் கையில் ஐந்து, பத்து என ரூபாய் நோட்டுகள்!



''வாங்க! பணக்காரத் தம்பி... ஏது கையில இத்தினி பணம்....? ரஹீம் கேட் டார்.

இக்பால் திடுக்கிட்டான்!

''இது வந்து... வந்து... தப்பா வந்த காசு இல்லே. உண்மையா உழைச்ச காசுதான் அத்தா....!''

''என்னடா சொல்றே....? ரஹீமின் முகத்தில் ஆச்சரியக் கோடுகள் விரிந் தன.

''ரம்ஜான் சீசனாக இருப்பது எங்க ளுக்கு நல்ல வாய்ப்பா போயிடுச்சு... என் ஃப்பிரெண்டு ஷபிரும், நானும் ''சில்க் பேலஸ்'' ஜவுளிக்கடையில போய் பள்ளிகூடம் விட்டதும் இரவு ஒன்பது மணிவரைக்கும் அவங்க சொல்ற வேலைகளைச் செய்யறோம். தினமும் கையில காசு கொடுத்துடு வாங்க. அதுதான் அத்தா இந்தப் பண மெல்லாம்.''

இக்பால் தொடர்ந்தான்.

''ஷபீர் ஏழைப் பையன். நல்லவன். அத்தா இல்லை. அம்மா மட்டும்தான். அவன் தங்கைக்கு செயற்கைக் கால் வைக்க ஐநூறு ரூபாய் ஆகுமாம். அது னால நானும் ஷபீரும் அதுக்குப் பணம் சேர்க்க இப்படி ஒரு திட்டம் போட் டோம். அப்படியும் நூறு ரூபாய்க்கு மேல் குறையுது அத்தா.''





கலிபோர்னியாவில் சமீபத்தில் ஒரு வித்தியாசமான திருட்டு நடந்தது. அங்கு பார்பி பொம்மைகள் அருங்காட்சியகம் உள்ளது. இந்த வகை பொம்மைகள் அமெரிக்கக் குழந்தைகளிடம் பிரபலம். எனவே, இவைகளில் வித்தியாசமான 5000 பொம்மைகளை ஒருவர் சேகரித்து அருங்காட்சியகமாக பார்வைக்கு வைத்திருந்தார். இவற்றைச் சேகரிக்க 16 வருடங்கள் அவர் அரும்பாடுபட்டார். இந்த பொம்மைகளின் மதிப்பு சுமார் ஒரு மில்லியன் டாலர். ஆனால் - ஒரே நாள் இரவில் இவை எல்லாம் திருடப்பட்டு விட்டன! இதுவரை திருடன் கண்டுபிடிக்கப்படவில்லை. அமெரிக்கக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, இவற்றைக் காண வரும் எல்லோருக்குமே இது பெரிய இழப்பு!

- இரா. திலிப்

* * * * *



மேல்நாடுகளில் இப்பொழுது பாட்டரியினால் இயங்கக் கூடிய 'டூத் பிரஷ்' விற்பனைக்கு வந்திருக்கிறது. பல் துலக்கும் போது இதைப் பிடித்துக் கொண்டால் போதும். பிரஷ் மேலும், கீழும், பக்கவாட்டிலும் அசைந்து பற்களை நன்றாகச் சுத்தம் செய்து விடுகிறது. இந்த அறிவியல் கண்டுபிடிப்பு, மனிதனை இன்னும் அதிகச் சோம்பேறியாக ஆக்கிவிடுகிறது, இல்லையா?

- ஏ. நிஷான் ஹலீம்,
திட்டச்சேரி.

கதை, கட்டுரை, பாடல் அனுப்புவோர் தங்கள் முழு முகவரியையும் தரவேண்டும். ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய தபால்தலையை இணைத்து அனுப்பவும். அறிவியல் செய்திகளுக்கு ஆதாரங்களையும் குறிப்பிட வேண்டும்.

- ஆசிரியர்

தன் மகவின் நல்ல எண்ணத்தை நினைத்து, ரஹீம் உறைந்து போய் நின்றார்! அம்மா திகைத்துப் போய் நின்றாள். எப்படிப்பட்ட பிள்ளையை அவர்கள் சந்தேகித்து விட்டார்கள்.

''அத்தா. நான் ஒன்று சொன்னா கோவிச்சுக்க மாட்டீங்களே? எனக்கு இந்த வருஷம் பண்டிகைக்குப் புதுத் துணி வேண்டாம். அதற்கான பணத்தை என்னிடம் கொடுத்துடுங்க. ஷபீரின் தங்கைக்கு செயற்கைக் கால் வாங்க அதையும் சேர்த்துக் கொள்கிறேன். இன்னும் வேறு யாரிடமாவது கேட்டுப் பார்க்கிறேன்'' என்றான் இக்பால் அமைதியாக.

சட்டைப் பையில் இருந்து இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை எடுத்த ரஹீம், ''வேறு யாரிடமும் கேட்க வேண்டாம். நம் மூவருக்கும் பண்டிகைக்குப் புதுசு எடுக்க எங்க முதலாளியிடம் கேட்டு வாங்கிட்டு வந்த முன்பணம்தான் இது. இதையும் வைத்து ஷபீரின் தங்கைக்கு செயற் கைக் கால் வாங்கி, பெருநாள் பரிசாக கொடுத்துடு!'' என்று கொடுத்தார்.

''பையன் பசியோட இருக்கும். நோன்புக் கஞ்சியைக் குடிச்சிட்டுப் பேசுங்க'' என்று மகனைப் பெருமையோடு அணைத்துக் கொண்டு சென்றாள் அம்மா.

மேலட்டையில் : எஸ். முகமத் சுபுக்கீன்
பி. பிரவீண்குமா
வண்ணப்படம் : யோகா

இறைவனுடன்



'கையாங்' என்னும் ஒரு சீனத் துறவி தம் சிஷ்யனோடு காட்டு வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். செல்லும் வழியில் துணியை விரித்துப் போட்டு இருவரும் தொழுகை செய்ய ஆரம்பித்தனர். அப்போது, திடீரென்று சிங்கத்தின் கர்ஜனை கேட்கவே, சிஷ்யன் பயந்து ஓடிப் போய்ப் பக்கத்தில் இருந்த ஒரு மரத்தின் மீது ஏறிக் கொண்டான். அப்போதும் அவனுடைய பயம் நீங்கவில்லை.

ஆனால், குருவோ தொழுகை செய்வதை நிறுத்தாமல் கடவுள் வழிபாட்டிலேயே மூழ்கி இருந்தார். பக்கத்தில் வந்து நின்ற சிங்கத்தைக் கூட அவர் கவனிக்கவில்லை. சிங்கம் அவரை ஒன்றும் செய்யாமல் அப்பால் சென்று விட்டது.


சிங்கம் சென்றதும், சிஷ்யன் கீழே இறங்கி வர, இருவரும் காட்டை விட்டு நாட்டுக்கு வந்தார்கள்.


அப்போது ஒரு கொசு குருவின் மூக்கைக் கடிக்க, அவர் 'ஆ'வென்று கூச்சல் போட்டு அலறினார்.

அதைக் கண்ட சிஷ்யன் குருவைப் பார்த்து, ''சிங்கத்தைக் கூடப் பொருட்படுத்தாது துணிவுடன் இருந்த தாங்கள், இப்படி ஒரு சின்னக் கொசுவைப் பார்த்து இத்தனை கூச்சல் போடுகிறீர்களே?'' என்று வியப்புடன் கேட்டான்.

கையாங், ''சிங்கம் வந்த போது, நான் இறைவனோடு சேர்ந்து இருந்தேன்! இப்பொழுது மனிதனோடு அல்லவா சேர்ந்து இருக்கிறேன்!'' என்றார் புன்சிரிப்புடன்.

— புத்தனாம்பட்டி சி. மணி.





ஒவ்வொரு சிறுவர்க்கும்
ஒரு தனி இலட்சியம் இருக்கும்.
தனக்குப் பிடித்தயாராவது ஒருவரை
மனத்தில் வைத்துப்போற்றி, அவரைப்போல்
நானும் ஆக வேண்டும்என்று எண்ணாத சிறுவரே
கிடையாது. ஒவ்வொருவருக்கும்தான் எத்தனை வகை
யான இலட்சியங்கள்!உங்கள் இலட்சியமும் இவற்றுள் ஒன்றாகத்
தான் இருக்கும். இங்கு தங்கள் இலட்சியங்களையும் அதற்கான கார
ணங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்பவர்கள் முத்துராமலிங்க
புரம் கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள்.

ஆனந்தி: உலகத்தில் எந்தச் செல்வம் இருந்தாலும் என்ன வசதிகள் இருந்தாலும் உடல் ஆரோக்கியம் இல்லை என்றால் எதையும் செய்ய முடியாது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்னு' சொன்னது கூட இதை எண்ணித்தான். நோய் இல்லாத உலகம்தான் மகிழ்ச்சியான உலகம். ஒருத்தருக்கு வசதிகளோ, இலட்சிய வெறியோ இருந்தால் மட்டும் போதாது. அவற்றுக்காக உழைக்க, அளவில்லாத உடலாரோக்கியம் இருக்க வேண்டும். சுற்றுச் சூழல் நாளுக்குநாள் மாசுபட்டுக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில் வருங்கால சந்ததியர் உடலாரோக்கியம் கண்டிப்பா இன்னமும் அதிகமாகப் பாதிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் மருத்துவ சேவை செய்ய அதிக டாக்டர்கள் அவசியம் தேவைப்படுவார்கள். நம்முடைய தொழில் மற்றவர்களுடைய உடல் நோயைத் தீர்ப்பதாகவும் இருந்தால் எத்தனை மகிழ்ச்சி! அதனால் எப்படிப் பார்த்தாலும் டாக்டர் தொழில் ஒருசமுதாயப் பணின்னு நான் நினைக்கிறேன். அதனால் நான் ஒரு டாக்டராகி நோயாளிகளுக்காக உழைக்கணும் என்பதுதான் என் இலட்சியம்.




* வறட்சியையும் தாக்குப் பிடிக்கும் நெல்லு மரத்தைக் கண்டு பிடிச்சு, உணவுப் பஞ்சத்தை விரட்டறதுதான்! - பாரத்

பாரத் : கொஞ்நாள் முன்னாடி வரை நான் நல்லாப் படிச்சு டாக்டராவோ, வக்கீலாவோ இஞ்சினியராவோதான் வரணும்னு நெனச்சிக்கிட்டிருந்தேன். அதுதான் என்னோட லட்சியமா இருந்தது. ஆனா சமீபத்துல நான் எங்க கிராமத்துக்குப் போயிருந்தப்போ தாத்தாவோட வயக்காட்டுக்குப் போனேன். ஒரே வறட்சி. பயங்கரமான வறட்சி. தண்ணி இல்லாம நெற்பயிரெல்லாம் வாடிக் கருகிக் கிடந்தது. எனக்கு மனசு என்னவோ பண்ணிச்சு. நம்ம வீட்டுப் பாப்பா, குடிக்கத் தண்ணி இல்லாம அழறமாதிரி எனக்குத் தோணிச்சு. கண் கலங்கிப் போச்சு. அதே சமயம் கரையோரமா இருந்த மரங்களெல்லாம் மட்டும் வறட்சியைத் தாக்குப் புடிச்சு, பட்டுப் போகாம, வாடாம இருப்பதையும் கவனிச்சேன். எங்க தாத்தா கிட்ட சொன்னேன். செடிகளுக்கு வறட்சியைத் தாங்கிக்கிற சக்தி கிடையாது. ஆனா, மரம் அப்படி இல்லே. மழை பொய்த்தாலும் ரெண்டு மூணு வருஷம் தாக்குப் புடிக்கும்னார்! அப்போ எனக்கு ஒரு செய்தி நினைப்பு வந்தது. கோவையில இருந்த விஞ்ஞானி அமரர் ஜி.டி. நாயுடு, தன்னுடைய விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில வறட்சியையும் தாக்குப் பிடித்துக் காய்க்கும் பருத்தி மரத்தைக் கண்டு பிடித்திருக்கிறாராம்! இப்படி பருத்திச் செடியை பருத்தி மரமாக்க முடியும்னா, ஏன் நெற்பயிரை நெல் மரமாக்க முடியாது? அப்படி ஒரு நெல் மரத்தைக் கண்டு பிடிச்சா, அது வறட்சியையும் தாக்குப் பிடித்துக் காய்க்குமே? பஞ்சம்கற வார்த்தையையே அகராதியில் இருந்து எடுத்துடலாமே? சோமாலியாவில் எத்தனை குழந்தைங்க பட்டினியால் இறக்கிறாங்க? அவங்களுக்குக் கூட நாம இங்கேருந்து அரிசி அனுப்பி உதவலாமே? இதையெல்லாம் எண்ணித்தான் நான் என்னோட லட்சியத்தை மாத்திக்கிட்டேன். இப்போ என் லட்சியம், நல்லா படிச்சு, விவசாய பட்டப் படிப்பை முடிச்சு, விவசாய விஞ்ஞானியாகி, ஆராய்ச்சி பண்ணி வறட்சியையும் தாக்குப் பிடிக்

* இலக்கியம் என்பது காலத்தைக் கடந்து நின்று, மக்களுக்கு வழிகாட்டும் விளக்கு - பாண்டிச்சேரி ராஜப் பிரியா






* டாக்டராகி மற்றவங்களுக்கு உழைக்கலாம் - ஆனந்தி

கும் நெல்லு மரத்தைக் கண்டுபிடிச்சு உலகத்தில் உணவுப் பஞ்சத்தை விரட்டறது தான்!

பாலதயாளினி : எனக்கு சின்ன வயசில இருந்தே வானத்தில் பறக்கணும்னு ரொம்ப ஆசை. பறவைகள் ரெக்கையை விரிச்சு எப்படி ஜில்லுன்னு காத்தைக் கிழிச்சுக்கிட்டு, எந்தக் கவலையும் இல்லாம காத்துல மிதக்குதுங்க? அந்த மாதிரி நாமும் மிதக்க மாட்டோமான்னு எனக்கும் ரொம்ப ஆசை. விமானத்தை ஓட்டற பைலட்டுகளைப் பார்க்கும் போது, எப்படியாவது நாமும் பைலட்டாகி ஏரோப்பிளேனை ஓட்டி வானில் பறக்கணும்னு தாங்க முடியாத ஆசை வரும். நான் என்னோட ஆசையை மத்தவங்ககிட்டே சொல்லுவேன். அதெல்லாம் ஆம்பளைங்க பண்றது. பெண்களால் முடியாதுன்னு சொல்லி, என் ஆசைக்குத் தடை போடுவாங்க. ஆனா இப்போ நிலைமை நல்லா மாறிப் போச்சு. ஆண்களுக்கு நாங்கள் இளைத்தவர்கள் இல்லைன்னு, பெண்களும் பைலட்டாக இருக்கிறாங்க. இது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. நம்மாலும் பைலட்டாக முடியும்னு எனக்கு நம்பிக்கை வந்திருக்கு. முயன்றால் முடியாததும் இருக்கா? கண் பார்வை இல்லாத, காது கேட்காத ஹெலன் கெல்லர் அம்மா, எப்படிப்பட்ட சாதனையைப் பண்ணியிருக்காங்க? எனக்கு அவநம்பிக்கை எற்படும் போதெல்லாம் ஹெலன் கெல்லரின் கதையைப் படிச்சு, எனக்கு நானே புது நம்பிக்கை ஊட்டிப்பேன். என் இலட்சியம் பைலட்டாகி வானில் பறப்பது. நெருக்கடி நிலைகளில் நமது விமானப்படையில் சேர்ந்து நமது தாய் நாட்டுக்குத் தொண்டு செய்வதுதான்.



* நாம் ஆரம்பிச்சா மத்தவங்களும் வந்து சேர்ந்துப்பாங்க. - சபரிமலையான்

சபரிமலையான் : எங்க ஊரு கல்லூரணி. பத்தாம் வகுப்புப் படிக்கிறேன். மத்தவங்களுக்கு உதவி செய்யறதுதான் என்னுடைய லட்சியம். நான் பெரிய படிப்புப் படிச்சு, எந்தப் பெரிய வேலைக்குப் போனாலும் கூட என்னால் முடிஞ்ச உதவியை மத்தவங்களுக்குச் செய்யணும்கறதுதான் என்னோட

லட்சியம். இப்பக்கூட நான் அப்பப்போ என்னால் ஆன சின்ன உதவிகளை மத்த வங்களுக்குச் செஞ்சிக்கிட்டுத்தான் இருக்கேன். அதனால் சில்லரைந் தொந் தரவு கூட எனக்கு ஏற்பட்டிருக்கு. இவன் தலையில்தான் உலகமே ஓடுதாக்கும்னு கூட நண்பர்கள் கேலி பேசியிருக்காங்க. நான் இதையெல்லாம் பெரிசா நினைக் கிறதே இல்லே. மத்தவங்க என்ன எண் ணுவாங்க. நம்மைப் பாராட்டுவாங் களா, இல்லே, இகழ்வாங்களான்னு கூட நான் நினைக்கிறதில்லை. எனக்கு செய்யணும்னு தோணினா செஞ்சிடு வேன்.

சமீபத்துல எங்க பக்கமெல்லாம் எந்த வருஷமும் இல்லாம திடீர்னு பேய் மழை கொட்டிச்சு. ஏரி குளம் எல்லாம் உடைப்பெடுத்து, ஊரே வெள்ளக் காடாப் போச்சு. நீங்க கூட பேப்பர்ல படிச்சிருப்பீங்களே. எங்க ஊர் கல்லூ ரணியில ஒரு பெரிய குளம் இருக்கு. அதை எங்க பக்கத்துல ஊரணிம்பாங்க.



* ஓவியம்தான் எல்லாக் கலைகளுக்கும் தாய் - பாலாஜி.

பகல் முழுக்க அன்னிக்கி மழை பேஞ் சதா? எனக்கு உடனே ஊருணி நினைப்பு தான் வந்தது. அதுல தண்ணி தளும்பி நிறைஞ்சிருந்தது. மேலும் மேலும்



* அவநம்பிக்கை ஏற்படும் போதெல்லாம் ஹெலன் கெல்லரின் கதையைப் படிப்பேன். - பாலதயாளினி

மழை பலக்கும் போல இருந்தது எனக் குக் கவலையைத் தந்தது. கரையில கசிவு ஏற்பட்டு, கரை இளகிக் கரைஞ்சால் ஊருக்குள் வெள்ளம் புகுந்துடுமேன்னு எனக்கு பயம் புடிச்சுக்கிச்சு. எனக்கு நினைவு தெரிஞ்சு, ஊரணி இப்படி நிறைஞ்சு தளும்பியது கிடையாது. அத னால், அது உடைப்பெடுக்கும்னு யாருக் குமே தோணியிருக்காது'' நான் மண் வெட்டியையும் கூடையையும் எடுத்துக் கிட்டு அந்தக் கொட்டற மழையில் ஊரணிக் கரைக்குப் போனேன். மனசுல பயமாத்தான் இருந்தது. ஊருல எல்லாரும் நிம்மதியா இழுத்துப் போர்த்தித் தூங்கும் போது நாம மட் டும் இப்படி ஒண்டி ஆளா, தனியாப் போறோமே. இது தேவைதா னான்னு கூட எண்ணினேன். ஆனா, நாம்ப செய்யற காரியம் நம்ம ஊரின் பொது நன்மைக்காக என்ற எண்ணம் எனக் குத் துணிவையும், தெம்பையும் தந்தது. நான் போய், கரையில் ஏற்பட் டிருந்த கசிவையெல்லாம் அடைக்க, மண் அள்ளிப் போட்டு கெட்டிச்சேன். நான் செய்யறதைப் பார்த்து மத்தவங் களும் வந்து சேர்ந்து கொண்டாங்க. ஊரணி உடையாம தப்பிச்சது. ஊரும் வெள்ள அபாயத்தில் இருந்து தப்பியது. நல்ல காரியங்களை யாராவது ஆரம் பிச்சா, மத்தவங்களும் வந்து கலந்துப்


பாங்க. அதனால் ஆரம்பிக்கிறது நாமாவே இருக்கலாமேங்கறதுதான் என் லட்சியம்.

பாண்டீஸ்வரி ராஜப் பிரியா : எனக்கு இலக்கியம்னா ரொம்பப் பிடிக்கும். ஒரு கதையையோ, பாடலையோ, நாடகத் தையோ, நாவலையோ சுவைக்கத் தெரிந்து விட்டால் மனதுக்கு அதைவிட மகிழ்ச்சியளிப்பது எதுவும் இருக்காது. குடும்பச் சூழ்நிலை, பகையுணர்ச்சி போன்ற எல்லாவற்றையும் இது மறக்கச் செய்யக் கூடியது. இலக்கிய நயத்தை அனுபவிக்கத் தெரிந்தவர்களுக்கே இவ் வளவு பெருமை என்றால், இலக்கி யம் படைப்பவர்களுக்கு எத்தனை பெருமை? சங்க காலத்திலும், பின்னால் ஆண்ட மன்னர்கள் காலத்திலும் புலவர் களுக்கு எத்தனை செல்வாக்கு இருந்தது என்பதை நாம் படிக்கிறோமே. தவறு செய்த அரசனையே கூடத் தட்டிக் கேட்க வும், போர்க்களத்தில் சண்டையை நிறுத்தச் சொல்லவும், பஞ்ச காலத்தில் வரியை நீக்கவும் நமது புலவர்கள் மன்னர்களுக்கு ஆலோசனை வழங்கும் அளவுக்கு அவர்கள் பெருமை பெற் றிருந்தார்களே? அதோடு, இலக்கியம் என்பது காலத்தைக் கடந்து நின்று, மக்க ளுக்கு வழிகாட்டும் விளக்கு. இன் றைக்கு நாம் எதிர் நோக்கும் பல பிரச் னைகளுக்கு, திருக்குறளும் மற்ற அற நூல்களும் இன்னும் நமக்கு வழிகாட் டும் அளவுக்குப் பெருமையோடு இருக் கின்றனவே. இதையெல்லாம் பார்க்கும் போது ஒரு ஔவையாராக, திருவள் ளுவராக, கவிமணியாக, பாரதியாராக, கல்கியாக மாபெரும் இலக்கியப் படைப்பாளியாக முடியா விட்டாலும் சமுதாயத்திற்குத் தேவையான கருத் துக்களை எழுத்தின் மூலம் வழங்கும் ஒரு இலக்கியவாதியாக ஆக வேண்டும் என்றே நானும் எண்ணுகிறேன். இதுவே எனது இலட்சியம்.

பாலாஜி : எனக்கு ஓவியம் வரை யறதுன்னா ரொம்பவும் ஆசை. போன வருஷம் கோகுலம் சிறுவர் சங்க விழா வில் நான் வரைஞ்ச ஓவியங்களைக் கொண்டு போய்க் காட்டினேன். எல் லோரும் அசந்துட்டாங்க. நான் படிக்கிற அருப்புக்கோட்டை ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் கூட என் நண்பர் களும் ஆசிரியர்களும் என்னுடைய ஓவி யங்களைப் பார்த்துப் பாராட்டியிருக் காங்க. எங்க வீட்டுல வரவேற்பு அறை யில் நான் வரைஞ்ச ஆளுயர சார்லி சாப் ளின் படத்தை மாட்டி வைச்சிருக்காங்க. வரவங்க எல்லோரும் அதைப் பார்த்து ஒரு வார்த்தையாவது புகழ்ச்சியா சொல் லாம போக மாட்டாங்க. இதெல்லாம் எனக்கு 'டானிக்' குடிச்ச மாதிரி ஊக்க மளிக்கும் என்றாலும், இன்னொரு பக்கம் கூச்சமா இருக்கும். பெரியவனா னதும் என் லட்சியம் நல்ல ஓவியனாக வளர வேண்டும் என்பதுதான். ஏன்னா, ஓவியம் தான் எல்லாக் கலைகளுக்கும் தாய்னு நான் உறுதியா நினைக்கிறேன். இப்போ வேணும்னா இது எனக்குப் பொழுது போக்கு. கல்வி முடிஞ்சதும் என் இலட்சியம் ஓவியக் கலைஞனாக வேண்டும்கறதுதான். இப்படி ஒரு இலட்சிய ஆர்வத்தை நான் சின்ன வய தில் இருந்தே எனக்குள் வளர்த்துக் கொண்டிருக்கிறேன். பெற்றோர், உற வினர், ஆசிரியர்கள், நண்பர்கள் எல் லோரும் இந்த ஆர்வத்திற்கு அடிக்கடி உரமிட்டு என்னைத் தட்டிக் கொடுக் கிறார்கள். அதனால் நான் ரவிவர்மா, மணியம் போல் ஒரு வருங்கால ஓவியன். வருங்காலத்தில் பார்த்துக் கொண்டே இருங்கள். கோகுலத்திற்குக் கூட நான் படம் போடப்போகிறேன்.

பேட்டி, படங்கள் : முத்துராம லிங்கபுரம் கோகுலம் சிறுவர் சங்கம் சார்பில் மு. பாலசுப்ரமணியன், ஜி.கே. பாண்டி.

"பரீட்சை ஆரம்பிச்சு பத்து நிமிஷத் துக்குள் கூடுதல் விடைத்தாளா கேட் கிறே! என்னடா பண்ணினே?"



எப்படிக் காப்பீர்? - போட்டி



மேலே பாருங்கள். எலியும், ஆடும், கோழிக் குஞ்சும் தங்கள் பகைவர்களிடமிருந்து காத்துக் கொள்ளத் துடிக்கின்றன. இவைகளை இவற்றின் பகைவரிடமிருந்து காக்கக் கூடிய சக்தி உங்களிடம் இருக்கிறது. நீங்கள் மனம் வைத்தால், வளைக்காது மூன்று கோடுகளைப் போட்டு இவைகளைப் பிரித்துப் பாதுகாக்கலாம். எங்கே பார்க்கலாம் உங்கள் திறமையை! பரிசு உண்டு. கூப்பனுடன் அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. அனுப்ப வேண்டிய முகவரி : ஆசிரியர், கோகுலம், 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.

எப்படிக் காப்பீர்? - போட்டி

பெயர் : ....

வயது : ....

முகவரி : ....

....

....

பின்கோடு : ....

முடிவு தேதி : 15.4.93

''கோடைக் காலம் வரப் போகிறது. கோடையில் நீங்களெல் லாம் என்னைத் தேடி ஓடி வருவீர்கள். என்னைக் கண்டதும் எவ்வளவு உற் சாகம், சந்தோஷம்?

நான் பிறந்த கதை உங்களுக்குத் தெரியுமா? அது என்னை விட மிகவும் சுவையானது.

''ஸெட்டி ஜான்ஸன்'' வேண்டு மென்றே என்னைத் தயாரிக்கவில்லை. ஏதோ ஏற்பட்ட தவறுதல்களால்தான் தற்செயலாக நான் தயாரானேன். ஆனால் பாவம் ஸெட்டி ஜான்ஸன் குற்றவாளியாகக் கருதப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டாள்!

கேட்க அதிசயமாக இருக்கிறது இல் லையா? ஆம் இது 180 ஆண்டுகளுக்கு



நான்தான் ஐஸ்கிரீம்!

முன் அமெரிக்காவில் நடந்த உண்மை நிகழ்ச்சி. அப்போது ஜேம்ஸ் மேடிசன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். (1807 - 1817) இந்தக் காலத்தைப் போலவே அப்போதும் ஜனாதிபதி அடிக்கடி வி.ஐ.பிக்களுக்கு பெரிய, பெரிய விருந்துகள் கொடுப்பது வழக்கம்.

வழக்கப்படி ஒரு நாள் வெள்ளை மாளிகையில் பெரிய விருந்து ஒன்றுக்கு



ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. ஜனாதிபதியின் மனைவியான டாலி மேடிசனின் மேற்பார்வையில் ஏற்பாடு கள் தடபுடலாக நடந்து கொண்டிருந் தன. ஆனால் என்ன காரணத்தாலோ விருந்து தடைப்பட்டு நின்று விட்டது.

எல்லோருக்கும் ஏமாற்றம். விருந் துக்காக பட்ட பாடெல்லாமே வீணா யிற்று. வெள்ளை மாளிகையில் சமையல் செய்து வந்தவள் ஒரு நீக்ரோ பெண்மணி. அவள் பெயர்தான் ஸெட்டி ஜான்ஸன். தான் அரும்பாடு பட்டுத் தயாரித்த பண்டங்கள் எல்லாம் கெடாமல் இருக்க வேண்டும் என்ற துடிப்பில் அவற்றையெல்லாம் ஐஸ் பெட்டியில் தூக்கி வைத்தாள் அவள். அப்படி அவள் வைத்தது வேறு யாருக் கும் தெரியாது. ஏன் ஜான்ஸனே கூட சில நாட்களில் அதை மறந்து விட்டாள். ஆனால் சில நாட்களுக்குள்ளேயே திரும்பவும் அவசர விருந்து ஒன்றுக்கு ஏற்பாடாயிற்று. பெட்டிகளில் வைத்த தின்பண்டங்களைப் பற்றிய விஷயம் அப்போதுதான் அவளுக்கு நினைவு வந்தது. அவற்றை எடுத்துப் பார்த்தாள். தின்பண்டங்கள் இறுகிப் போயிருந்தன. அப்படி இறுகியவற்றை விருந்தாளி களுக்கு எப்படிப் பரிமாறுவது என்று முதலில் சற்றுத் தயங்கினாலும் கடைசி யில் வேறு வழியில்லாததால் அவற் றையே உபயோகிக்க முடிவு செய்தாள். பரிமாறினாள். விருந்தாளிகள் அவற் றைப் பார்த்துச் சற்றுத் தயங்கினார்கள். அவை அவர்களுக்குப் புதுமையாகத் தோன்றின. பயமாகவும் இருந்தது. ஆனால் ஒருவர் மட்டும் துணிந்து ஒரு தின்பண்டத்தை விண்டு வாயில் போட் டுக்கொண்டார். அது பனிக்கட்டி போல் குளிர்ந்து பற்களைக் கூச வைத்தது. உடனே அவர் பயந்துபோய் அதன்

ருசியைக் கூடக் கவனிக்காமல் ''விஷம்! விஷம்!'' என அலறினார்!

அதற்கு அப்புறம் கேட்க வேண்டுமா? கூட்டத்தில் ஒரே குழப்பம். ஸெட்டி அருகேயே நின்று இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தாள். அடுத்த கணமே ஸெட்டியைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். வந்தவர்கள் அனைவரும் ஒரு பொருளையும் தொடாமல் எழுந்து போய் விட்டார்கள்.

மிக மகிழ்ச்சியுடன் ஆரம்பித்த இவ்விருந்து துன்பத்துடன் முடிந்தது கண்டு ஸ்ரீமதி டாலி மேடிசன் மிகவும் வருந்தினாள். ஸெட்டியின் தயாரிப்பில் குற்றம் குறை இருக்கவே இருக்காது என்று அவள் உறுதியாக நம்பினாள். அப்படியானால் விஷம் எப்படி வந்திருக்கும்? அவளுக்கும் புரியவில்லை. உண்மையை ஆராய முடிவெடுத்து பலகாரங்களைத் தானே சுவைத்துப் பார்த்தாள்!

வாயில் சுவைத்த அந்தப் பலகாரத்தின் இனிப்பை அவளால் அளவிடவே முடியவில்லை. அவ்வளவு இனிய பண்டத்தை அவள் எப்பொழுதுமே ருசித்ததில்லை. பிறகு இன்னும் கொஞ்சம் தின்றாள். ஆற, அமர மறுபடி தின்று பார்த்தபோது அதன் ருசி இன்னும் அதிகரித்தது. அதோடு அவள் சாகவும் இல்லை! எனவே அது விஷம் கலந்தது அல்ல! ஆனால் இந்தப் புதிய ருசிக்கும் உறைந்த தின்பண்டங்களுக்கும் பழக்கப்படாதவிருந்தாளிகள் பயந்து விட்டார்கள் என்பதை டாலி மேடிசன் உணர்ந்தாள். முதல் வேலையாக ஸெட்டி ஜான்ஸனைச் சிறையிலிருந்து விடுவித்தாள். சிறையிலிருந்து திரும்பிய ஜான்ஸனுக்கு தான் செய்த குற்றம் என்ன என்பது விளங்கவில்லை. உண்மையில் அவன் ஏதாவது குற்றம் செய்திருந்தால் அவனுக்குத் தெரியாதா? இப்படித் தன்னை அறியாமலேயே (ஐஸ்கிரீம்) ஆகிய என்னைத் தற்செயலாகக் கண்டுபிடித்து விட்டாள். அது முதல் அமெரிக்கா முழுவதும் ஓராண்டுக்குள்ளாகவே என் புகழ் பரவி விட்டது. அங்கிருந்துதான் உலகெங்கும் பரவியது. இந்தக் கோடையில் நீங்கள் தான் என்னை (ஐஸ்கிரீம்) அதிகம் சாப்பிட்டு மகிழப்போகிறீர்களே?!



– அ. முஸ்தாபா, தக்கோலம்



து''பாய்''க்கு எதிர்ப்பதம் என்ன?


து''கோர்ள்''.

– பி.எஸ். மணிமாறன்

''ஏண்டா நகத்தை வெட்டாமல் நீளமா வளர்த்திருக்கே...?''

''எல்லா கேள்விக்கும் Finger Tip ஸ்ல பதில் இருக்குடா...! நகத்தை வெட்டிட்டா என்ன ஆகும்...?

– சீர்காழி வி. ரேவதி



இதோ வந்தேன்!



ஒரு ஊரில் வயதானவன் ஒருவன் இருந்தான். ஆதரவுக்கு யாரும் இல்லாமல் அவன் மட்டுமே தனியாக ஒரு குடிசையில் வசித்து வந்தான்.

தினமும் அவன் காட்டுக்குப் போய் விறகு வெட்டி, தலையில் சுமந்து வந்து, சந்தையில் விற்று அதைக் கொண்டு ஜீவிப்பது வழக்கம்.

அவனுக்கு உடல் தளர்ந்து, தள்ளாட்டம் ஏற்பட்டது. ஆனாலும் பிழைப்பு காரணமாக அவனால் உழைப்பை நிறுத்த முடியவில்லை. வழக்கம் போல் ஒருநாள் அவன் காட்டுக்குச் சென்று விறகு வெட்டி சுமந்து கொண்டு வரும் போது, களைப்பாக இருந்தது. சுமையை இறக்கி வைத்து விட்டு, நிழலுக்காக மரத்தின் மீது அமர்ந்து ''வயதாகி விட்டது; உடலூரம் தள்ளாடுகிறது. இன்னும் எவ்வளவுக் காலத்துக்கு இப்படிக்கஷ்டப்படுவது? அந்தப் பாழாய்ப் போன எமன் வந்து என்னைக் கூட்டிக் கொண்டு போ என்றால் போக மாட்டேங்கறானே?'' என்று கூறிக் கொண்டே கண் அயர்ந்தான் கிழவன்.

உடனே ஒருவன் வந்து கிழவனைத் தட்டி எழுப்பினான்.


''நீ யார்?'' என்றான் கிழவன்.

''சற்று முன் என்னைக் கூப்பிட்டாயே! நான்தான் எமன்! இதோ வந்தேன்! வா போகலாம்'' என்றான்.

கிழவன் பதறிப்போய், ''அட நீ நல்ல ஆளப்பா! நான் ஏதோ அசதியில் சொன்னேன். அதற்காகவா நீ வேலை மெனக்கெட்டு வந்தாய்! இந்த விறகுக் கட்டைத் தூக்கி என் தலையில் வைத்து விட்டு, நீ போய்ச் சேர்'' என்றான்.

- மேலப்பாதி நாகராஜ்





பெரிய தப்பு!

சோபனாவுக்குப் பூமாரி மேல் தான் சந்தேகம்.

வீடு முழுவதும் தேடிப் பார்த்து விட்டாள், பேனாவைக் காணவில்லை. அம்மாவிடம் கேட்க பயம்.

தங்கையிடம், ''பேனாவை பார்த்தியா? அம்மாட்ட சொல்லிடாதே. இன்னைக்கி மட்டும் உன் பேனாவைக் கொடு. சாயந்திரம் வந்து அம்மாட்ட பேனா தொலைஞ்சி போனதைச் சொல்லி, புதுப் பேனா வாங்கிக் கிடுறேன். சாயந்திரம் வரை இந்தப் பால் பாய்ன்ட் பேனாவால் எழுது'' என்று ஒரு பேனாவைத் தந்து கெஞ்சினாள் சோபனா.

அக்கா அழுகிற மாதிரி சொல்லுகிற போது தங்கை அனுவால் கேட்காமலிருக்க முடியுமா? 'சரி' என்று தலையை ஆட்டினாள்.

பூமாரி வீடு எதிர் வரிசையில் வலப் பக்கம் ஐந்தாவது வீடு.

அவளிடம் போய் 'நேற்று எங்க டீ.வி.யிலே சினிமா பார்க்க வந்தியே, என் பேனாவை எடுத்தாயா?' என்றால் அவங்க அம்மா சண்டைக்கே வந்து விடுவாள். 'நாங்க பத்துப் பாத்திரம் தேய்ச்சி, பொய் புரட்டு திருட்டு இல்லாம உழைச்சிப் பிழைக்கிற சனங்க. திருடினியான்னு இங்க கேக்கவா வந்தே' என்று பிலுபிலுவென்று பிடித்து நார்நாராகக் கிழித்து விடுவாள்!

ஆனாலும் சோபனாவுக்குப் பூமாரி மேல்தான் சந்தேகம்!

பூமாரியின் அம்மாவைப் பற்றி சோபனாவின் தாயார் அடிக்கடி சொல்வாள் : 'அவ கை நீளம். மாசக் கடைசிலே அரிசியில கொஞ்சம், பருப்பில கொஞ்சம்னு என் கண்ணிலே மண்ணைத் தூவிட்டு எடுத்துட்டுப் போயிடுவா' என்று.

பூமாரி வேறு பள்ளியில் படித்தாள். உடன் படித்தாலாவது அவள் தன் பேனாவை வைத்து எழுதுகிறாளா என்று பார்த்து விடலாம்.


சோபனா, தொலைந்து விட்ட பேனாவை நினைத்துக் கொண்டே பள்ளிக்குப் போனாள். பள்ளியிலும் அதே நினைவுதான்.

மேத்ஸ் மிஸ் கூட, ''என்னடி, பேக்கு மாதிரி முழிக்கிறே? இந்த ஸிம்பிள் சம் கூடவா விளங்கலை?'' என்ற செல்லமாக முதுகில் தட்டி விட்டு, கடைசி ஸ்டெப்பிலிருந்த பிழையைத் தன் சிவப்பு மையால் சரிசெய்து காட்டி விட்டு அடுத்த மாணவி சுதாவிடம் நகர்ந்தார்.

அப்போதும் சோபனாவின் எண்ணம் தொலைந்து போன பேனாவைத் தேடியே ஓடியது.

'நேற்று டீ.வி.யிலே சினிமா பார்க்க யார் யார் வந்தாங்க? பக்கத்து வீட்டு ஷீலா - அவ என் ஃபிரண்ட். பேனாவைத் தொட மாட்டா. ம்... சித்தப்பா

அழகி



மகன் ரமேஷ் வந்திருந்தான். அவன் நாலு பேனா வச்சிட்டிருக்கிறதா பெருமை பீத்திக்கிடுவான். அப்புறம்... எத்தனையோ பேர். அதிலே பூமாரி...'

பூமாரி நேற்று வந்த காட்சி மனக் கண்ணில் படம் போலிருந்தது. அழகான பூப் போட்ட சட்டை, பாவாடை! அம்மா கூட சோபனாவுக்கு இத்தனை அருமையானதை வாங்கித் தர மாட்டாள். எதைக் கேட்டாலும் அப்பா இறந்த பிறகு இதெல்லாம் வாங்க முடியுமா? இதெல்லாம் எதற்கு வீண் செலவு?'' என்பாள்.

சாதாரண வீட்டு வேலை செய்யும் வேலைக்காரியாக இருந்து கொண்டு இத்தனை குறைந்த வருமானத்தில் எப்படி பூமாரிக்கு மட்டும் அவள் அம்மாவால் இப்படி நல்ல டிரெஸ் வாங்கிக் கொடுக்க முடிகிறது! அதிலே பூமாரி கம்பீரமாக வேற நடை நடந்து வருகிறாள் - சோபனாவுக்கு ஏனோ எரிச்சல்!

'பூமாரிதான் எடுத்திருப்பாள். அதை எப்படிக் கண்டுபிடிக்கிறது? தொலைந்ததைக் கண்டுபிடிக்கிறது இருக்கட்டும், நாளைக்குப் பேனா வேண்டுமே! அம்மாவிடம் சாயந்திரம் என்ன சொல்லி எப்படிப் புதுப் பேனா ஒன்றை வாங்குவது?

'இங்கே கிளாசிலே ஒவ்வொருத்தியும் எத்தனை பேனா வைத்திருக்கிறார்கள்! எத்தனை விலை உயர்ந்த பேனாக்கள்! என்னென்ன நிறத்தில்! என்னென்ன மாதிரியில்! ம்... அவளுக்கும் அப்பா இருந்திருந்தால்...?'

பள்ளியை விட்டுத் திரும்பிய சோபனா எப்படி அம்மாவிடம் பேனாவைப் பற்றிய பேச்சை ஆரம்பிப்பது என்று தயங்கினாள். போன மாதம்தான் ஒன்றைத் தொலைத்து விட்டிருந்தாள். மறுபடி இப்பக் கேட்டால் என்ன பூசை நடக்குமோ என்று அவள் கலங்கிக் கொண்டிருந்த போது பக்கத்து வீட்டிலிருந்து, சித்தப்பாவின் பெருங்குரல் கேட்டது. திடுக்கிட்டுப் போனாள் சோபனா.

தரதரவென்று ரமேஷை இழுத்துக் கொண்டு அவர்கள் வீட்டுக்குள் வந்த சித்தப்பா, ''சோபனா! இது உன் பேனா தானே? பார்!'' என்று கேட்டார்.

அதைப் பார்த்து வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாள் சோபனா.

''ஆமா சித்தப்பா, என்னோடது தான். தேடிக்கிட்டே இருந்தேன்'' என்றாள் அவள்.

அப்போது அம்மா அடுக்களையிலிருந்து வந்தாள் : ''என்ன?''

''என்னவா? இந்தச் சனியனுக்கு நான் எத்தனை பேனா வாங்கித் தந்திருக்கேன்? கேட்ட உடனே கிடைக்கும். இருந்தும் திருடற புத்தி விடலே! சோபனாவோடதைத் தூக்கிட்டு வந்து நிற்கிறான்! கேட்டா விழிக்கிறான், ''ஏதுடா பேனா?'ன்னு ரெண்டு அறை வச்சேன். அப்புறம்தான் சொல்றான் 'அக்கா பேனா'ன்னு.'' - சித்தப்பா மறுபடி அடியைத் தொடரக் கை ஓங்கினார்.

''அதனால் என்ன, வச்சிக்கிடட்டுமே. பிரியப்பட்டு எடுத்துட்டுப் போயிருப்பான் அடிக்காதீங்க!'' என்றாள் அம்மா.

''அதுக்குத் தேவை என்ன? எடுத்துட்டுப் போய் சேகரிக்கிறதுக்கு இது என்ன ஸ்டாம்புகளா! பறவை இறகுகளா! பணம் போட்டு வாங்குவதை இப்படி எடுத்துட்டுப் போயிட்டா தப்பில்லே? மத்தவங்க என்ன நினைப்பாங்க?''

பேனாவை சோபனாவிடம் கொடுத்து விட்டு ரமேஷை இழுத்துக் கொண்டு வெளியே போனார் சித்தப்பா.


சோபனாவுக்கு ரமேஷைப் பார்க்கப் பாவமாகவும் இருந்தது. கோபமாகவும் இருந்தது!


சித்தப்பா கீழ்ப்படியை விட்டு அப்போதுதான் இறங்கியிருப்பார்; பூமாரி வாசல் ஏறி வீட்டுக்குள் வந்து கொண்டே, ''சோபனா! உன் டிக்ஷனரி கொஞ்சம் வேணும், தர்றியா?'' என்று கேட்டாள்.

பூமாரியிடம் எதுவும் பேசாமல் உடனே டிக்ஷனரியைக் கொடுத்து அனுப்பி விட்டு, தன் சின்ன டயரியில் சோபனா இப்படி எழுதினாள் :

''நாம விரும்புகிறவர்கள் தப்பே செய்ய மாட்டார்கள் என்றும், நாம் வெறுப்பவர்களே தப்புச் செய்வார்கள் என்றும் நினைப்பது பெரிய தப்பு! மகா பாவம்!''

★




நீ ஒரு 'டைவ்' அடிச்சா நான் இந்த வாழைப் பழம் தருவேன்!
சபாஷ்டா! ரங்கா! இந்தா பழம்!
பலே! பலே! சூப்பர்டா ராமா!

மன்னித்து விடுங்கள்!

கைலாஸ்



'மெஹ்மான் சராய்' என்று அரபு நாட்டினர் அழைக்கும் பயண விடுதிகள் நம் ஊர் அன்னதான சத்திரங்களைப் போன்றவை. வழிப்போக்கர்கள் அங்கு தங்கலாம். அளிக்கப்படும் அருமையான உணவை உண்டு, விருந்தோம்பலை ஏற்று அங்கேயே இளைப்பாறலாம்.

பாக்தாத் மன்னர் ஹரூன் அல் ரஷீத் அவர்களின் பொன்னான ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட பல தர்மசத்திரங்கள் நாடெங்கிலும் அவரால் ஏற்படுத்தப்பட்டு மிகச் சிறப்பாக மக்களுக்குத் தொண்டு செய்து வந்தன.

அவற்றில் ஒன்று, ஒன்றே ஒன்று மட்டும் மிகவும் மோசமான முறையில் நடத்தப்படுவதாக அரசர் கேள்விப்பட்டார். தீர விசாரித்தறிய வேண்டுமல்லவா! அதன் பொருட்டு அவர் தன்னுடைய வாஸீரோடு (அமைச்சர்) ஒருநாள் மாறுவேடத்தில் அந்தச் சத்திரத்திற்குச் சென்றார். அவர் சென்ற நேரம் அங்கு பகல் உணவு பரிமாறப்பட இருந்தது. அரசரும் அமைச்சரும் மற்ற முஸாஃபிர்களோடு (வழிப்போக்கர்கள்) சாப்பிட உட்கார்ந்தனர்.

சாப்பாடு பரிமாறப்பட்டது. ஆனால், அது சாப்பாடாகவா இருந்தது!

உண்பவர்கள் அனைவரது முகங்களையும் கவனமாகப் பார்த்தார் அரசர். அவற்றில் அவர் கண்ட வேதனையின் சாயல் மன்னருடைய கோபத்தைக் கிளறியது.

இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசியை வரவழைத்து சத்திரங்களுக்கு அவர் வழங்கி வருவது எதற்காக! வழிப்போக்கர்கள் வயிறார உணவருந்த வேண்டும். அவருடைய நாட்டையும் நாட்டு மக்களையும் மனதார வாழ்த்தி விட்டுச் செல்ல வேண்டும் என்பதற்காக அல்லவா!

அதில் இப்படிப் பாலைவன மணல் கலந்திருந்தால் எப்படிச் சாப்பிட முடியும், யாரால் பசியாற சுவைத்து உண்ண முடியும்!

''அரசே! இந்தச் சத்திரத்து அதிகாரியைக் கைது செய்து தண்டிக்க வேண்டியதுதான். தாங்கள் அனுமதி அளித்தால் அதை உடனே நிறைவேற்றுகிறேன், செய்யட்டுமா!'' என்று அரசர் காதுகளுக்கு மட்டும் கேட்கும் அளவில் மெதுவான குரலில் வினவினார் அமைச்சர்.

''கலப்படத்திற்கு என்ன தண்டனை அமைச்சரே?'' என மெதுவாகக் கேட்டார் அரசரும்.

''நூறு தினார் அபராதம் விதிப்பது.''

''இவ்வளவுதானா!''

அரசர் மெல்லத் தலையசைத்தார். ''அபராதத் தொகைக்குக் கலங்கக் கூடியவன் அல்ல இந்தக் கயவன். இப்படிக் கலப்படம் செய்து மக்களையும் நம்மை


யும் இந்தச் சந்திரந்து அதிகாரி ஏமாற்றுவதன் மூலம் அவனுக்கு ஒவ்வொரு நாளுமே நூறு தினார்களுக்கும் கூடுதலாகவே கிடைக்கும். நம்மாலும், ஒரு நாளைப் போல இவ்வாறு சோதனை செய்வது என்பதும் இயலாத செயலாகும். பத்துநாள்சம்பாதிப்பதில்இருந்து, ஒருநாள் அபராதம் கட்டி விட்டுப் போவோமே என்று இந்த அயோக்கியனும் துணிந்து செயல்படுவான். இதைத் தடுக்க வேண்டுமானால் வெறும் அபராதம் விதிக்கக் கூடாது. வேறு ஏதாவது தான் ஒருவழி கண்டுபிடிக்க வேண்டும்.''



அரசரும் அமைச்சரும் வந்த சுவடு தெரியாது அரண்மனையைச் சென்றடைந்தனர். தீவிரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

மறுநாள் சத்திரத்தின் அதிகாரி கைது செய்யப்பட்டு ஹாரூன் அல் ரஷீத் அவர்களின் சமூகத்திற்குக் கொண்டு வரப்பட்டார்.

அரசரையும் அமைச்சரையும் கண்டதுமே அதிகாரிக்குத் தன்னுடைய கதி என்னவாகும் என்பது தெரிந்து விட்டது.



ஆனால், அவரோ அதைப் பற்றிச் சற்றும் கவலைப் பட்டதாகவே தெரியவில்லை. நூறு தினார் அபராதம் கட்டினால் போயிற்று, என்ற மிதப்பில் அவர் இருப்பதை அவரது முகபாவத்தைக் கண்டே மன்னர் புரிந்து கொண்டு விட்டார்.

மன்னர் தனக்குள் மெல்ல நகைத்துக் கொண்டார். ''அதிகாரியே! நீர் செய்த குற்றம் என்ன என்பதை அறிவீர்களல்லவா?''

''கலப்படம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறேன், மன்னர்பெருமானே. ஏதோ அறியாமல் செய்து

விட்டேன். இம்முறை தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்.'' போலியான பணிவுடன் அவன் கூறிய ஒப்புதல் வாக்குமூலம் அரசரை மேலும் சீண்டியது. ஆனால் பொறுமையாக மீண்டும் அவர் புன்னகைத்தார்.

''அதிகாரியே! நீர் கலப்படம் செய்திருந்தால்தான் பரவாயில்லையே. அது வெகு சாதாரணமான குற்றந்தானே!''

அதிகாரி திடுக்குற்றார்.

''உங்களைக் கைது செய்து வரவழைத்திருப்பது கலப்படக் குற்றத்திற்காக அல்ல. மாபெரும் தேசத் துரோகக் குற்றத்திற்காக!''

''அரசே!'' என விழி பிதுங்க, மெய் நடுங்கக் கூவினார் அந்த அதிகாரி.

''என்ன துணிவு உங்களுக்கு? வெளிநாட்டு வணிகர்கள் மூலமாகவும் வழிப்போக்கர்கள் மூலமாகவும் இந்தத் தாய்த் திரு நாட்டின் மண்ணையே அல்லவா உணவோடு கொடுத்துக் கடத்தும்படி நீர் செய்து வருகிறீர்? என் நாட்டையே அவர்கள் சாப்பிட அல்லவா நீங்கள் உதவி வருகிறீர்கள்!''

அதிகாரி அரண்டு போய் மண்டியிட்டுத் தரையோடு தரையாக வணங்கிப் பணிந்தார். தேசத் துரோகக் குற்றத்திற்கு மரண தண்டனை என்ற நினைப்பு அவரை நடுங்க வைத்தது.

மன்னர் இப்பொழுது கனலைக் கக்கினார்.

''இது இரண்டாவது குற்றம். இறைவனை மட்டுமே இப்படித் தரையோடு பணிந்து வணங்க வேண்டும் என்பதை மீறி சாதாரண மானிடனான என்னை இந்த விதமாக வணங்குவது மன்னிக்க முடியாத ஒன்று!''

''அரசே அரசே! என்னை மன்னித்து விடுங்கள். எனக்குப் புத்தி வந்தது. இனி இவ்வாறெல்லாம் ஒருநாளும் செய்யவே மாட்டேன்,'' என்று வியாபாரி நடுநடுங்கிப் பதறிக் கெஞ்சினார்.

''எழுந்திருங்கள்,'' என அரசர் கட்டளையிட்டதும் அதிகாரி எழுந்து கை கட்டி வாய் பொத்தி நின்றார். ஆனாலும் உடல் நடுக்கம் தீரவில்லை! ''இம்முறை முதல் முறையானபடியால் உம்மை நான் மன்னித்தேன், போங்கள்'' என மன்னர் கூறியதும், அதிகாரி தப்பித்தேன் பிழைத்தேன் என்று ஒரே ஓட்டமாக ஓடி விட்டார்.

''அரசே! அவரை வேலையை விட்டே நீக்கி இருக்கலாம்!'' எனக் கூறினார் அமைச்சர்.

''அமைச்சரே! அதைவிட இதுவே உசிதமானது. திருடன் எனத் தெரிந்து விட்ட ஒருவனைத் திருடாமல் பார்த்துக் கொள்வது, புதிதாக வரும் ஒருவனைத் திருடனா இல்லையா எனக் கண்டுபிடிப்பதை விடவும் எளிது,'' என மன்னர் சிரித்துக் கொண்டே கூறினார்.

நிறம் மாறும் மோனிகா!

ஷூக்கள் தயாரிப்பதில் புதுமை படைத்துவரும் 'ஆக்ஷன் ஷூஸ்' நிறுவனம், இன்னொரு புதுமையான ஷூவை இப்பொழுது அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பெயர் மோனிகா!



இந்தப் புதுமை ஷூ சிறுமியர்க்கென்றே தயாரானது. இதை அணிந்து கொண்டு நடந்தால், மனத்தை மகிழ்விக்கும் இனிய மணம் பரவும்! இதில் அமைந்துள்ள கண்கவர் வண்ணப் பூவேலைகள், வெயிலில் நடக்கும் போது தானாகவே வானவில்லின் வண்ணங்களாக நிறம் மாறி, பார்ப்பவர்களைத் திகைக்க வைக்கும்! ஏற்கெனவே விற்பனைக்கு வந்துவிட்ட மோனிகா வெகுவிரைவில் சிறுமியர் உள்ளங்களில், இல்லை இல்லை, கால்களில் இடம் பிடிக்கப் போவது நிச்சயம்!

விடுதலை!

ராவுத்தர் என்பவர் பெரிய ஒட்டகப் பண்ணை ஒன்றை வைத்து நடத்தி வந்தார். அவரது பண்ணையில் இருந்து வீடு போய்ச் சேர வேண்டுமானால் நடுவில் இருக்கும் பெரிய பாலைவனத்தைக் கடக்க வேண்டும். வழக்கம் போல அன்றும் சூரியன் உதயம் ஆகியதும் வேலைக்காரர்களிடம் பண்ணையைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவரும் அவர் மகன் அப் துல்லும் இரண்டு ஒட்டகங்களில் வீட்டுக்குப் புறப் பட்டனர்.


இரண்டு ஒட்டகங்களில் முதலாவது ஒட்டகம் முத லாளியிடம் மிகுந்த விசுவாசம் உடையது. இரண்டா வது ஒட்டகம் ஏதோ கடமைக்காக உழைப்பது. தப் பிக்க வாய்ப்பை எதிர் பார்த்திருந்தது. முதலாம் ஒட்ட கத்திடம் இரண்டாம் ஒட்டகம் சொன்னது: ''தம்பி நீயும் நானும் தப்பிக்க வேண்டுமானால் அருமையான வாய்ப்பு இப்போ கிடைத்திருக்கிறது. நடுப் பாலை வனத்தில் உள்ள சுனையருகில் ஒரு ஈச்சமரம் இருக்கு.



அங்கு இவர்கள் இளைப்பாறுவார்கள். உடனே நாம் அவர்களை அங்கேயே விட்டுவிட்டு ஓடிவிடலாம். நமக்கு விடுதலை! பண்ணையில் அடைபட வேண்டிய அவசியமில்லை. சுதந்திரமாகத் திரியலாம்'' என்றது.

அதற்கு முதலாம் ஒட்டகம், ''அண்ணா, அவர்கள் நம்மை வளர்த்தவர்கள். அவர்களைப் பாலைவனத்தில் விட்டு விட்டு ஓடினால், பெரும் பாவம். அவர்கள் மிகவும் அவதிக்குள்ளாவார்கள். இது நன்றி கெட்ட செயல்'' எனக் கூறியது. ஆனால் இரண்டாம் ஒட்டகம் இதைக் கேட்கவில்லை.

நடுப்பாலைவனத்தில் சுனையருகில் இளைப் பாற இறங்கியதும் இரண்டாவது ஒட் டகம் அங்கிருந்தி ஓடிப் போயிற்று. முதல் ஒட்டகம் அங் கேயே நின்று, அது வும் இளைப்பாறி விட்டு, எஜமானரை யும் அவர் மகனை யும் ஏற்றிக் கொண்டு புறப் பட்டது. அதன்



நன்றி உணர்வைக் கண்டு எஜமானும் அவர் மகனும் மனம் நெகிழ்ந்து போயினர்.

இரண்டாம் ஒட்டகம் சுதந்திரமாக ஓடி ஒரு ஈச்ச மர அடியில் உள்ள சுனையில் நீரைக் குடித்து விட்டு இன்பமாக மனம் போன போக்கில் திரிந்தது. முதலாம் ஒட்டகத்தைப் பிழைக்கத் தெரியாத ஜென்மம் என தனக்குள் வசை பாடியது!

பிறகு அது அங்கிருந்து ஆடியபடி சென்ற போதுதான் ஒரு பெரிய ஆபத்தைக் கவனித்தது! அங்கே ஒரு கழுதைப் புலி அதைப் பார்த்து உருமியபடி துரத்தியது! ஒட்டகம் முழுவேகத்துடன் ஓடத் தொடங்கியது. ஆனால், கழுதைப்புலி அதை விட்டால் வேறு உணவு கிடைக்காது என்ற உணர்வில், அதைவிட மிக வேகமாகத் துரத்த ஆரம்பித்தது. இதனால் ஒட்டகம் பீதியடைந்து மரண பயத்தால் தலைதெறிக்க ஓடியது! எதிரே எஜமானும் அவர் மகனும் முதலாம் ஒட்டகமும் வருவதைக் கண்ட பின்தான் இரண்டாம் ஒட்டகத்திற்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது. அவர்களிடம் ஓடி கழுதைப்புலி துரத்துவதைக் கூறியது.

எஜமானர் தன் கைத்துப்பாக்கியைத் தயாராக எடுத்து வைத்துக் கொண்டார். கழுதைப் புலியை சுட்டுக் கொன்றார்.

இரண்டாம் ஒட்டகம் தன் தவறை உணர்ந்து எஜமானரிடமும், அப்துலிடமும், ஒட்டக நண்பனிடமும் மன்னிப்புக் கேட்டது. அவர்களும் அதை மன்னித்து பழைபடி தங்களுடன் சேர்த்துக் கொண்டனர்.

''நன்றி மறக்கக்கூடாது என்ற பாடத்தைக் கற்றுக் கொண்டு விட்டேன்'' என்று ஒட்டக நண்பனிடம் மனம் நெகிழ்ந்து கூறியது ஓடிப் போன ஒட்டகம்! நண்பனின் மனதைத் திருத்திய ஆண்டவனுக்கு நன்றி கூறியது முதலாம் ஒட்டகம்!

- எஸ். பாபுராஜ்.

ஏனோ?



இரண்டு கைகள் மனிதருக்கெல்லாம்
இருப்பதும் ஏனோதான்?
ஒரு கை யாலே உணவை அள்ளி
உண்டிட உழைக்கத்தான்!

இரண்டிரண் டாகக் கால்கள் கூட
இருப்பதும் ஏனோதான்?
விரும்பிய வாறே இருகை வீசி
விரைவாய் நடக்கத்தான்!

கருவிழி கொண்டு கண்களி ரண்டும்
இருப்பதும் ஏனோதான்?
இருபுறப் பொருளும் மறைந்து படாமல்
நிறைவாய்ப் பார்க்கத்தான்!

துவாரம் இரண்டு மூக்கிற்குள்ளே
துலங்குதல் ஏனோதான்?
சுவாசம் உள்ளும் வெளியும் போய்வரச்
சுகமாய் வாழத்தான்!

காதுகள் கூட இரண்டாய் நமக்குக்
காணுதல் ஏனோதான்?
வீதியில், வீட்டில் கேட்கும் குரலின்
வேற்றுமை அறியத்தான்!

ஒரே ஒரு நாக்கு ஒவ்வொரு வருக்கும்
இருப்பதும் ஏனோதான்?
நிறையப் பேசி வீணாய்க் காலம்
நீட்டா திருக்கத்தான்!

வயிறும் கூட ஒன்றே ஒன்றாய்
வாய்த்ததும் ஏனோதான்?
உயிர் வாழ் வதற்குப் போதிய அளவே
உணவை உண்ணத்தான்!


வாயும் ஒன்றே ஒருவர்க்கென்று
வைத்ததும் ஏனோதான்?
வாயால் வம்புகள் வரவொட் டாமல்
மறித்தே நிறுத்தத்தான்!

- புவனை கலைச்செழியன்

கண்ணனுக்கு இணையான வீரன்

கதை: ஆனந்தி


படம்: லலிதா




ஆனால்...
ஐயோ! என் மகனே! இத்தனை சீக்கிரம் என்னை விட்டுப் பிரிஞ்சு போயிட்டயே!
இது என்ன அக்கிரமம்...!
நான் ஒரு பாவமும் பண்ணவில்லையே! ராஜாக்கள் தர்மம் தவறுவதால்தான் நாட்டில் குழந்தைகள் இப்படி இறந்து போகின்றன போலும்!
பிராமணர் அரண்மனைக்குச் செல்ல...
பிரபோ! ஒரு பிராமணர் சபித்துக் கொண்டே வருகிறார்...
அவரைத் தடுக்க வேண்டாம்.. அவர் குறையைக் கேட்போம்...
பிராமணர் சபைக்குள் நுழைந்து...
உன் ஆட்சியில் என்னுடைய ஒன்பது குழந்தைகளும் இறந்து விட்டன. என் மனைவிக்கும் எனக்கும் யார் ஆறுதல் கூறுவார்கள்?
கிருஷ்ணர் எழுந்து போய்விட...
இரக்கமில்லாத கல்நெஞ்சன்!
போதும் நிறுத்துங்கள்! கிருஷ்ணர் சார்பில் நான் வாக்களிக்கிறேன். உங்களுக்குப் பிறக்கும் அந்தக் குழந்தையைக் காப்பாற்றித் தருகிறேன்.



பதில் சொல்லாமல் போய்விட்ட கிருஷ்ணனாலேயே முடியாததை நீ சாதிக்கப் போறியாக்கும்...!
எமனே நேரில் வந்தாலும் உங்கள் குழந்தையை நெருங்க முடியாது!
காப்பாற்றித் தர முடியாமல் போனால், அக்னிப் பிரவேசம் செய்வாயா?
அப்படியே சபதம் செய்கிறேன்!
சில காலம் சென்று...
லலிதா! உனக்குக் குழந்தை பிறக்கும் நேரம் நெருங்கி விட்டது. உன் கணவரிடம் அர்ஜுன மகாராஜாவை அழைத்து வரச் சொல்லு!
அர்ஜுனனுக்கு அவர் சபதத்தை நினைவூட்ட வேண்டிய தருணம் வந்து விட்டது...!
இதோ, நானே போகிறேன்!
அர்ஜுனனை அணுகி...
அர்ஜுனா! என்னை நினைவிருக்கிறதா?
எப்படி மறக்க முடியும்?




பேசிக் கொண்டிருக்க நேரமில்லை; சீக்கிரம் புறப்படு...
என்னுடைய தேர் சித்தமாக இருக்கிறது...
இருவரும் துவாரகையை அடைய...
உங்கள் வீட்டைச் சுற்றி அம்புக் கோட்டை கட்டு- -கிறேன்.
இதற்குள் ஒரு எறும்பு கூட நுழைய முடியாது!
எதற்கும் நீயும் காவலிரு!
என்னை மீறி எமதூதர்கள் நுழைந்து விட முடியுமா என்ன? குழந்தை பத்திரமாக இருக்கும்; கவலை வேண்டாம்!
பிராமணர் நம்பிக்கையுடன் வீடு சென்றார்... ஆனால்...
ஐயோ, பிறந்த குழந்தையைக் காணவில்லையே! மோசம் போனோமே!
ஆ!!!



பிராமணர் ஓடி வந்து...
அர்ஜுனா, உன்னை நம்பினேனே, என்னைக் கைவிட்டு விட்டாயே!
அர்ஜுனன் வீட்டுக்குள் வந்து பார்த்து...
என்ன அதிசயம்! எமன் உயிரைத் தான் பறிப்பான்; உடலையும் காணோம் என்கிறீர்களே!
ஐயோ, குழந்தை மாயமாய் மறைந்து விட்டதே! என்ன செய்வேன்!
சே! நீயும் ஒரு வீரனா!
இது என்ன மாயா ஜாலம்?
பெயரைப் பார், பெயரை! விஜயன்! ஹூம்! ஒரு குழந்தையைக் காப்பாற்ற முடியலை!
சுவாமி! என் சபதம் பொய்க்காது! நான்...
நீ நெருப்பில் விழுந்தால் என்ன, நீரில் மூழ்கினால் என்ன? என் குழந்தையா வரப் போகிறது!...


... போ ! நன்றாய்ச் சாப்பிட்டுக் கொண்டு சௌக்கியமாய் இரு !
பதற்றம் வேண்டாம்! குழந்தை எப்படி மறைந்தது என்று கண்டு பிடித்துக் கொண்டு வருகிறேன்.
எமலோகம் சென்றான் அர்ஜுனன்...
வா, அர்ஜுனா, சௌக்கியமா? பார்த்து நாளாயிற்று...
எனக்குத் தெரியாமல் பிராமண-ருடைய குழந்தையைத் திருடிக் கொண்டு வந்து விட்டீர்களே! அப்புறம் குசலம் விசாரிப்பது என்ன வேண்டிக் கிடக்கிறது!
உனக்கென்ன கோபம்? யாரைக் காணவில்லை ?
குழந்தையைக் காணவில்லை என்றால் எம லோகத்தையே அழித்து விடுவேன்!
எமன் சித்ரகுப்தனை அழைத்து...
துவாரகையிலிருந்து ஒரு குழந்தையைக் கொண்டு வந்தீர்களா?
இல்லையே!



கோபப்பட்டதற்கு மன்னித்து விடுங்கள். குழந்தையைக் காப்பாற்றாவிட்டால், அக்னிப் பிரவேசம் செய்வதாய்ச் சபதம் செய்திருக்கிறேன்...
அடடா, இப்படிச் செய்யலாமா நீ! என்ன பயங்கர சபதம்!
அர்ஜுனன் தேவலோகத்தை அடைந்து, இந்திரனிடம்...
நான் ஒரு சிசுவைத் தேடி வந்திருக்கிறேன். உங்களுக்குத் தெரியுமா, குழந்தை எங்கிருக்கிறது என்று?
நிதானம் காட்டு அர்ஜுனா!
அர்ஜுனன் அமைதி அடைந்து விவரமாகக் கூற...
ஒரு குழந்தைக்காக பிராணத் தியாகம் செய்வதாகக் கூடச் சபதம் செய்திருக்கிறாயே. உன்னைப் பற்றி நான் மிகவும் பெருமைப் படுகிறேன்...!
பெருமைப் படுவது இருக்கட்டும்; குழந்தை எங்கே?
அதை அறிந்திருக்கக் கூடியவர், உன் நண்பர் கிருஷ்ணர் தான்! மாயாவி ஆயிற்றே!
அர்ஜுனன் பூவுலகம் திரும்பினான்...
அன்று அந்தப் பிராமணர் அழுத போது எழுந்து போய் விட்ட கிருஷ்ணனா, இப்போ எனக்கு உதவப் போகிறார்... ஹும்!


அர்ஜுனன் தீக்குளிக்கத் தயாரானான்...
உம்... என் போதாத காலம் இப்படி ஆயிற்று. சபதத்தை நான் நிறைவேற்றியே தீருவேன்!
கிருஷ்ணர் தோன்றி...
அர்ஜுனா! என்ன அசட்டுத்தனம் இது? உன் ஆருயிர் நண்பனான என்னிடம் கூடச் சொல்லாமல்...
போதும், போதும்! என்னை விடு...
...அவமானத்தைத் தாங்கிக் கொண்டு என்னால் உயிர் வாழ முடியாது. எல்லாவற்றுக்கும் மாயாவியான நீதான் காரணம்!
உனக்குத் தெரிந்ததை தானே வேண்டும்... சரி... புறப்படு!
இருவரும் தேர் ஏறி...
ரதசாரதி, தாருகனே! நட்சத்திர மண்டலங்களைக் கடந்து ரதத்தைச் செலுத்து!
எங்கே போகிறோம்?
ஒரு பாலகனைத் தேடி இத்தனை நட்சத்திர மண்டலங்களைத் தாண்டிப் போகணுமா?
பொறுமையாய் இரு!


ரதம் சென்ற பாதையில் கனாந்த-காரம் சூழ்ந்தது...
ஐயா! குதிரைகள் மிரள்கின்றன...
கிருஷ்ணா இந்த இருட்டில் எனக்கே மனம் பதைக்கிறது!
கிருஷ்ணர் சுதர்சனத்தை ஏவினார்...
இருட்டில் வழிகாட்டி அருள வேண்டும்!
ஒளி சிந்திய சுதர்சன சக்கரம் வழிகாட்ட...
லோகாலோக பர்வதத்தின் மேற்கே வந்து விட்டோம்!
அதோ பார்!
ஆ...வைகுண்டம்!
பாற்கடலின் மீது நடந்து சென்றனர்...
லக்ஷ்மி காந்த! ஜெய ஜெய!
ஹரி நாராயண ஜெய ஜெய!



பள்ளி கொண்ட பெருமாள் எழுந்து அமர்ந்து...
கேசவா! பாண்டவா வாருங்கள்!
தேவாதி தேவா! அர்ஜுனனை ரொம்பவும் சோதித்து விட்டீர்கள்!
அர்ஜுனா! பத்துக் குழந்தைகளும் இங்கே பத்திரமாகத்தான் இருக்கிறார்கள். அழைத்துப் போ!
இந்தக் குழந்தைகள் எனக்கு எப்பேர்ப்பட்ட பாக்கியத்தை அளித்தார்கள்! தங்களைத் தரிசிக்கும் வாய்ப்பு!
அர்ஜுனன், குழந்தைகளிடம்...
கிளம்புங்கள், போகலாம்!
நாங்க வர மாட்டோம்!
மகாவிஷ்ணு...
கிருஷ்ணனும் நானும் ஒருவரே! இவருடன் போய் பூவுலகில் உங்கள் தாய், தந்தையரை சில காலம் மகிழ்வித்து விட்டுப் பிறகு இங்கேயே வரலாம்!
சரி!


பூஜையில்...
எனக்கு நம்பிக்கை போய் விட்டது...!
அர்ஜுனனாவது, குழந்தையைத் திரும்பக் கொண்டு வருவதாவது?
இந்தத் துக்கத்தை இன்னும் அதிக காலம் என்னால் தாங்க முடியாது! அர்ஜுனனுக்குப் பதில் நான் தீக்குளித்து விடுகிறேன்!
பொறுமையாக இரு!
மறுநாள் காலை...
பிராமணரே! விஜயன் தன் வாக்கைக் காப்பாற்றி விட்டான். இதோ குழந்தைகள்.
அட என் செல்வங்களா!
அர்ஜுனா! ஒன்றுக்குப் பத்தாக எல்லாக் குழந்தைகளையும் கொண்டு வந்து சேர்த்து விட்டாயே!
எல்லாம் கண்ணன் அருள்!
கேசவா! என்னை மன்னித்து விடு!
அட, இது என்ன? எதற்கு மன்னிப்பு?



* இட்டிராரிச்ச மேனன் என்ற கவி, கதகளி நாடகமாக இயற்றிய பாகவதக் கதை.



11. சதாவதானி

பரதன் கண்டுபிடித்த இரகசியம் என்ன என்பதை அறிந்து கொள்ளும் முன்பே அவன் நண்பர்கள் மகிழ்ச்சி யடைந்தார்கள். என்ன இரகசியம் என்பதை பரதனே கூறுவான் என்று ஆவலோடு எதிர்பார்த்தனர்.

பரதன் தன்னிடமிருந்த நோட்டின் அச்சாகாத பகுதியைக் காட்டினான்.

''நண்பர்களே, இந்தப் பக்கம் எதுவும் இல்லை.''

பரதன் இப்போது அச்சான பகுதியைக் காட்டினான்.

''இந்தப் பக்கம் ஏதோ இருக்க வேண்டும். இந்தப் பக்கத்தில் உள்ள படம், எழுத்து எல்லாம், மற்ற எல்லா நூறு ரூபாய் நோட்டிலும் இருக்கும். இந்த நோட்டுக்கு மட்டும் தனிச் சிறப்பாக இருப்பது இந்த நோட்டின் எண் தான். இந்த எண்ணை உற்றுப் பாருங்கள்.''

பரதன் காட்டிய நோட்டின் எண்ணை அவர்கள் உற்றுப் பார்த்தார்கள்.

7MB 042695

இந்த எண்ணில் என்ன இரகசியம் இருக்கிறது என்பது நண்பர்கள் மூவருக்கும் தெரியவில்லை.

பரதன் பேசினான்.

''இந்த எண்களில்தான் இரகசியம் இருக்கிறது. இந்த எண்ணைக் கொஞ்சம் உற்றுப் பாருங்கள்.

மூவரும் உற்றுப் பார்த்தனர்.

பிறகு 'ஒன்றும் புரியவில்லையே!' என்னும் குறிப்புத் தோன்ற உதட்டைப் பிதுக்கினர்.

''இதில் உள்ள ஆறைச் சரியாகப் பாருங்கள்.''

அவர்கள் பார்த்தனர்.

''இது திருத்தப்பட்ட எண். ஜீரோவின் மேலே கோடு இழுத்து ஆறாக்கியிருக்கிறார்கள்'' என்றான், ஞானம்.

''கரெக்ட். 042695 என்னும் எண்ணைக் குறித்துக் கொள்ள இந்த ஒரு பக்கம் அச்சான தாளை எடுத்திருப்பார்கள். தற்செயலாக இதில் 042095 என்னும் எண் இருப்பதைப் பார்த்திருப்பார்கள். உடனே இரண்டாவது ஜீரோவை எளிதாக ஆறாகத் திருத்தி எடுத்து வைத்துக் கொண்டார்கள். அதைத் தொலைத்து விட்டு, இந்த எண் தெரியாமல் தவித்திருக்கிறார்கள். இந்த நோட்டு என்னிடம் இருப்பது தெரிந்தால், நோட்டைத் தேடி என் வீட்டுக்கே வந்து விட்டார்கள்.''

பரதனின் யூகம் மற்றவர்களை வியக்க வைத்தது.

''பரதா, நீ எழுத்தாளனாக வேண்டும் என்று விரும்பினாயே. உனக்கு அந்தத் தகுதி இருக்கிறது. திருத்தப்பட்ட

ஒரு எண்ணுக்கு ஒரு கதையையே சொல்லி விட்டாயே?'' என்று பாராட்டி னான், ஞானம்.

''ஞானம், யூகங்கள் கூட உண்மை யாகக் கூடியவையே! பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளே கூட யூகத்தை அடிப் படையாகக் கொண்டவையே!. எனது யூகம் கள்ள நோட்டுக் கள்ளனைக் கண்டுபிடிக்க உதவினால் சரி.''

''பரதா, நீ சொன்னபடியே நடந்தது என்று வைத்துக் கொள்வோம். இது என்ன எண்? லாக்கர் எண்ணா? லாட்டரி சீட் எண்ணா? பின்கோடா?''

''அதைத்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்'' என்று பரதன் சொன்னான்.

''பரதா, அந்த அதிசயப் புருவத் தினர் நான் பார்த்த அந்த நேரத்துக் குள்ளேயே பல கடைகளில் போன் செய் தார்கள். எங்கும் அதிக நேரம் பேசிய தாகத் தெரியவில்லை. ஒருவேளை இது போன் நம்பரோ? இதைத் தவற விட்டு விட்டு, தமக்குத் தோன்றிய எண்களை எல்லாம் அழைத்துப் பார்த்திருப்பார் களோ?''

விக்டர் சொன்னதும், ''பலே விக் டர்! உனது யூகமும் நன்றாகவே இருக் கிறது. இந்த அதிசயப் புருவத்தினர் போனில் என்ன பேசினார்கள் என்பது உன் காதில் விழுந்ததா?'' என்று கேட் டான், பரதன்.

''இரண்டு முறை வெகு அருகி லிருந்து கேட்டேன். போனில், 'சதாவ தானி இருக்கிறாரா?' என்று கேட்டு விட்டு, உடனே ரிசீவரை வைத்து விட் டார்கள்.''

''இரண்டு முறையும் அவர்கள் சதாவதானி இருக்கிறாரா என்றுதான் கேட்டார்களா?''

''ஆமாம்''

பரதன் சிறிது யோசித்தான்.

''நண்பர்களே, என் குருநாதர் வெள்ளியங்கிரி சொல்லியிருக்கும் ஒரு உண்மை நினைவுக்கு வருகிறது. ஒரு வன் தனது பேரை மாற்றி, பொய்ப் பேரைத் தர வேண்டும் என்று நினைத் துக் கொடுத்தாலும், அவன் கொடுக்கும் பொய்ப் பெயர், அவனோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புடையதாக இருக் கும் என்று கூறியுள்ளார். கோவிந்தன் என்னும் ஒருவன் ருக்மாங்கதன் என்று பொய்ப் பெயரைக் கொடுத்தானாம். அந்தப் பெயர்தான் கோவிந்தனின் ஜாதகப் பெயர் என்று தெரிந்தது.''

''சரி. அதற்கும் இப்போதைய நமது பிரச்சனைக்கும் என்ன சம்பந்தம்?''

-அந்தோணி குறுக்கிட்டுக் கேட் டான்.

''சதாவதானி என்றால் நூறு திறமை கள் கொண்டவன் என்பது பொருள்....''

பரதன் முடிக்கும் முன், ''நூறு... நூறு ரூபாய் கள்ள நோட்டை மறை முகமாகக் குறிக்கிறது இல்லையா?'' என்று விக்டர் கேட்டான்.

''ஆமாம். 042695 என்னும் எண் ணைச் சுழற்றி சதாவதானி இருக்கிறாரா என்று கேட்போம். சதாவதானி என்பது அவர்களது இரகசிய நோட்டாக இருக்க லாம். மறுமுனையிலிருந்து என்ன பதில் வருகிறது என்று பார்க்கலாம்'' என் றான், பரதன்.

''தொலைபேசி எண் 042695 என்று இருக்குமா? எஸ்.டி.டி. எண்தானே ஜீரோவில் தொடங்கும்?'' அந்தோணி யின் ஐயம் வெளிப்பட்டது.

''நீ சொல்வது சரி அந்தோணி. எண் களின் முன்னே இருக்கும் ஜீரோவுக்கு மதிப்பில்லை என்பதும் ஒரு விதி. ஒரு காரின் எண் 004 என்று இருந்தால், அது 4 என்று பொருள். கோயமுத்தூர் நக ருக்குள்ளே தொலைபேசி எண், ஐந்து எண்களில்தான் இருக்கும். பீளமேடு, சிங்காநல்லூர் போன்ற இடங்களுக்கு ஒரு எண் கூடும். இந்த நோட்டில் உள்ள எண்ணில் முதல் ஜீரோவை விட்டு விட் டால், 42695 என்ற எண் கிடைக்கும். இது சாயிபாபா காலனி எக்ஸ்சேஞ்ச் எண்.''

''சரி, பரதா. நேரத்தை வீணாக்க வேண்டாம். இந்த எண்ணுக்குப் போன் செய்வோம். என் வீட்டுக்குப் போய் போன் செய்யலாம். விக்டருக்கும் அந் தோணிக்கும் விடைகொடுத்து அனுப் பிடலாமா?''

ஞானம் கேட்டான்.





''அனுப்பிடலாம். விக்டர், அந்தோணி நீங்க இருவரும் வீட்டுக்குப் போங்க. நாளைக்குக் காலையில் பள்ளிக்கூடத்தில் சந்திப்போம்.''

விக்டருக்கும் அந்தோணிக்கும் வீட்டுக்குப் போக விருப்பமில்லை. என்றாலும் பரதன் பேச்சுக்கு மறு பேச்சுப் பேச விரும்பாமல் வீட்டுக்குச் சென்றனர்.

ஞானம் பரதனுடன் தன் வீட்டுக்குப் போனான்.

ஞானமே 42695 எண்ணைச் சுழற்றினான்.

மறுமுனையில் . மணியொலித்தது. கொஞ்ச நேரம் ஒலித்துக் கொண்டே இருந்தது. பிறகு யாரோ ரிசீவரை எடுத்தார்கள்.

ஒரு கரகரப்பான குரல், ''ஹலோ'' சொன்னது.

''இது 42695 நம்பர்தானுங்களா?''

''ஆமாம்.''

''சதாவதானி இருக்கிறாருங்களா?''

ஒரு விநாடி மௌனம்.

பிறகு, ''இருக்கிறார். நீங்க யாரு?'' என்று கேட்டது.

''நானுங்களா... நான்...''

தொலைபேசி கட்டானது.

மறுமுனையில் தொலைபேசியை வைத்து விட்டார்களா?



இல்லை.

ஞானம் பதில் சொல்லிக் கொண்டு, தனது விரலால் ரிசீவர் தாங்கியை அழுத்தி, தொலைபேசியின் தொடர்பைத் துண்டித்து விட்டான்.

ஏன்?

''ஞானம், சதாவதானி அவங்களுக்குக் கோடா இருந்தா, அதிசயப் புருவத்தாருக்கும், தசாவதானி, என்றோ வேறு பெயரோ ஒரு கோடாக இருக்கும். அதைச் சொன்னால்தான் மேற்கொண்டு பேசுவார்கள். அதனால் சதாவதானி இருக்கிறார் என்றால், மேலே பேசத் தொடங்கி நீ பேசும் போதே, டிஸ்கனெக்ட் செய்து விடு. அப்போது டெலிபோன் இயல்பா கட்டாயிடுத்துன்னு நினைப்பாங்க. போனை டிஸ்கனெக்ட் செய்தா அவங் களுக்குச் சந்தேகம் வரும். நாம் பேசும் போது நாமே டிஸ்கனெக்ட் செய்தால்,டெலிபோன் தவறு என்று நினைப்பார்கள்'' என்று பரதன் கூறியிருந் தான். வெள்ளியங்கிரி ஒருமுறை, தொலைபேசியில் விடாமல் பேசித் தொல்லை தருபவரிடமிருந்து நாக ரிகமாகத் தப்பித்துக் கொள்ளும் வழி இது என்று ஒரு பத்திரிகையிலிருந்து படித்துக் காட்டினார். பரதன் அதை இப்போது பயன்படுத்தினான்.


ரிசீவரைக் கீழே வைத்த ஞானம், ''பரதா, இந்த எண்தான் அதிசயப் புருவத்தார் தேடிய எண். சதாவதானி இருக்கிறாராம்'' என்று ஒருவிதப் பரபரப்போடு சொன்னான்.

''ஞானம், இந்த நம்பரின் முகவரியைக் கண்டுபிடிக்க முடியுமா?''

ஞானம் 197ஐ சுழற்றினான். பிறகு, ''மேடம், 42695 நம்பரின் அட்ரஸ் சொல்றீங்களா? பிளீஸ் மேடம்'' என்று கேட்டான்.

''சொல்லுங்க... கே. எம். தங்கவேலு, மயில்சாமி தோட்டம், வெள்ளக்கிணறு, கோயமுத்தூர் 29ங்களா? தேங்ஸ் மேடம்.''

ஞானம் சொல்லச் சொல்ல அதை ஒரு தாளில் எழுதிக் கொண்டான், பரதன்.



''எவ்வளவு
தொலைவுன்னாலும்
நடந்தே போறாரே!
யார் அவர்?''
''அவரு 'கால்நடை'
மருத்துவர்!''
- சோமசேகர்

''இந்த முகவரி வீட்டு எண், வீதி பெயர் சொல்லும் முகவரியில்லே. இது ஏதோ தோட்டத்து முகவரி. இந்த முகவரி எங்கே இருக்குன்னு கண்டுபிடிக்கணுமே?'' - பரதன் கேட்டான்.

''கவலைப்படாதே. நமது கூட்டணியில் உள்ள சுகுமார் கவுண்டப்பாளையத்திலிருக்கிறான். அவனுக்கும் அவன் உறவினர் சிலருக்கும் வெள்ளக்கிணரில் தோட்டங்கள் உண்டு. அவன் வீட்டிலும் கூட போன் இருக்கிறது. அவனிடம் சொன்னால் தேவையான தகவலைத் திரட்டித் தருவான்.''

''சுகுமாரைக் கூப்பிடு''

ஞானம் எண்களைச் சுழற்றி, ஹலோ சொல்லி, 'சுகுமார்தானே பேசறது' என்று உறுதிப்படுத்திக் கொண்ட உடனே, பரதன் ரிசீவரை வாங்கிக் கொண்டான். சுகுமாரிடம் மயில்சாமி தோட்டத்தின் முகவரியைக் கொடுத்து, அதைக் கண்டுபிடித்த முறையைக் கூறினான்.

பிறகு, ''சுகு, இந்தத் தோட்டத்துக்கு இன்னைக்கே, இப்பவே போகணும். இது எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமா?'' என்று கேட்டான்.

''எங்க தாத்தா வீட்டிலே இருக்கார். அவருக்கு நிச்சயம் தெரியும். கேட்டுச் சொல்றேன்.''

''சுகு, கேட்டுக் கொண்டு, கவுண்டம்பாளையம் பஸ் ஸ்டாண்டில் நில்லு. நானும் ஞானமும் சைக்கிளில் வர்றோம். மயில்சாமி தோட்டத்துக்கு நீயும் வர வேண்டியதிருக்கலாம்.''

பரதன் போனை வைத்து விட்டு மேஜையில் இருந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி ஐந்து.

''பள்ளி நாலு மணிக்கு முடிந்தது. வீட்டில் நடந்த ஆலோசனை முடியும் போது மணி நாலரை. இப்போது மணி ஐந்து. சைக்கிளில் கவுண்டம்பாளையம் போக அரை மணியாகலாம். இப்போது ஒரு மணியளவில்தான் அவகாசம் இருக்கிறது. ஆறரை மணி வரையில்தான் சூரியன் இருக்கும். அதனால் இன்றே மயில்சாமி தோட்டத்துக்குப் போய்ப் பார்ப்போம். பார்த்து விட்டு, நாகன் மூலம் போலீஸை அணுகுவோம்'' என்றான் பரதன்.

அதை ஏற்றுக் கொண்ட ஞானம், பரதனை ஏற்றிக் கொண்டு கவுண்டம்பாளையம் நோக்கிச் சைக்கிளைச் செலுத்தினான். சரியாக ஐந்து இருபதுக்கு, பரதன் குறிப்பிட்ட பஸ் நிறுத்தத்தை அடைந்த போது, அங்கே தனது 'மோபா'வில் சுகுமார் உட்கார்ந்திருந்தான்.

பரதன் வாயைத் திறக்கும் முன்பே, ''மயில்சாமி தோட்டம், என் தாத்தாவின் நண்பர் கிருஷ்ணமூர்த்தியின் ரோட்காட்டேஜ்''க்கு முன்னே இருப்பதுதானாம். எனக்கு ரோட் காட்டேஜ் தெரியும். அதனால் உங்களை நான் அழைச்சுட்டுப் போறேன்'' என்று கூறிய சுகுமார், ''பரதா, நீ என் மோபாவின் பின்னே உட்கார். ஞானம் களைச்சுப் போயிருப்பான்'' என்று சொன்னான்.

பரதன் சைக்கிளிலிருந்து மோபாவுக்கு மாறினான். உடனே மோபா புறப்பட்டது. ஞானத்தின் சைக்கிள் அதைப் பின்தொடர்ந்தது.

சுகுமாரின் மோபா மேட்டுப்பாளையம் நெடுஞ்சாலை வழியே சென்றது. கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி இருக்கும், உருமாண்டபாளையத்துக்குப் போகும் தெருவில் திரும்பிக் கிழக்கே சென்றது. ஞானாம்பிகை மில்லைத் தாண்டி, ரயில்வே லேவல் கிரா

லைக் கடந்ததும், தெற்கே திரும்பி இருப்புப் பாதைக்குப் பக்கத்திலிருந்த சாலையில் சுமார் ஒரு கிலோ மீட்டர் சென்றதும் நின்றது. ஞானத்தின் சைக்கிளும் மோபாவின் அருகே வந்து நின்றது.

''அதோ கோயில் தெரியுதே, அங்கேதான் தாத்தாவின் நண்பருடைய ரோஸ் காட்டேஜ் இருக்குது. அதற்கு முந்திய தோட்டத்துக்கு முன்னேதான் நாம் நிற்கிறோம். இதுதான் மயில்சாமி தோட்டம். இந்தத் தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் வற்றிப் போச்சு. அதனால் விவசாயம் செய்யறதில்லை. தென்னை மரங்களும் காய்ந்து போய் விட்டன.''

பரதன் மயில்சாமி தோட்டத்தைப் பார்த்தான். முள்வேலிக்கு நடுவே, ஒரு பழுதடைந்த மரக் கதவு. உள்ளே வடபுறத்தில் ஒரு ஓட்டு வீடு. தொலைபேசிக் கம்பி அந்த வீட்டுக்குச் செல்வதால், அங்கேதான் தொலைபேசியும் ஆளும் இருப்பார்கள். தோட்டத்தின் நடுவே கிணறு தெரிந்தது.

''நான் உள்ளே போய்ப் பார்த்துட்டு வரேன். நீங்க கொஞ்சம் விலகி, வேலிக்கருகில் மறைந்து நில்லுங்கள். ஒரு மணி நேரத்துக்குள் திரும்பி வராவிட்டால், உடனே இங்கிருந்து போய், நாகனிடம் சொல்லுங்கள். அவன் மூலம் போலீசுக்கு நடந்த அனைத்தையும் சொல்லி, ஒரு பக்கம் அச்சான நூறு ரூபாய் நோட்டையும் கொடுத்து விடுங்கள்'' என்ற பரதன், ஞானத்திடம் ''ஞானம், அந்த நோட்டு உன் வீட்டில் இருக்கிறது'' என்று சொன்னான்.

''ஆமாம் பரதா. என் டைரியில் பத்திரமாக வைச்சுட்டுத்தான் வந்தேன். இந்தத் தோட்டம் கள்ள நோட்டுக் கள்ளர்களின் இருப்பிடம். கள்ள நோட்டுக் காரங்க கருணையில்லாதவங்க. கொலை செய்யவும் தயங்க மாட்டாங்க. அதனாலே நீ தனியா இங்கே போறது சரியில்லே... நானும் உன்னோடு வரட்டுமா?''

கவலையோடு கேட்டான், ஞானம்.

பரதன் முகத்தில் லேசான புன்முறுவல்.

''ஞானம், கருணையில்லாத கொலைக்காரங்க என்னைக் கொல்லத் தயங்க மாட்டாங்கங்கறது நிஜம்தான். ஆனால் அதுக்காக நீயும் வந்தா உன்னையும் சேர்த்துக் கொன்னுடுவாங்க. ரெண்டு பேரும் ஒன்னா போய் உயிர் விட வேண்டாம். நான் மட்டும் போறேன். சத்தியம் ஜெயிக்கும், வாய்மையே வெல்லும் என்பதெல்லாம் உண்மை என்ற நம்பிக்கையோடு உள்ளே போறேன். வீணா கவலைப்படாம விழிப்பா இருங்க. ஒரு மணி நேரத்திலே நான் வெளியே வரலைன்னா, ஒரு விநாடி கூட இங்கே நிக்காம நான் சொன்னபடி செய்யுங்க.''

பரதன் சொன்னான்.

ஞானம் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

மணி சரியாக ஆறு.

குமாரும் ஞானமும், ''ஆல் த பெஸ்ட்'' சொல்ல பரதன் மரக் கதவில் இருந்த ஓட்டை வழியே உள்ளே நுழைந்தான்.

கதவைக் கடந்த பரதன், ஓட்டு வீட்டை நோக்கி மெல்ல நடந்தான். புலியின் குகைக்குள்ளே தானே நுழையும் புள்ளி மானைப் போல் அவன் செல்வதை, வேலியை ஒட்டி வளர்ந்திருந்த புதரின் மறைவில் நின்றபடி ஞானமும் குமாரும் படபடக்கும் மனத்தோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.


(தொடரும்)


''அந்த இடத்திலே உட்கார்ந்தா மட்டும் அடிக்கடி புயல் வீசிக்கிட்டே இருக்குது...''

''அப்படி எங்கே உட்கார்ந்தே...?''

''யானையோட காதுக்குப் பக்கத்திலே !''

- புதுவண்டி ரவிந்திரன்




இத்தனை குறைவா மார்க் எடுத்திருக்கிறியே, வெட்கமா இல்லை உனக்கு?
இது உங்களோட பிராக்ரஸ் ரிப்போர்ட் அப்பா! பீரோவில் இருந்து தூசி தட்டி எடுத்தேன்!
ஏங்க, இந்த நாய் ரொம்ப நன்றியுள்ளதுங்களா?
ஆமாங்க. இது வரைக்கும் நான்கு பேர்டம் வித்து இருந்தேன். அப்புறம் கூட என்கிட்டயே ஓடி வந்திருக்குன்னா பார்த்துக்குங்களேன்.
என் பையனுக்கு அயர்ன் பாக்ஸ் வாங்கித் தந்தது தப்பாப் போச்சு. தோசை சுருங்கினா கூட சலவை போட்டுடறான்!
ஆர்.பெருமாள்
சிரிப்...
ஏன் சார், எல்லோரும் கோவில் முன்னாடி தேங்காய்தான் உடைப்பாங்க, நீங்க பையனைப் போட்டு உதைக்கிறீங்களே!
எல்லாம் வேண்டுதல்தான் சார். இவன் பாஸாயிட்டா இருநூறு தேங்காய் உடைக்கிறதாகவும், பெயிலாயிட்டா இப்படி கோவில் முன்னாடி கூட்டி வந்து உதைக்கிறதாகவும் வேண்டுதல்
ஏன் சார், உங்க பையன் கணக்குப் போடும்போதெல்லாம் நெளிஞ்சுகிட்டே இருக்கான்
ஓ, அதுவா. அவன் கணக்குல புழுங்க.
செ

எழுத்தை ஆண்டவர்!

ஜானகிமணாளன்



‘‘டேய்... சார்லஸ்...! உடம்புக்கு என்னடா...? ரொம்ப நேரமாக ஏண்டா இப்படிச் சுருண்டு படுத்து நெளியறே...?'' என்றான் ஒரு நண்பன்.

''உடம்பு சரியில்லைடா... ஒரே வலி...''

''டேய்... உனக்கு இந்த வேலைகளையெல்லாம் செய்து பழக்கம் இல்லை... போகப் போகச் சரியாகி விடும்...'' என்ற நண்பன், ஓடிச் சென்று, ஒரு பாட்டிலில் சுடுநீரை நிரப்பி வந்தான். ''கால் கைகளை நீட்டுடா...'' என்றபடி அருகில் அமர்ந்து மெல்லச் சுடுநீர் ஒத்தடம் கொடுத்தான்.

சார்லசுக்கு இதமாக இருந்தது. சற்று நேரத்தில், ''டேய்...! இப்போது கொஞ்சம் தேவலைடா...'' என்றான். அதற்குள் அச் சிறுவர்கள் வேலை செய்யும் தொழிற்சாலையின் வேலை நேரம் முடியும் மணி ஒலித்தது.

அது ஒரு ஷூ பாலீஷ் தயாரிக்கும் தொழிற்சாலை. அதில் பல குழந்தைத் தொழிலாளிகள் வேலை செய்தனர். அவர்களில் சார்லசும் ஒருவன். பாலிஷிங் திரவத்தைப் பாட்டிலில் நிரப்பி, சீல் வைத்து, லேபில் ஒட்ட வேண்டியது அவன் வேலை. முதுகெலும்பு ஒடிந்து விடும்.

''கிளம்புடா சார்லஸ்... வீட்டுக்குச் செல்லலாம்...''

சார்லசுக்கு அவனுடன் சேர்ந்து போக விருப்பம் இல்லை. காரணம்

அவனுக்கென்று வீடே கிடையாது. 'அவன் எங்கு தங்குகிறான், பெற்றோர் யார் என்பதெல்லாம் பரம ரகசியம்... எனவே, ''இல்லைடா... நீ போ.. நான் அப்புறம் வரேன்...'' என்றான்.

''உடல்நலம் சரியில்லாத நீ எப்படித் தனியாகப் போவாய்? கிளம்பு...!'' நண்பன் அவனை விடுவதாக இல்லை. வலுக்கட்டாயமாகத் தூக்கி நிறுத்திக் கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்துச் சென்றான். சார்லசுக்கு வேறு வழியில்லை. கூடவே போனான். இருந்தாலும் இடையில் எப்படியாவது நண்பனிடமிருந்து பிரிந்து சென்றே ஆக வேண்டிய நிலை. சிந்தித்தான். ஒரு வழி புலப்பட்டது.



இருவரும் பல தெருக்களைக் கடந்தனர். ஒரு தெருவில் பெரிய அழகான வீடு. சார்லஸ் சட்டென்று அதன் முன் நின்றான். ''சரிடா... ரொம்ப நன்றி... நீ போய் வா...'' என்று அவன் அந்த நண்பனுக்கு விடைகொடுத்து விட்டு, பதிலைக் கூட எதிர்பார்க்காமல் 'விர்' ரென்று அந்த வீட்டின் படிகளில் ஏறி, அழைப்பு மணியை அழுத்தினான்.

வீட்டுக்காரி வந்து கதவைத் திறந்தவாறு, ''யார் தம்பி...? என்ன வேண்டும்...?'' என்று கேட்டாள்.


அவன் சட்டென்று, வாயில் வந்த ஒரு பெயரைச் சொல்லி, ''அவர் வீடு இதுதானே...?'' என்று கேட்டான்.

''இல்லையே...'' - அவள் பட்டென்று கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டாள். 'சரி...' என்று அவன் சாலைக்குத் திரும்பி விட்டான். இதற்குள் அந்த நண்பனும் தெருக்கோடிக்குச் சென்று விட்டான். சார்லசின் நோக்கமும் அதுதானே... அவவிடம், நண்பனிடமிருந்து விடுபட்ட நிம்மதி. அவன் தன் வழி நடந்தான்.

சரி... தனக்கு உதவி செய்த அந்த நண்பனிடம் கூட சார்லஸ் ஏன் அப்படி நடந்து கொண்டான்..? அது ஒரு தனிக் கதை!

சார்லசின் தந்தை பெயர் ஜான். அவர் ஒரு குமாஸ்தா. ஒரு சமயம் அவருக்கு வேலை போய் விட்டது. எனவே, பிழைப்பை நாடிக் குடும்பத்துடன் லண்டன் போனார். காம்டன் நகரில் ஜாகை. துரதிர்ஷ்டம் தொடர்ந்தது. கடன் தொல்லையில் மூழ்கித் தவித்தார். அரசாங்கம் அவரைக் கைது செய்து 'மார் ஷல்ஸீ ப்ரிசன்' - மார்ஷல் கடல் சிறை யில் அடைத்தது.

அந்தச் சிறையில் அடைக்கப்படும் கடன்காரர்கள் சிறைக்கு உள்ளேயே



குடும்பம் நடத்தலாம். அப்படித்தான் சார்லஸின் குடும்பம் சிறைக்குள் வசித்து வந்தது.

ஒருநாள், ஜானின் நண்பர் ஒருவர், அவரைப் பார்க்கச் சிறைக்கு வந்தார். அவரிடம் ஜான், ''நம் நிழல் நம்மோடு தான்' என்பது சரியாகத்தான் இருக்கிறது...'' என்று வருந்தப்பட்டார்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்...?'' என்றார் நண்பர்.

''வெளியில் இருந்த போது, கடன் வாங்கியாவது காலம் தள்ள முடிந்தது... உள்ளே வந்த பிறகு, அதற்கும் வழி இல்லாமல் போய் விட்டது...''

''சரி.. எப்படிக் குடும்பம் நடத்துகிறீர்கள்...?''

''வீட்டில் இருந்த தட்டுமுட்டுச் சாமான்களை விற்றுத்தான்... இனி அதற்கும் வழியில்லை...''

''வேறு என்ன செய்யப் போவதாக உத்தேசம்...?''

''அதுதான் புரியவில்லை... எங்களைப் பற்றி ஒன்றுமில்லை... பசி, பட்டினி எல்லாம் பழகி விட்டது... பாவம் குழந்தை சார்லஸ்... அவனுக்கு எங்களால் கால் வயிற்றுக்குக் கூட உணவிட முடியவில்லை...''

உடனே அந்த நண்பர் ஒரு வழி சொன்னார். ''சார்லஸை வெளியில் அனுப்புங்கள்... தன் வயிற்றுக்கு, அவனே வேலை செய்து சம்பாதித்துக் கொள்ளட்டும்...'' என்றார்.

''அவனுக்கு இன்னும் பத்து வயது கூட நிரம்பவில்லையே! அதற்குள் உடல் உழைப்பா...?'' என்று ஜான் உடன்படவில்லை.

''ஏன்...? உழைத்தால் என்ன...? படிப்பு இல்லாமல் இங்கே சிறைக்குள்



"என்னைக் கண்டதும் ஏன் இப் படிப் பறந்தோடுறீங்க இரண்டு பேரும்?"

"எல்லாம் கிலி தான்...!"

வெட்டியாக இருப்பதற்கு. வெளியில் போனால், ஒரு தொழிலையாவது கற்றுக் கொண்டு, செய்து பிழைக் கலாமே...!" என்றார் நண்பர்.

பெற்றோருக்கு அதில் விருப்பம் இல்லைதான். இருந்தாலும் குடும்ப நிலைமை கட்டாயப்படுத்தியது.

சார்லஸ் அந்த ஷூ பாலிஷ் தொழிற் சாலையில் வேலைக்கு வந்த கதை இது தான்.

வேலையில் சேர்ந்த புதிதில், தினசரி அவன் சிறைச்சாலை வீட்டிலிருந்தே வேலைக்கு வந்து போய்க் கொண்டிருந் தான். அச் சமயத்தில் தான் அவனுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. நண்பர் களுக்குத் தன் குடும்பம் சிறையில் வாழும் குடும்பம் என்பது தெரிந்தால் என்ன ஆகும்? எனவேதான், நண்ப னுடன் சேர்ந்து வீட்டுக்குச் செல்வதை அவன் தவிர்த்தான். அவன் எங்கிருந்து வருகிறான்... பெற்றோர் யார் என்பதை யெல்லாம் மிக மிக ரகசியமாகவே வைத்துக் கொண்டிருந்தான். ஆனால், விரைவில் அதற்கும் விடிவு காலம் வந்தது.

ஒருநாள் சார்லசின் தந்தை அவ னிடம் சொன்னார். "டேய் சார்லஸ்... இனிமேல் நீ தினசரி வீட்டுக்கு வர வேண்டாம்டா. உனக்கு வேலை வாங்கிக் கொடுத்தவர், உனக்காக அங் கேயே வாடகைக்கு ஒரு அறை பார்த் திருக்கிறார்... உன் சம்பளத்தில் சாப் பிட்டுக் கொண்டு நீ அங்கேயே தங்கி விடு..." என்றார்.

சார்லசுக்குக் குடும்பத்தைப் பிரிந்து வாழ்வதில் விருப்பம் இல்லைதான். இருந்தாலும், ரகசியமாக ஒளிந்து ஒளிந்து வாழ்வதற்கு அந்தப் பிரிவுத் துயர் பரவாயில்லையே...! எனவே ஒத்துக் கொண்டான்.

அதன் பிறகு, இரண்டு ஆண்டுகள் அவன் அந்தத் தொழிற்சாலையில் வேலை செய்தான். அப்போதெல்லாம், ஞாயிற்றுக் கிழமை எப்போது வரும் என்று துடிப்பான். அன்று சிறை வீட்டுக் குச் சென்று, நாள் முழுதும் குடும்பத் தினருடன் பேசிப் பொழுதை உல்லாச மாகக் கழிப்பான். சிறையில் மற்ற கைதி களின் குடும்பத்தினருடன் பேசிப் பழகி மகிழ்வான். அவர்களின் கதைகளைக் கேட்டறிந்து அதையெல்லாம் மனதில் ஆழப் பதித்துக் கொள்வான். அவற்றை மட்டுமல்ல. தன்னைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்கும் தொழிற்சாலையின் மற்றக் குழந்தைத் தொழிலாளர்களின் துயரம் நிரம்பிய வாழ்க்கையையும் அவன் போட்டோ படம் போல் மனதில் பதிய வைத்துக் கொண்டான். அந்தப் பதிவுகள் பிற்காலத்தில் அவனுக்குப் பெரிதும் உதவின. எப்படி என்கிறீர் களா?

இரண்டாண்டு சிறைவாசம்! அதன் பிறகு சார்லசின் தந்தை ஜான் விடுதலை பெற்று விட்டார். உடனே அவர் செய்த முதல் வேலை, சார்லசைத் தொழிற் சாலை வேலையிலிருந்து நிறுத்தியது தான். பழையபடி காம்டென் நகரத்தில் ஜாகை. அவனை அவர் பள்ளிக்கு அனுப்பிப் படிக்க வைத்தார்.

அவருக்கும் ஒரு பத்திரிகை அலு வலகத்தில் வேலை கிடைத்தது. பள்ளி யில் படித்த சார்லஸ், தானும் தந்தை யைப் போலவே ஒரு பத்திரிகையாள னாக வர வேண்டும் என்று முடிவு செய் தான். படிப்புடன் சேர்த்து பொது அறி வையும் பெருக்கிக் கொண்டான். நிறையப் புத்தகங்கள் வாங்கிப் படித்

சுருக்கெழுத்து கற்றுக் கொண்டான். பின்னர், தான் நினைத்தது போலவே ஒரு லண்டன் பத்திரிகையின் நிருபராகி விட்டான்.

நிருபராக இருந்து கொண்டே, பல்வேறு பத்திரிகைகளுக்கும் கதை கட்டுரைகள் எழுதி அனுப்பினார். அவை நல்ல வரவேற்பைப் பெற்றன. சில ஆண்டுகளுக்குப் பிறகு, அவற்றைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டார். அதற்கு 'ஸ்கெட்சஸ் பை போஜ்' (BOZ) என்று பெயர். போஜ் என்பது சார்லசின் புனைப் பெயர்.

பின்னர், அவர் நாவல்கள் எழுதத் தொடங்கினார். அந் நாவலின் பாத்திரங்கள் எல்லாம் சிரஞ்சீவியானவை. உயிரோட்டம் மிக்கவைவை. அதற்குக் காரணம், அவர் தன்னையும் தனது குடும்பத்தினரையும் மற்றும் தன்னுடன் பழகியவர்களையும் கதாபாத்திரங்களாகத் தனது நாவல்களில் உருவகப்படுத்தியதுதான். சின்ன வயதில், தான் சிறை வீட்டில் வசித்த போதும், ஷூ பாலீஷ் தொழிற்சாலையில் வேலை செய்த போதும் நடந்த நிகழ்ச்சிகளை நாவலின் கதையோட்டத்தோடு வெளிப்படுத்தினார். ஜீவனுள்ள அந்த நிகழ்ச்சிகளும் உரை யாடல்களும் நாவலைப் படிப்பவரின் உள்ளத்தை உருகச் செய்தன. எனவே அவரது நாவல்கள் உலகப் புகழ் பெற்றன. அனைவரும் அவரை அபூர்வத் திறமை கொண்ட புத்தம் புது எழுத்தாளர் என்று போற்றிப் புகழ்ந்தனர்.

அவருடைய படைப்புகள் ஏராளம். அவற்றுள், 'பிக்விக் பேப்பர்ஸ்', 'ஆலிவர் ட்விஸ்ட்', 'டேவிட் காப்பர் ஃபீல்டு', 'எ டேல் ஆஃப் ட்டு சிட்டீஸ்' போன்றவை அமரத்துவம் பெற்றவை. இன்றும் உலகின் பெரும்பாலோரால் பாராட்டப்படுபவை.

இவ்விதம் தனது எழுத்தால் பெரும் புகழ் பெற்றுத் திகழ்ந்த அந்த எழுத்தாளர் தான் பிரபல ஆங்கில நாவலாசிரியர் 'சார்லஸ் டிக்கன்ஸ்!'



கோடை வந்தது!

கோடை காலம் வந்தது – இனிய
குயில்கள் குரல் தந்தது!
வாடை மறைந்து போனது – நாளும்
வாட்டும் வெயில் வந்தது!

வெள்ளரிக் காய்கள் விற்குது – நமக்கு
வேண்டும் அளவு வாங்கலாம்
பள்ளிக் கோடை விடுமுறையில் – நாம்
பார்க்கலாம் ஊட்டி கொடைக்கானல்

குற்றாலம் சென்று பார்க்கலாம் – நன்றாய்
குளித்து அருவியில் மகிழலாம்
சுற்றிச் சூழ்ந்த சோலையில் – மந்திகள்
தொங்கும் காட்சி காணலாம்

அழகு மலரைப் பறிக்கலாம் – அவை
அளிக்கும் மணத்தை நுகரலாம்
பழங்கள் வாங்கித் தின்னலாம் – வயிற்று
பசியைப் போக்கி உலாவலாம்

– கடையாலுருட்டி கலையன்பன்



பிருந்தாவனக் கவியரங்கம்



போற்றுங்கள்!

நேர்மை கொண்டு வாழுங்கள்
நல்லவர் நட்பை நாடுங்கள்!

உண்மை நெறியில் நில்லுங்கள்
உயர்ந்த பண்பை வளருங்கள்!


நல்லதை மட்டும் செய்யுங்கள்
நாட்டுக் கென்று வாழுங்கள்!

எளியவர் துன்பம் துடையுங்கள்
என்றும் இனிதாய் பேசுங்கள்!

மதத்தை சாதியை மறவுங்கள்
மனிதர் நாம்என எண்ணுங்கள்!

சுயநலப் பேயை விரட்டுங்கள்
சுதந்திர உணர்வைப் போற்றுங்கள்!

- ம. கணேசன், குடந்தை.



வணங்கிடு!

விடியற் காலை எழுந்திரு
விரைந்து பல்லைத் துலக்கிடு.
துடிப்பாய் கடன்கள் முடித்திடு
தொடர்ந்து பாடம் படித்திடு.

பள்ளிக் கூடம் சென்றிடு
பாடத்தில் கவனம் வைத்திடு
துள்ளி மாலையில் ஆடிடு
திரும்ப வீடு விரைந்திடு

பெற்றோர் அன்பைப் பெற்றிடு
பெரியோர் புகழ்ந்திட நடந்திடு
வற்றாக் கல்வி வழங்கிடும்
வல்லவர் ஆசான் வணங்கிடு!

- எம். மனோஜ்,
சின்னாளப்பட்டி.


தவளை

தவளை ஒன்று நீரிலே
தத்தித் தத்தி வருகுது!
தாமரை இலையில் குந்தியே
தாளம் போட்டுப் பாடுது!


வண்டு ஒன்று மதுவருந்த
வட்ட மிட்டுப் பாடுது!
கண்டு மகிழ்ந்த தவளையும்
களிப்பில் நாக்கை நீட்டுது!

பச்சைக் குழந்தை போலவே
பரம சாதுவாய் இருந்தது
அச்ச மின்றித் தாவியே
அழகு வண்டை உண்டது!

- கு. காளிமுத்து, வல்லம்.



பிருந்தாவனக் கவியரங்கம்



அற்புத முட்டை!

பாம்பு மாமா வாருங்கள்
படம் எடுத்து ஆடுங்கள்.
எம்பி எம்பி நெளியுங்கள்.
எழுந்து வந்து அமருங்கள்

கோழி முட்டை தேடியே
காட்டில் அலைய வேண்டாங்க!
அழகாய் கணக்கில் வாங்குறேன்
அன்ப ளிப்பாய் தருகிறேன்!

- ஆர்.சி. மதிராஜ்,
கச்சிராயபாளையம்

கிளியே....!

கிளியே விடுதலை வழங்கிடுவேன்
கவிதை ஒன்று கூறிடுவாய்!
எளிமை உழைப்பின் பெருமைகளை
ஏற்றிக் கவிதை படைத்திடுவாய்!

கல்வி கலைகள் மேன்மையுற
குட்டிக் கவிதை சொல்லிடுவாய்!
செல்வம் அன்பு பெருகிடவே
சின்னக் கவிதை பகர்ந்திடுவாய்!

- ஆர். சுந்தரராஜன்,
லாலாபுரம்.



நாக்கு

நரம்பு இல்லா நாக்கு
நாலும் பேசும் நாக்கு
வரம்பு இல்லா நாக்கு
வம்பு வாங்கும் நாக்கு

அல்வா பூரி முறுக்கு
அழகாய் சுவைக்கும் நாக்கு
மெல்லக் கசப்பு இருந்தால்
மிகவும் வெறுக்கும் நாக்கு!

நாக்கை அடக்கிக் கொண்டால்
நன்மை நமக்கு உண்டாம்!
போக்கில் போக விட்டால்
பொழுதும் வம்பு வளரும்!

- எ.எல். சண்முகம்,
கண்டனூர்.



இயற்கையழகு....

ஊர் ஒரு சின்ன ஊருதான்
ஓடுது அருகில் ஆறுதான்
பாரு எங்கும் பசுமைதான்
பார்க்கப் பார்க்க இனிமைதான்!
கலகல என்ற நீரோட்டம்
கண்கள் கொள்ளாத் தேரோட்டம்
சலசல என்றே இசைத்திடும்
சோலை அழகோ சொர்க்கம்தான்!
தென்னை மரங்கள் வரிசைதான்
தேக்கு மா, பலா அருமைதான்
என்ன என்றே சொல்லுவேன்
இயற்கை அன்னை மாட்சியை!

- அ.சா. குருசாமி,
திருவாரூர்.



எறும்பு

எறும்புக் கூட்டம் பாருங்கள்
எங்கும் திரியும் காணுங்கள்
வரிசை மாறா அணிவகுப்பை
வியந்து பார்த்து மகிழுங்கள்!

சுவரில் தரையில் கூரைதனில்
சுவைத்து உண்ணும் பண்டங்களில்
தவழ்ந்து மொய்க்கும் எறும்புகளை
தயவு செய்து காணுங்கள்.
ஒழுங்கு கடமை சுறுசுறுப்பு
ஒற்றுமை குலையா சேமிப்பு
பழக்கம் இதனிடம் கற்போமே
பாரில் உயர்ந்து வாழ்வோமே!

- டி. சிவக்குமார், பவானி.

திருக்குறள்

இரண்டு அடியை உடையது
இனிய தமிழில் மலர்ந்தது
உலக மக்கள் எல்லார்க்கும்
உயர்ந்த கருத்தைத் தருவது

எல்லா மதமும் புகழ்வது
எல்லா இனமும் ஏற்பது
எல்லா நாடும் ஒப்பது
எல்லாக் காலம் நிற்பது

அறமும் பொருளும் இன்பமும்
அழகாய் மூன்று பால்களில்
திறமாய்ச் சொன்ன வள்ளுவர்
திருக்கு றள்நூல் கற்போமே!

- தமிழ்க்குமரன், பணகுடி.



பிருந்தாவனக் கவியரங்கம்


விளக்கு

இருளை ஓட்டும் விளக்கு
ஒளியைக் கொடுக்கும் விளக்கு!
திரிகள் போட்ட விளக்கு
தீபம் என்னும் விளக்கு!

குயவர் செய்த விளக்கு
கும்பிட நல்ல விளக்கு!
அழகு செய்யும் விளக்கு
அஞ்சு முகமாம் விளக்கு!

விண்ணின் நிலவைப் போல
வெளிச்சம் தரும் விளக்கு
எண்ணெய் இட்டால் எரிந்து
ஏற்றம் அளிக்கும் விளக்கு!

- ஏ. பகவதி,
வடமாதிமங்கலம்.




சோழி!


ஆடு புலி ஆட்டங்கள்
அழகு தாயக் கட்டங்கள்
ஈடே இல்லா பரமபதம்
இதிலே அழகாய் ஆடிடலாம்.

பாட்டி காலத்து விளையாட்டாம்
பல்லாங் குழியும் ஆடிடலாம்.
கடலில் பிறந்த சோழிகளாம்
கேட்பீர் இதுவே எம்பேராம்!

- சா. ஸ்ரீவத்சன், கடலூர்.







குயிலக்கா

கூவிப் பாடும் குயிலக்கா
கொஞ்சம் என்னைப் பாரக்கா
நாவல் பழத்தைப் போலக்கா
நிந்தன் உடலின் நிறமக்கா.

கூக்கு என்றே கூவுகிறாய்
கூவி யாரை அரைக்கின்றாய்
காக்கை கூட்டில் ஏனக்கா
கள்ள முட்டை இடுகின்றாய்?

குரலின் இனிமை போலவே
கண்ணைக் கவரும் உடலையே
இறைவன் உனக்கு ஏனக்கா
இனிதாய் அருள மறந்தாரோ?

- கே. மாணிக்கம்,
வெளம்பட்டி.

பிறந்த நாள் பரிசு!

பிறந்த நாளும் வந்தது
பரிசு மழையும் பொழிந்தது!
பறவை ரப்பர், பேனாவை
பரிசுடன் தாத்தா தந்திட்டார்.

அல்வா செய்து அன்புடனே
அம்மா பரிசைத் தந்திட்டாள்.
கு ளள வாத்து சைக்கிளை
கொடுத்தார் அப்பா பரிசாக

கிரிக்கெட் பாட்டும் பந்தையும்
கொடுத்தார் மாமா பரிசாக.
சிரிக்கும் பொம்மை, தொப்பியை
சேலத்து அத்தை தந்தாரே!

சின்னப் பையன் வணங்குகிறேன்
சிறிது என்னை வாழ்த்துங்கள்
என்ன பரிசு தருவீரோ
என்பதை எனக்குச் சொல்லுங்கள்!

- கே.எஸ். நரேந்திரன்,
திருச்சி.

கேளுங்கள் சொல்லப்படும்!

சேரநம்பி

★ வெ. செல்லப்பன், தூத்துக்குடி.

எரிமலைகள் பற்றிய ஒரு வெளியீட்டில் எரிமலை உள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் பெயரையும் பார்த்ததாக என் நண்பன் கூறுகிறான். இது உண்மையாக இருக்குமா? நமது நாட்டில் கூட எரிமலை உண்டா?



இப்படி மொட்டையாகக் கூறினால் எப்படி? அது என்ன வெளியீடு என்ற விவரம் அறிந்தால் தெரிவிக்கவும். இந்திய தீபகர்பத்தில் எரிமலை இல்லை. ஆனால் இந்திய ஆட்சிப் பரப்பில் வரும் (யூனியன் டெரிடரி) அந்தமான், நிகோபார் தீவுக் கூட்டங்களில் பரேன் (BARREN) என்று ஒரு தீவு உள்ளது. இதில் ஒரு எரிமலையும் இருக்கிறது. எனவே புள்ளி விவரத் தேவைக்காக இதையும் சேர்த்திருக்கலாம்.

★ முத்து முகம்மது, கனகாம்மா சத்திரம்.

குழந்தைகளுக்காக எடுக்கப்பட்ட அபயம் திரைப் படத்தின் கதையை யார் எழுதினார்கள்?

இது ஒரு மலையாள மொழிச் சிறுவர் படம். இதன் மூலக் கதையை எழுதிய கலைஞர் பெயர் சிவன். Feature ஃபிலிம்களுக்காக இவர் ஏற்கெனவே பல



பரிசுகளைப் பெற்றவர். ஆனால் அபயம் திரைப்படத்திற்கான கதையை எழுதியவர் ஷீலா சக்ரவர்த்தி.

★ கு. மனோன்மணி, உசிலம்பட்டி.

சூரிய சக்தியால் விளக்கு எரிகிறது; சமைக்க முடிகிறது; பம்ப் செட் ஓடுகிறது; காரை ஓட வைக்க முடிகிறது. வேறு என்ன செய்ய முடிகிறது?



இதெல்லாம் போதாதா? இதெல்லாம் தொடக்கம்தான். இன்னும் போகப் போக எத்தனையோ வரும். அண்மையில் ஒன்று. கர்நாடக மாநிலத்தில் சித்ர துர்கா என்று ஒரு ஊர். இதில் ஒரு டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் இருக்

கிறது. இதில் ஒரு பகுதியை, நமது பெங்களூர் பெல் நிறுவனம் தயாரித்த கருவிகளைக் கொண்டே சூரிய ஆற்றலைக் கொண்டு சோதனை முறையில் இயங்க வைத்திருக்கிறார்கள்! நமது இந்திய விஞ்ஞானிகள் இளைத்தவர்கள் அல்ல. அவர்களைப் பாராட்டவாவது செய்வோம்.

★ அ. பூபதி, அ. சபாபதி, உளுந்தூர் பேட்டை.


வெற்றிலை போட்டால் ஜீரணமாகும் என்று என் தாத்தா சொல்கிறார். இது நிஜமா? ஜீரணத்திற்கு உதவும் வகையில் அதில் என்ன சத்து இருக்கிறது?



வெற்றிலையில் ''பைர் பெரிக் ஆசிட்' என்ற அமிலம் உள்ளது. இது ஜீரண சக்தியை ஊக்குவிக்கிறது.

★ வ. பெரிய நாயகி, கண்டமங்கலம்.

குட்டிகளைப் பாசத்துடன் உடம்போடு சுமந்து செல்லும் குரங்கையும், கங்காருவையும் போல் வேறு விலங்குகள் உண்டா?



பங்கோலின் (PANGOLIN) என்று எறும்பு தின்னியைப் போன்ற ஒரு விலங்கு. இது தன் குட்டியை வாலிலேயே சுமந்து செல்கிறது!

★ கு. சாந்தம்மா, காங்கேயம்.

வருமான வரியை முதலில் கண்டு பிடித்து வரி விதித்தவர் யார்?



இங்கிலாந்தில் வில்லியம்பிட் என்பவர் பிரதம மந்திரியாக இருந்த போது, நெப்போலியனோடு நீண்ட காலப் போர் நடந்தது. இங்கிலாந்து நிதி வசதி இல்லாது திண்டாடியது. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க வில்லியம் பிட் 1799 ஆம் ஆண்டு வருமான வரியை விதித்து, நிதி வசதியைப் பெருக்கிக் கொண்டார்.

★ வெற்றி. ஆனந்தராணி, ராணிப் பேட்டை.


பெண் பறவைகளைக் கவர்வதற்காக மட்டுமேதான் ஆண் பறவைகள் பாடுகின்றனவா?



பொதுவான ஆராய்ச்சி முடிவு இதுதான். ஆனால், ராபின் என்ற ஓர் அதிசயப் பறவை. இது தூங்கும் போதும் பாடுமாம்!

★ கப்பு தேனப்பன், கொத்தமங்கலம்.

பாம்பின் நஞ்சு என்ன நிறத்தில் இருக்கும்? இதற்கு மணம், சுவை இருக்குமா?



சுத்தமான பாம்பின் நஞ்சுக்கு நிறமோ, மணமோ, சுவையோ கிடையாது!

★ தி. சிவப்பிரகாசம், நெய்வேலி.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற தொடரை எல்லோரும் பயன் படுத்துகிறார்களே, இது எதில் வருகிறது? யார் எழுதியது?

இந்தத் தொடர் நன்னூல் சூத்திரம் 462-ல் வருகிறது. இதை எழுதியவர் பவணந்தி முனிவர்.

★ பி. கௌரா, வடகரைப்பட்டி.


நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானி சர். சி. வி. இராமனுக்கு நினைவுச் சின்னமாக ஒரு சிலை கூட வைக்கவில்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது. நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

நான் அப்படி எண்ணவில்லை. பிப்ரவரி 28 ஆம் நாளை இந்திய அரசு ''தேசிய அறிவியல் தினமா''கக் கொண்டாடி வருகிறது. இது ''ராமன் விளைவை'', சி. வி. ராமன் கண்டு



பிடித்த தினம். பெங்களூரில் மலரா ராய்ச்சிக் கழகத்தில் கண்டுபிடிக்கப் பட்ட ஒரு வகை ரோஜா மலருக்கு ''ராமன் ரோஜா'' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். தபால் தலை வெளியிட்டிருக்கிறோம். இவற்றை விடவா சிலை வைப்பதால் ஒரு பெருமை கிடைத்து விடப் போகிறது?

நாகசுரத்தை தயாரித்த பிறகு தண்ணீரில் ஆறு மாதங்கள் ஊற வைப்பார்கள். இதற்கு தண்ணீர்ப் பாடம் என்று பெயர். பிறகு நல்லெண்ணெய், கடலை எண்ணெய் ஆகிய எண்ணெய்களையும் ஒரு குறிப்பிட்ட அளவில் கலந்து குழகுழப்பாக ஆக்கி அதில் நாகசுரத்தை ஊறப் போடுவார்கள். இதற்கு எண்ணெய்ப் பாடம் என்று பெயர். இவ்வாறு செய்வதனால் தான் வாயில் வைத்து வாசிக்கும் போது எச்சில் பட்டும் அது ஒட்டுவதில்லை. நாகசுரம் வாசிக்கும் போது ஒழுகும் எச்சில் நாகசுரத்தில் ஒட்டாது. வெடிப்பும் ஏற்படாது.



- ஆர். கே. அன்பரசன்

தனித்திருப்பது எது? - போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் 1987 பேர் கலந்து கொண்டு அசத்தியிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலானோர் சரியான விடையை எழுதவில்லை. அப்படி எழுதிய வர்களிலும் பலர், அதற்கு என்ன காரணம் என்பதைக் கூறவில்லை. பரிசுக்குரிய வர்களைத் தேர்ந்தெடுக்க குலுக்கல் முறையே கை கொடுத்தது.

சரியான விடை : தனித்திருப்பது சிலந்தி (எண் 5) காரணம் இதற்கு மட்டுமே எட்டுக் கால்கள். படத்தில் உள்ள மற்றவைகளுக்கு ஆறுகால்களே.

பத்து ரூபாய் பரிசு பெறுவோர் :

1. மா. ரமேஷ், தருமபுரி
2. ஆர். வினோத், கோவை - 9
3. என். அன்புச் செல்வி, அகமதாபாத்
4. எஸ். மாரிமுத்து, சித்தூர்
5. ப. செந்தில் குமார், சென்னை - 15
6. எம். கந்தசாமி, மாத்தூர்
7. க. நிசாந்த், கோவை - 38
8. மாஸ்டர் பிவின்ஜு, அவினாசி
9. ஈ.எஸ். பிரசாத், திருத்தணி
10. ப. தேவகுஞ்சரி, திருக்குவளை
11. பா. அனுத்தமன், சென்னை - 44
12. ம.க. நாராயணி, அண்ணாமலை நகர்
13. எம். விஷ்ணுப் பிரியா, தென்கரை
14. கே. அனிதா, சென்னை - 99
15. த. தீபக்ராஜ், சென்னை - 81

சரியான விடையை எழுதியவர்கள் : இவர்களுக்குப் பரிசு இல்லை என்றாலும், ஆயிரக் கணக்கான கோகுலம் வாசகர்களின் சார்பில் பாராட்டுகள்!

என். நாகராஜன், பூதலூர்; டி. லாகேஷ் ஸ்டலாபேட், அரக்கோணம்; ரூ. ஆர்த்தி, சென்னை - 43; அ. குமரேஷ், ஆம்பூர்; எம். மனோஜ் குமார், சிதம்பரம்; ச. விக்னேஷ் பிரசாத், அம்பத்தூர்; ஸ்ரீநிவாசராகவன், சென்னை - 99; எஸ். இரவி குமார், மன்னார்குடி; க. அருண்குமார், சென்னை - 61; வி.எஸ். லதா, கிழக்கு தாம்பரம்; பி. ராதா கிருஷ்ணன், நாகலூர் அஞ்சல்; பா. கிருஷ்ணகுமார், திருநெல்வேலி; ஆர்.எஸ். சிதாராணி, விருதுநகர்; ஈ. கோமான் விஜய், சென்னை - 23; சீதா, சென்னை - 20; கே. இந்துமதி, தேவனூர்புதூர் அஞ்சல்; ஆர். கிருத்திகா, ராணிப்பேட்டை; பா. ராமநாதன், சென்னை - 101; எஸ்.என். எஸ்.ஆர். ராம், அண்ணாமலை நகர்; எஸ். காளிதாசன், கோட்டைவிருப்பு அஞ்சல்; லெ. ஆனந்த குமார், காக்களூர்; ச. அனுஷா, வேலாயுதம்பாளையம்; எஸ். ஆனந்த், வில்லிவாக்கம்; பி. கவிதா, சென்னை - 17; ம. கார்த்திக், எஸ். ஆர். புரம் அஞ்சல்; ஏ. ஸ்ரீராம், காங்கயம்; ஆ. கார்த்திகா தேவி, பொய்யாமணி அஞ்சல்; எஸ். பரணீதரன், தாராபுரம்; எம்.ஜெ. ரூபேஷ், கொட்டாரம்; பி. ஸ்ரீவத்ஸன், மேட்டூர் அணை - 3; பி.பி. பாலசுப்ரமணியன், உதகை - 1; பி. கோபாலகிருஷ்ணன், சென்னை - 88; பா. புவன், வடக்கன்குளம்; ஜி. கார்த்திக், சென்னை - 43; வி. ஐஸ்வரியா, சென்னை - 35; ஆர்.ஆர். ரமணன், சேலம் - 3; அழ. இராமநாதன், ஈரோடு - 9; மா.பழனிவேல், விழுந்தமாவடி அஞ்சல்; டி. கிருஷ்ண மூர்த்தி, சிவகாசி. ஐ. செல்வம், கூவத்தூர்; ஏ. செல்வராஜ், மாத்தூர்; ஆர். மகேந்திரன், பொத்தனூர், ஆர். சுதர்சனா தேவி, திருகண்ணீஸ்வரம்; அழ. கருப்பை யன், சென்னை - 18; டி. விஜயகுமார், பொதியன்குளம்; கு. பிரபாகர், மேலகாசாகுடி; க. ஜீவானந்தம், வெண்ணந்தூர்; கே. சந்திரமோகன், சிறுமுகை; எஸ். எஸ். ஸ்ரீவத்ஸன், சென்னை - 4; ஜே. சுரேந்திரதாஸ், திருப்பத்தூர்; ஜி. மஞ்சுளா, குரோம்பேட்டை; எஸ். வினோத், ஆலங்காயம்; ஒ. ராஜ்குமார், மயிலாடு துறை - 1; ஏ. பி. எஸ். அண்ணா மலை, பெருந்துறை; ச. அவினாச், சென்னை - 41; மு. ஜெய் விஷ்ணு, தூத்துக்குடி - 5.



"என் பையன் பெயரை ராஜான்னு வெச்சது தப்பாப் போச்சி. பள்ளிக்கூடம் போக, குதிரை கேட்கி றான்!"

- ஜி. ரசேந்திரன், இஞ்சிக்கொல்லை.

அடைகாக்கும் அப்பா!

கடலில் பல்லாயிரம் அடி ஆழத்தில், பவளப் பாறைக் கூட்டத்தின் இடையே, பேட்டை ரௌடியைப் போல் வாள்மீன் ஒன்று அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்தது!

''டேய் குதிரை, வாடா வெளியே. உனக்கு வெட்கமா இல்லே?''

அடர்ந்த கடல் தாவரப் புதர்களில் சுருண்டு கொண்டிருந்தது குதிரை என்று அழைக்கப்பட்ட கடல் குதிரை மீன். வாள் மீன் செய்த அட்ட காசம், அதற்கு பயத்தைக் கொடுத்தது. பெயர் குதிரை மீனாக இருந்தாலும் பயந்த குணமுடைய அது புதர்களில் இன்னும் நெருக்கமாக ஒண்டிக் கொண்டது.

''டேய் குதிரை, நீ இப்போ வரலே... நானே அங்க வந்து உன்னை உண்டு இல்லைன்னு குத்தி எடுத்துடுவேன்'' என்று கத்தியது வாள்மீன்.

வாள்மீன் சுத்த முரடு. நியாய அநியாயம் பார்க்காது. அதன் முகத்துக்கு முன்னாடி வாள் போன்ற கூரான, கெட்டியான ஒரு உறுப்பு இருந் தது. அதைக் கொண்டு, எந்தப் பெரிய மீன் வந்தா லும் ஒரு குத்துக் குத்தித் தீர்த்து விடும். பெரிய பெரிய மீன்களுக்கெல்லாம் கூட அதைக் கண் டால் பயம்தான். அதுக்குத் தெரியாமல், பின் பக்கமாக வந்து தாக்கினால்தான் அதை வெல்ல முடியும். அதனால் குதிரை மீன் பயந்தது நியா யமே.

பயப்படுத்திக் கத்தியதோடு வாள் மீன் நின்று விடவில்லை. கூறியபடியே தனது வாள் மூக்கி னால் தாவரப் புதர்களை நீக்கிப் பார்த்தபடியே வந்தது.

அந்த நேரத்தில் கடலின் கீழ் மட்டத்தில் இருந்து தாவரக் கிளை ஒன்று பிடிவிட்டுப் போய் மிதந்து வந்தது. அது நல்ல வெளிர் பழுப்பு நிறம். அது வரை சாம்பல் நிறத்தில் இருந்த குதிரை மீன்,



ரேவதி

நொடியில் தன் வண்ணத்தை, தாவரக் கிளையின் நிறத்திற்கு ஏற்ப வெளிர் பழுப்பு நிறமாக்கிக் கொண்டு, அதில் புகுந்து மறைந்து கொண்டு மிதந்து சென்றது! வெகு தூரம் போன பிறகு தான் அது தன் பிடியை விட்டு பழைய நிறத்திற்குத் திரும்பியது!

எதிரே பார்த்தால் இன்னொரு சின்னக் குதிரை மீன்! முதுகுப் பக்கத்தில் இருந்த அழகான விசிறிச் செதிலை ஆட்டி ஆட்டி ஆனந்தமாக அது நீந்திச் சென்று கொண்டிருந்தது!

''தம்பி! அந்தப் பக்கம் போகாதே. அங்கே ஒரு ரௌடி வாள் மீன், சண்டை போட்டு அட்டகாசம் பண்ணிக்கிட் டிருக்கு. அதுக்கப் பயந்துதான் நான் நிறத்தை மாத்திக்கிட்டு, இந்தச் செடி யைப் புடிச்சு மறைச்சுக் கிட்டு வந் தேன்'' என்று எச்சரித்தது பெரிய குதிரை மீன்.

''ஐயோ!'' என்று உடலை வளைத்து நடுங்கிய சின்ன மீன், ''காலையில் நான் அதுங்கிட்ட சிக்கிக்க இருந்தேன். தப்பி வந்தது பெரிய புண்ணியம்'' என்று நின்றது.

''உன்னையுமா கலாட்டா பண் ணித்து?''

''ஆமாம் ஆமாம். நாமெல்லாம் ஆண்களே இல்லையாம்னு சொல்லி கலாட்டா பண்ணித்து!''


''ஒரு விதத்தில் நல்லா யோசிச்சுப் பார்த்தால் அது சொல்றதுல எந்தத் தப் பும் இல்லே. விலங்குகளில் பெண்தான் குட்டி போடும், பால் கொடுத்து வளர்க் கும். பறவைகளிலும் பெண்தான் முட்டை இடும், அடைகாக்கும், குஞ்சு பொரிக்கும். ஆனால் நம்ப கடல் குதிரை மீன் இனத்தில்தான், ஆண்களான நாம் முட்டைகளை வயத்துப் பையில் வைச் சுக்கிட்டு, அடைகாக்கிறோம். குஞ்சு பொரிக்கிறோம். வளர்த்து வெளியே அனுப்பறோம். அதாவது பெண்கள் செய்வதை நாமே செய்கிறோம். இதைத் தான் அந்தப் பொல்லாத வாள் மீன் அடிக்கடி சொல்லிக்காட்டி நம்மை இழிவு படுத்துது. டேய் அடைகாக்கும் அப்பான்னே அழைக்குது!'' என்று பெருமூச்சு விட்டது பெரிய மீன்.

''இதுக்கு நம்மை கலாட்டா பண்ணி என்ன பண்றது? இயற்கையின் படைப்பு அது,'' என்றது சின்ன மீன்.

''இருந்தாலும், இயற்கை நம்மை இப்படி வஞ்சகம் பண்ணியிருக்க வேண் டாம். நாலு மாதம் முன்னாடி என் மனைவி என் வாலின் கீழ்ப்பகுதியில் உள்ள என் பை உறுப்பில், பத்து செகண்டுகளில் இருநூறு முட்டைகளை இட்டு விட்டுப் போயிட்டாள். நான் தான் நான்கு வாரம் வரை அடைகாத்தேன். எல்லாம் என் வயிற்றுக் குள்ளேயே பொரிஞ்சு வெளியே போச்சு. ஒன்று கூட, பாசமா என் னோட தங்கலே. இது தான் எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு'' என்றது பெரியது.

''நான் இதைப் பற்றிக் கூடக் கவலைப் படலே... தாக்கி நம் மைத் தின்ன வரும் பகைவர்களிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நம்மிடம் என்ன தற்காப்பு இருக்கு? கடிக்கலாம் னால் வாயில் பற்கள் கூட இல்லையே!'' என்றது சின்ன மீன்.





"நாம் யாருக்கும் ஒரு தொந்தரவும் தருவதில்லை. மிகச் சிறிய புழுக்களைத் தான் நாம தின்கிறோம். இருந்தும் நம்மை இப்படித் தாக்க வருகிறதே மற்ற மீன்கள்?" என்று பெருமூச்சு விட்டது பெரியது.

திடீரென்று அவைகளைத் தாண்டி என்னமோ கீழே இறங்கியது. உடனே அது உயர்ந்த போதுதான் தாங்கள் மனிதர்கள் இறக்கிய வலைக்குள் சிக்கியிருப்பதை இரண்டு குதிரை மீன்களும் உணர்ந்து கொண்டன. அவைகளால் எதுவுமே செய்ய முடியவில்லை!

வலை, நீருக்கு மேல் உயர்ந்ததும் இரண்டு மீன்களும் மூச்சுத் திணறித் தவித்தன. இதற்குள் வலைக்குள் இவை சிக்கிக் கொண்டிருப்பதைக் கவனித்துவிட்ட ஒரு குட்டிப் பையன், "அப்பா, வலையில் குதிரை மீன் சிக்கியிருக்கு. நான் வீட்டுல வளர்க்கப் போறேன். உடனே பானையில இருக்கிற தண்ணிக்குள்ள இவைகளைப் போடுங்க" என்று கத்தித் தவித்தான். அவன் தந்தை அவசரம் அவசரமாக அவைகளை மட்டும் எடுத்து பானைக்குள் போட்டார்.

"அப்பா! பிழைத்தோம்!" என்று அமைதிப் பெருமூச்சு விட்டன இரண்டு மீன்களும்.

"பாபு, குதிரை மீன்களை வீட்டுல கண்ணாடித் தொட்டிகளில் வளர்க்கலாம். பார்க்க அழகாக இருக்கும். ஆனா, தொட்டிகளை இவை விரும்புவதில்லை. தொட்டிகளில் அதிக நாள் இவை உயிருடன் இருக்காது" என்றார் பையனின் அப்பா.

"இவைகளுக்கு ஏற்றபடி ஒரு ஆண் அல்லது பெண் குதிரை மீனைக் கொண்டு வந்து விட்டால் கூடவா?"

"ஆமாம். இவை தொட்டிகளில் சிறைப்பட்டு விட்டால் முட்டையிடுவது கூடக் கிடையாது" என்றார் அப்பா.


"அப்படியானால் இந்த இரண்டையும், அடுத்த முறை, கப்பல் மீன் பிடிக்க, கடலுக்குள் போகும் போது இந்தப்



"நாளை நமதேன்னு எப்பவாவது நினைப்பியா?"


"நினைப்பேன் சார்! சனிக்கிழமையன்னிக்கு."

– ஏ.ஆர். காளை, அரியகோஷ்டி.



"நாம அயோத்தியில் பிறந்திருந்தா நல்லா இருக்கும்டா. அங்க தான் அடிக்கடி பள்ளிக்கு லீவு விடறாங்க!"

– எஸ். ஜானகி, சென்னை - 2.



"நான்தான் பள்ளியில பர்ஸ்ட்டு."

"முதல் மார்க் வாங்குவியா?"


"இல்லே, மணி அடிச்சதும் வீட்டுக்கு ஓடிப் போவதில்!"

– பாலசெல்வகுமார், கிடாரங்கொண்டான்.

பானையை கடலுக்குள் வீசிவிடச் சொல்லுங்கள்" என்று இரண்டுக்கும் விடுதலை வழங்கினான் பாபு.

அறிவியல் உண்மைகள்

- கடற்குதிரைகளில் ஆணுக்கு (Hippo Campus) மட்டுமே முட்டைகளை அடைகாக்க வாயின் கீழ்ப்பகுதியில் பை இருக்கும்! பெண் இதில் முட்டையிடும். பத்து செகண்டுகளில் 200 முட்டைகள். அடைகாப்பது அப்பாதான்!
- நாலு வாரங்களுக்குள் முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளி வரும். வெளி வரும் போதே இவை சின்ன கடற்குதிரை மீன் வடிவில் இருக்கும்.
- கடற் குதிரைகள் வால்களால் எதையும் வளைத்துப் பிடித்துக் கொண்டு நிற்கும். உடல் நிறத்தை மாற்றிக் கொள்ளும்.
- இவைகளுக்குப் பற்கள் கிடையாது. புழு, கடல் தாவரத் துளிர்கள், பாசிகளே இவற்றின் உணவு.
- குஞ்சுகள் வெளியே வருகையில் கால் அங்குலம்தான் இருக்கும். 6 முதல் 12 அங்குலம் வரை வளரும்.
- மிகவும் பயந்த குணமுடையவை. தொட்டிகளில் அழகாக வளர்க்கலாம் என்றாலும் இவை இதை விரும்புவதில்லை. எனவே நீண்ட நாள் இருக்காது.
- நீந்த உதவக்கூடிய துடுப்பு இதற்கு முதுகிலே அமைந்திருக்கிறது. இதைக் கொண்டு, இது உயரவாட்டில் நீந்தி மேலே வருவது அழகான காட்சி.



நிலா வேண்டும்!

அதிகச் செல்லம் கொடுத்து வளர்க்கப் பட்ட சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் எதைக் கேட்டாலும் அவங்க அம்மா மறுக்காமல் வாங்கிக் கொடுப்பாள். அப்பா எவ்வளவு கண்டித்தும் அம்மா கேட்கவில்லை!

ஒருநாள் மாலை வானத்தில் நிலா தோன்றியது. சிறுவன் அதைக் காட்டி, ''எனக்கு அந்த நிலா வேண்டும்'' என்றான். எவ்வளவு விலையானாலும், நிலவை வாங்கித் தந்து குழந்தையை மகிழ்விக்க எண்ணினாள் அம்மா.

கடைத் தெருவுக்குச் சென்று நிலா விலைக்குக் கிடைக்குமா என்று விசாரித்தாள். கிடைக்காது என்றார்கள். சிறுவன் அழுகையான அழுகை அழுதான்.

வெளியில் போயிருந்த அப்பா வீடு திரும்பினார். வீட்டில் நடந்ததை அறிந்தார். அவர் நல்ல அறிவாளி.

''நிலாதானே உனக்கு வேண்டும்? என்னுடன் வா! நான் அதை உனக்கு வாங்கித் தருகிறேன்!'' என்று மகனிடம் கூறினார் அவர்.

சிறுவன் உடனே அவருடன் கிளம்பினான். வீட்டுக்குச் சற்றுத் தொலைவில் மலை ஒன்று இருந்தது.

''அந்த மலை மேல்தான் நிலா இருக்கிறது; வா! போய் எடுத்து வரலாம்'' என்றார் தந்தை.

இருவரும் மலை ஏறத் தொடங்கினர். சற்று நேரம் கழித்துப் பையன் நின்றான்.

''அப்பா! இன்னும் நீண்ட தொலைவு செல்ல வேண்டுமா?'' என்று கேட்டான் மகன்.

''ஆமாம்! இன்னும் அதிக தொலைவு போக வேண்டும்!'' என்றார் அப்பா.

இருவரும் தொடர்ந்து மலை ஏறினர். மேலும் சில நிமிடங்கள் சென்றன.

மகன் சொன்னான் : ''அப்பா! எனக்குக் களைப்பாயிருக்கிறது. காலும் வலிக்கிறது!''

''அப்படியானால் உனக்கு நிலா வேண்டாமா?'' என்று கேட்டார் அப்பா.

அது கேட்ட பையன் பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாயிருந்தான். அதுதான் அவன் பதில்.

''சரி, வீட்டுக்குப் போகலாம் வா!'' என்று சொல்லி அப்பா மலை இறங்கத் தொடங்கினார். பையன் அவரைத் தொடர்ந்து வந்தான்.

அப்போதிலிருந்து அவன் நிலா பற்றிப் பேசுவதே இல்லை!

- புத்தனாம்பட்டி சி. மணி.



★ ''குதிரைக்கு எத்தனை பற்கள்?'' பல புதிய அறிவியல் செய்திகளைத் தந்தது. - ஜோதிநகர் ப. கணேஷ், மதுக்கூர் எம். ஜஹாங்கீர், வெட்டமாங்குடி ஜே. ரபீக்.

★ கோகுலம் வந்ததும் முதலில் படிப்பது 'நூறு ரூபாய் இரகசிய'த்தைத் தான். பரதன் ஆபத்தில் சிக்கிக் கொண்டு விடுவானோ என்று தவிக்கிறேன்! தயவு செய்து பரதனைக் கவனமாக இருக்கும்படி செய்யுங்கள்! - கண்டியூர் மு. சேதுராமன், ராயபுரம் சி. சண்முகநாதன், காரைக்குடி இ. சித்ரலதா, எட்டயாபுரம் வ. லட்சுமணன், அருப்புக்கோட்டை வ. தங்கராசு, வட்டமாங்குடி கே. ரபீக், திவாகராயபுரம் எஸ். ஸ்ரீதர், பரங்கிப்பேட்டை கே. நடராஜன், தக்கோலம் அ. முல்நபா.

★ பிருந்தாவனத் துணுக்குகளைப் போடாமல் ஏமாற்றி விட்டீர்களே! - திருவொற்றியூர் ப. கோகுலப்பித்தன், தக்கோலம் முல்நபா, ஆட்டையாம்பட்டி பூதூர் ஏ.வி. இளங்கோ.

★ எல்லாம் உள்ள கோகுலத்தில், ''பேனா நண்பர்கள் பகுதியை'' எப்பொழுதுதான் தொடங்கப் போகிறீர்கள்? - கண்ணம்பாடி அரவிந்தன், புலியூர் மு. நரசிம்மன், பாளையங்கோட்டை இ. மாரியப்பன்.

★ நகைச்சுவைத் துணுக்குகள் எல்லாமே சிரிப்பு மூட்டி வயிற்று வலியைத் தந்தன! - மதுக்கூர் எம். அகமது அலி.

★ 'நடையைக் கட்டுங்க' என் போன்ற ரசிகர்களுக்குப் பிடித்த கதை! படத்தில்தான் கோட்டை விட்டு விட்டீர்கள்! - திருச்சி - 14, இரா. திலீப், சங்கராபுரம் ஆ. முருகன், கல்லூரணி எஸ். பி. முத்துமாரி.

★ விடுகதைகள் அழகான கற்பனை! இப்படியும் கூடக் கற்பனை செய்ய முடியுமா என்று அசந்து விட்டேன். குழந்தைகளின் கற்பனைக்கு வளமூட்டும் கோகுலத்தின் பணி வாழ்க! - விருகம்பாக்கம் மா. பரசுராமன், திருவாரூர் வெ. ரங்கமணி, திருப்புறம்பியம் கே. பி. சரவணகுமார்.

★ உண்ணாவிரதம் பற்றிய கட்டுரை அதிசயப்படும் பல புதிய செய்திகளை அளித்தது! - சரடிப்பட்டி ஆர். கே. காந்திதாசன், மற்றும் பலர்.

★ பதினைந்துக்கும் மேற்பட்ட கவிதைகளா! பலே பலே கோகுலம்! - எழுந்தருளும் கொண்டான்பட்டி பி. மாதவன், இரட்டைபாடி ஜார்ஜ், கருங்காலி பி. கார்த்திகேயன்.

★ 'கோபிக்காக...' ராமுவின் பரந்த நோக்கும் பிறருக்கு உதவும் மனப்பான்மையும் எல்லோருக்கும் வர வேண்டும். செய்தித்தாளின் பயனை உணர வைத்தது! - புஞ்செய்புளியம்பட்டி பி. எம். கிரிஜா, ஆலங்கல்மேடு சி. மகேஸ்வரன், திருப்புறம்பியம் கே. பி. சரவணகுமார், திருக்கோவிலூர் ஜி. சௌமிப்பிரியா, பெரம்பலூர் எஸ். காமராஜ்.

★ 'மணி பார்க்கக் கற்றுக் கொண்டேன்' அருமையிலும் அருமை! எப்படி சார் இம் மாதிரி வித்தியாசமான பயனுள்ள போட்டிகளைச் செய்ய உங்களுக்கு மட்டும் தோன்றுகிறது? - பாளையங்குடி சந்திரமோகன், கம்பரசம்பேட்டை கதாமணி, காவேரிப்பட்டணம் கே. சோமசேகர், விருதுநகர் ஆர். எஸ். தேவராணி, விருதுநகர் எஸ். மகேஸ்வரி, அந்தநல்லூர் பி. கோவிந்தசாமி, டி. வாழப்பட்டி வி. பார்த்திபன்.

★ விஷமுள்ள கடற் பிராணிகள் தொகுப்பு என் போன்ற மாணவர்களுக்குப் பெரிய உதவி! - மருவிப்பட்டணம் தாவூத் பாட்சா, முத்தாபுரம் சின்னப் பெருமாள், பரங்கிப்பேட்டை ஹ. அஷ்ரப் கஜ்ஜாலி, அண்ணாநகர் பா. ராமநாதன், தருமபுரி எம். சோமசுந்தரம், சிறுபுலியூர் க. ஜெயகாந்தன்.

★ மரம் வளர்ப்பதன் அவசியத்தை உணரச் செய்தது ''மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்!'' கட்டுரை! தெரியாத எத்தனை செய்திகள்! ஏ அப்பா! - விசலூர் ஜி. ஜி. கிருஷ்ணன், திருவள்ளுவர் நகர் ஆர். ரஞ்சித் குமார், தாளபாளையம் எஸ். நவநீதன், காளப்பூர் எஸ். காமராஜ், அந்தநல்லூர் பி. கோவிந்தசாமி, தேவூர் பத்மநாபன், குடந்தை எஸ். கே. மூர்த்தி, மேலகிருஷ்ணன்புதூர் பி. இராமகிருஷ்ணன், திருவொற்றியூர் ப. ராகவன்.

★ 'பறக்கும் கன்னிமாடம்' படக்கதை மனதை அள்ளிக் கொண்டது! மோகனின் அத்தையைப் போன்றவர்கள் இதைப் படித்ததும் திருந்துவார்கள்! - அம்மையார்குப்பம் மா. வெ. கிருஷ்ணன் நண்பர்கள், வடமாதிமங்கலம் வே. பூங்குன்றன் நண்பர்கள்.

★ 'தண்டலை கொடு' நமது முன்னோர்கள் எத்தனை உன்னதமான தரும நெறிகளுடன் வாழ்ந்தார்கள் என்பதை விளக்கி வெளிப்படுத்திக்க வைத்தது! - பல்லடம் கு. மனோகர், திருவண்ணாமலை மா. ரங்கன், சாத்தூர் மா. மாரிமுத்து, இடைப்பாடி க. ஜெயலட்சுமி, நுங்கம்பாக்கம் ஆ. ரமேஷ்.

★ பிப்ரவரி '92 கோகுலத்தில், ஆண் மின்மினி, பூச்சி என்றும், பெண் மின்மினி புழு என்றும் ரேவதி எழுதியுள்ளார். மார்ச் '93 இதழில் கிருஷ்ண முத்துராமலிங்கம் அவர்கள் ஆண் பெண் இரு இனத்திற்கும் சிறகு உண்டு எனவும் எழுதியுள்ளார். எது சரி? - தொம்பக்குளம் வெ. ஜெகதீசன்.

(''மின்மினிகளில் பல இனங்களில் ஆண்கள் மட்டுமே பூச்சி வடிவில் இருக்கும். பெண் வண்டுகள் வால்வாய்ப் புழுப் போலப் புழு வடிவிலேயே இருக்கும்'' என்கிறது கலைக் களஞ்சியம் (தொகுதி 8 பக். 334). ரேவதி எழுதியது இந்த வகை மின்மினிகளை. இவை தவிர ஆண் பெண் இரண்டுக்குமே சிறகு உள்ள இனங்களும் உள்ளன. இவைகளையே கிருஷ்ணமுத்து ராமலிங்கம் எழுதியுள்ளார் - ஆசிரியர்.)



ஆப்பிரிக்க காயத்திற்கு ஆறுதல்!

சென்னையில் இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற கிரிக்கெட் மேட்சில், இந்திய அணிக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்துள்ளது. இதைப் பற்றி கிரிக்கெட் ஆர்வமுடைய சிறுவர் என்ன நினைக்கிறார்கள் என்பதை இந்த அலசல் நன்கு விளக்கும்.

சூரஜ் : இந்தியா, டெஸ்ட் மாட்ச்ல ஜெயிச்சு ரொம்ப நாளாயிடுச்சு. இப்படி தொடர்ந்து ரெண்டாவது முறையும் அதுவும் சென்னையில ஜெயிச்சது ரொம்பப் பெருமையா இருக்கு இல்லே?

பாபு : ஆமா. அதுக்குக் காரணம் என்னன்னு நினைக்கறே? டீம்ல நிறைய 'யங்ஸ்டர்ஸ்' இருக்கறதுதான்.

ராம்பிரகாஷ் : அது மட்டுமில்லை... சாஸ்திரியை எடுத்ததும் ஒரு காரணம்.

ஸ்ரீதேவி : அவர் எவ்ளோ நல்ல பேட்ஸ்மேன்!

பாபு : இருக்கலாம். ஆனா அதெல்லாம் நீயும், நானும் பிறக்கறத்துக்கு முன்னாடி. இப்போதைய கதையைப் பேசு...

சூரஜ் : கரெக்ட். சீனியர்ங்கற ஒரே காரணத்துக்காக அவங்களையெல்லாம் வச்சுக்காம, டெண்டுல்கர், காம்ளி மாதிரி நம்ம தலைமுறை பிளேயர்ஸை எங்கரேஜ் பண்றதுனாலதான் ஜெயிக்க முடிஞ்சிருக்கு.

பாபு : அதுவுமில்லாம 'டெண்டு' மாதிரியெல்லாம் இப்போ வேற யார் ஆடறா? நீடிச்சு திறமையா ஆடற வராச்சே?

ஸ்ரீதேவி : மெட்ராஸ்ல ஜெயிச்சதுக்கு இன்னொரு காரணம் நம்ம ஸ்பின்னர்ஸ்.

துர்கா : ஆமாமா. எனக்கு கும்ப்ளே ஆட்டம் ரொம்பப் பிடிச்சிருக்குப்பா. ரொம்ப ரொம்ப நல்ல போலர்.

பாபு : ஏன், ராஜு மட்டும் என்ன?

சூரஜ் : போடா. ராஜு செம உருட்டல். 'மெய்டன்'ல ரெக்கார்ட் பிரேக் கரா வருவார்.

ராம்பிரகாஷ் : ஒன்னு கவனிச்சியா? மெட்ராஸ்ல கபிலோ, பிரபாகரோ எதிர்பார்த்த அளவுக்கு ஷைன் ஆகவே இல்லை.

ஸ்ரீதேவி : நம்ம கிரௌண்ட் அது மாதிரி. எங்கப்பா கூட சொல்லுவார். இங்க எப்பவுமே ஸ்பின்னர்ஸுக்குத்தான் சான்ஸ் அதிகம்.

பாபு : அந்த விஷயத்துல அஸார் ஒ.கே. மூணுஸ்பின்னர்ஸையும் ரொம்ப நல்லா பயன்படுத்திக்கிட்டார்.

சூரஜ் : சரியாப் போச்சு. அஸார் என்ன பண்ணார்? எல்லாம் கபில் குடுத்த ஐடியா. உண்மையான கேப்டன், கபில்தான்!

ஸ்ரீதேவி : உரக்கச் சொல்லாதே. உதைப்பாங்கடா யாராவது.

சூரஜ் : ஏன்? சொன்னா என்ன? வேணுன்னா அஸாரையே கேட்டுப் பாக்கட்டும். அவரே ஒத்துப்பார். கபில் மாதிரி ஒரு அனுபவம் மிக்க திறமை யான ஆட்டக்காரர் டீம்ல இருந்ததால தான் இப்படி ஜெயிக்க முடிஞ்சது.

துர்கா : அப்ப சாஸ்திரியை எடுத்தது மட்டும் கரெக்டா?

பாபு : ரொம்ப கரெக்ட். அவருக்கு ஃபார்ம் போயிடுத்து. வேணும்னா அம்பயரா நிக்கட்டும்!

ஸ்ரீதேவி : போகட்டும். மெட் ராஸ்ல ஜெயிச்சத்துக்கு, கிரௌண்ட் ராசியும் ஒரு காரணம்தான் இல் லையா?

பாபு : அதெல்லாம் ஒண்ணு மில்லே. ராசியாவது, ஒண்ணாவது? நம்ம பிளேயர்ஸ் உயிரைக் கொடுத்து திறமையா ஆடினாங்க. ஜெயிச்சோம். இதுல கிரௌண்ட் ராசி எங்கே வந்தது?

ராம்பிரகாஷ் : ஆமாமாம். இந்தியாக் குள்ள எங்க நடந்தாலும் நாம ஜெயிப் போம். ஆனா வெளில போனாத்தான்...!

துர்கா : அது ஏன்?

பாபு : 'பிட்ச்'தான் காரணம்! நம்ம பிட்சை நமக்கேத்தாப்போல பண் ணிக்கறோம். அதே மாதிரி அவங்க நாட்டுல பிட்சை அவங்களுக்கு ஏத்த மாதிரி செஞ்சுப்பாங்க - எங்கப்பா சொன்னார்.

சூரஜ் : அதுவுமில்லாம, இங்க நாம ஜெயிச்சதுக்கு முக்கியமா ஒரு காரணம் இருக்கு. இங்கிலாந்துக்காரங்களுக் கெல்லாம், நல்லா 'ரெயிஸ்' ஆகற பால்ல விளையாடியே பழக்கம். நம்ம போலர்ஸ்ஸெல்லாம் சூப்பர் உருட்டல் கேஸ். டிஃபென்ஸ் வெச்சா கேட்ச் ஆயிடும். தூக்கினா போல்ட்! கும்ப்ளே என்ன டெக்னிக்கா போடறார்! சும்மா சொல்லக் கூடாது. கண்ணாடி (கும்ப்ளே) பெரியாள்!



துர்கா : ஸ்ரீதேவி, நீ கிரௌண்டுக்குப் போயிருந்தே, இல்ல?

ஸ்ரீதேவி : ஆமா. ஆனா ஒரே போர். ரொம்ப இரைச்சல். என்னதான் நேரில் பார்த்தாலும், வீட்டுல, சௌகரியமா மின் விசிறிக்குக் கீழே உட்கார்ந்துக் கிட்டு டீ.வி. பார்க்கற மாதிரி வராது. அதோட டீ.விலதான் ரீப்ளே பாக்க லாம்.

சூரஜ் : நானும் போயிருந்தேன். விஸில் ஊதக் கூட விடல்லே. போலீஸ் காரங்க எடுத்துக்கிட்டாங்க. எஞ்சாய் பண்ணவே முடியல.

ஸ்ரீதேவி : ஆனா அந்த ஸைடு ஸ்கிரீன் ரொம்ப இன்ட்ரஸ்டிங் இல்ல?

ராம்பிரகாஷ் : ஆமாமா. ஸ்லோ மோஷன்ல அலிபாபா குகை மாதிரி அது திறக்கறது ரொம்ப ஜோர்.

ஸ்ரீதேவி : ஆனாலும் இந்த மேட்ச்ல எனக்குப் பிடிக்காதது ரெண்டு விஷயம். ஒண்ணு இங்கிலாந்து கொடியை இவங்க எரிச்சது. எத்தனை பெரிய அவமானம் நமக்கு? ரொம்ப அசிங்கம். நம்ம தேசியக் கொடியை அவங்க எரிச்சா எவ்ளோ கஷ்டமா இருக்கும்?



* அசாருதீன்



* கும்ளே



* டெண்டுல்கர்

பாபு : இன்னொண்ணு, மேன் ஆஃப் தி மாட்ச் கௌரவத்தை என்னைக் கேட்டா ஓராயிஸுக்குத்தான் குடுத்திருக்கணும். டெண்டுல்கர் நல்லா ஆடினது ஆச்சர்யமில்ல. ஓராயிஸ்லாம்... செஞ்சுரி அடிச்சது எத்தனை பெரிய விஷயம்! அதுவுமில்லாம இது அவரோட பர்ஸ்ட் செஞ்சுரி வேற. குடுத்திருக்கலாம்.

ராம்பிரகாஷ் : ஆனா ஒண்ணுப்பா. சௌத் ஆப்ரிக்கால பட்ட அடிக்கு இப்பத்தான் நல்ல ஆறுதலான மருந்து கிடைச்சிருக்கு. இனிமே உலகக் கோப்பைல எப்படி பண்ணப் போறாங்களோ?

சூரஜ் : சந்தேகமே வேணாம். வேர்ல்ட் கப், சௌத் ஆப்ரிக்காவுக்குத்தான்.

ஸ்ரீதேவி : அதெல்லாம் சொல்ல முடியாது. பாகிஸ்தான் டீம் ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கு.

துர்கா : பாக்கலாம், பாக்கலாம். நீங்கள்லாம் இப்படியே சொல்லிட்டிருங்க. வேர்ல்ட் கப் நமக்குத்தான் கிடைக்கப் போறது.

சூரஜ் : நம்ம பிளேயர்ஸ்கிட்டே ஒரே ஒரு குறை. டெஸ்ட் மேட்சை ஒன்டே மாதிரியும், ஒன்டே மேட்சை டெஸ்ட் மாதிரியும் சில சமயத்துல ஆடிடுவாங்க.

பாபு : கரெக்டா சொன்னே! அதுவுமில்லாம, அவங்கவங்க பொஸிஷன் மாறாம ஆடணும். அது ரொம்ப முக்கியம். முன்னெல்லாம் அஸார் அவசரப்பட்டு, ஆர்டர் மாத்தி முன்னால இறங்கி அவுட் ஆயிடுவார். அது மாதிரி ஆயிடாம பாத்துக்கணும்.

ஸ்ரீதேவி : மொத்தத்துல மெட்ராஸ் டெஸ்டைப் பொறுத்தவரைக்கும் நம்ம பிளேயர்ஸின் அருமையான ஆட்டத் திறமையாலதான் நாம ஜெயிச்சோம். இதைத் தொடர்ந்து காப்பாத்தி ஆடினாங்கன்னா போதும். வேர்ல்ட் கப்பை ஈஸியா ஜெயிக்கலாம்.

சூரஜ் : ஜெயிச்சா சந்தோஷம்தான்!

பாபு : வேர்ல்ட் கப் இருக்கட்டும். இங்கிலாந்தோடவே ஒன்டே ஸீரீஸ் இருக்கே.

ராம்பிரகாஷ் : எழுதி வெச்சிக்கோ, நிச்சயமா நாமதான் ஜெயிக்கப் போறோம்!

கட்டுரை வடிவம் : ஸ்ரீராமன்,
பா. ராகவன்,
புகைப்படம் : காமாட்சி
சுப்ரமண்யம்



அரசரும் புலவரும்

புலவர் ஒருவர் ஒரு குறுநில மன்னரைக் கண்டு, ''அரசே தங்களைக் காண நெடுந்தொலைவு கடந்து வந்துள்ளேன். தங்களைக் கண்டதும் என் துன்பமெல்லாம் பறந்து விட்டது'', என்றார். அரசர்க்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. உடனே அவர் மந்திரியைப் பார்த்து புலவர்க்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னார்.

அரசரைப் புகழ்ந்ததால்தான் நமக்கு அரசர் ஆயிரம் ரூபாய் தரச் சொல்கிறார், இன்னும் அதிகமாகப் புகழ்ந்தால் அதிகமாக ரூபாய் கிடைக்கும் என ஆசைப்பட்ட புலவர், ''அரசே தாங்கள் அரசர்கெல்லாம் அரசர், சக்கரவர்த்தி, ராஜாதிராஜன்'' எனப் பலவாறு புகழ்ந்தார். அரசரும் மந்திரியைப் பார்த்து புலவர்க்கு பத்தாயிரம் ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்யச் சொன்னார்.

புலவர்க்கு வியப்புத் தாங்க முடியவில்லை, சக்கரவர்த்தி என்று புகழ்ந்ததற்கே பத்தாயிரம் ரூபாய் கிடைக்கிறது என்றால், இன்னும் கூடுதலாகப் புகழ்ந்திருக்கலாமே என்று தோன்றியது. உடனே அவர் அவசர அவசரமாக, ''அரசே, நீங்கள் தேவர்க்கெல்லாம் அரசனான தேவேந்திரன். உம்மைப் போல் யாருமில்லை'' என்றார். அரசர் புலவர்க்கு ஐம்பதாயிரம் ரூபாய் கொடுக்கச் சொன்னார்.

புலவர்க்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை, அவர், ''அரசே நீங்கள் மகா விஷ்ணுவுக்குச் சமமான புகழையும், வீரத்தையும், அறிவையும் உடையவர்'' என்றார். அரசர் புலவர்க்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுக்கச் சொன்னார்.

புலவர் ஒரு லட்சம் ரூபாய்க்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவருக்கோ வெறும் ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்பட்டது. புலவருக்குக் குழப்பமாக இருந்தது. அவர் அரசரைப் பார்த்து, ''அரசே, ஒரு லட்சம் ரூபாய் தருவதாகச் சொல்லி விட்டு வெறும் ஆயிரம் ரூபாய் தந்திருக்கிறார்களே!'' என்று கேட்டார்.

அரசர் சொன்னார், ''நான் ஒரு சாதாரணமான குறுநில மன்னன் என்பது உமக்குத் தெரியும். தெரிந்திருந்தும், நீர் என்னைச் சக்கரவர்த்தி, தேவேந்திரன், மகாவிஷ்ணு என்றெல்லாம் புகழ்ந்தீர்; என்னை மகிழ்ச்சி கொள்ள வைக்க நீர் அப்படிச் செய்தீர்! அது போல் நானும் உம்மை மகிழ்ச்சியடைய ஒரு லட்சம் தருவதாகச் சொன்னேன்'' என்றார்.

அதிலிருந்து புலவர் யாரையும் அளவுக்கு அதிகமாகப் புகழ்வதில்லை.


- என். ஆனந்த், கொட்டாரம்.

'''மேட் (made) இன் இந்தியா' விற்கு எதிர்பதம் சொல்லு?''

''தெரியலையே!''

''பள்ளம் இன் இந்தியா' தான்!''


- ப. கணேஷ்.



ரொட்டியை எடுக்க முடியுமா?




A WHOLE LOT OF SPECIAL STORIES FOR YOU THIS SUMMER!
GOKULAM
The monthly magazine for children
* SUMMER FEATURE!
Places to see this season!
SUMMER SPECIAL
GOKULAM
BUY A COPY TODAY!
March '93 issue on sale!
96 pages for just Rs. 3!
OR WRITE TO 'GOKULAM' (ENGLISH), 47 JAWAHARLAL NEHRU ROAD, EKKADUTHANGAL, MADRAS - 600 097 FOR A SUBSCRIPTION.



இங்கிலாந்தில் செஞ்சது!

கொ.மா.கோதண்டம்

கோடை விடுமுறை முடிந்து அந்த மேல்நிலைப் பள்ளி திறந்து ஒரு வாரமாகிறது. உணவு வேளை முடியப்போகிறது. சில மாணவர்கள் பேசிக்கொண்டிருந்தனர்.

''முத்து! அதோ மணி போகிறான் பார்த்தியா? இன்னிக்கும் புது வெளிநாட்டு உடை!''

''ஆமா சுந்தர், அவனுக்கென்ன? அவங்கப்பா வட்டிக்கடை நடத்தி சம்பாதிக்கிறாரு. மணி நித்தம் ஒரு ஃபாரின் டிரஸ், ஃபாரின் வாட்ச், ஃபாரின் பேனா. அவனுக்கு எல்லாமே வெளிநாட்டுல தயாரிச்சதா இருக்கணும். சுத்த வெளிநாட்டு மோகம் பிடிச்சவன். அவன் பழகறது கூட அவன் மாதிரி வெளிநாட்டுப் பொருட்களை விரும்புறவங்ககிட்டேதான். மத்தவங்களை அலட்சியமா பார்ப்பான். விடு சுந்தர். நமக்கு அவன் நட்பே வேண்டாம். நாம படிப்போம்'' - கொடி மேடையில் அமர்ந்து மாணவர்கள் முத்துவும், சுந்தரும் பேசிக்கொண்டிருந்தனர்.

''அப்படின்னா அவன் பெரிய தலைக்கனம் புடிச்சவனா?'' என்றான் அந்த ஆண்டு புதிதாகச் சேர்ந்த கண்ணன்.

''ஆமா கண்ணா! நீ சிம்பிளா கைத்தறி



யாடை உடுத்திவிருக்கே. உன் கூட எல்லாம் அவன் பேசவே மாட்டான்'' என்றான் முத்து.

''அவனை நாய்க்குட்டியாட்டம் என் பின்னாலேயே வர வச்சிடட்டுமா...?''

''உன்னால முடியாது கண்ணா. பந்தயம் வச்சா தோத்துப் போயிடுவே. மணி உன்னைப் பார்க்கவே அருவருப்படைவான். அப்புறம்தானே பேசறது?'' ''பாத்துக்கோ.''

''நாளைக்கு ஸ்கூல் விட்டதும் மணியை எம் பின்னாலேயே வரும்படி செய்யாட்டி எம் பேரை மாத்தி வச்சிடுங்க. நா வரேன்'' என்று கண்ணன் ரோஷ மாகப் பேசி விட்டு வேகமாகச் சென்றான்.



''ரிங் வாட்ச்கன்னா என்ன கண்ணா?'' - மணி ஆவலுடன் கேட்டான். உண்மையாகவே அது, அதுவரை அவன் கேள்விப்படாத பெயர்.

''மோதிரத்துலேயே வாட்ச் ரொம்ப சின்னதா, அழகா இருக்கும். விலை ஆயிரம் ரூபா ஆகும்.''

''அப்படியா? நான் ரிங் வாட்சைப் பார்த்ததேயில்லை! விலையைப் பத்தி எனக்குக் கவலையேயில்லை. பத்தாயிரமானால் கூட நான் வாங்கிடுவேன். ஆனா அதை எனக்கு இப்பவே காட்டணும்.''

''இப்பவே முடியாது. நாளைக் குன்னா பார்க்கலாம். நாளைக்கு ''பி'' கிளாஸ் பக்கம் வா! எங்க மாமா வீட்டுல தான் ரிங் வாட்ச் இருக்கு. நானே உன்னைக் கூட்டிக்கிட்டுப் போய்க் காட்டறேன்'' என்றான் கண்ணன்.

பள்ளி விட்டதும் செருக்கோடு சென்ற மணியை கண்ணன் பின் தொடர்ந்தான்.

''பிரதர் நீதான் மணியா?'' என்று வலியக் கேட்டான்.

திரும்பிப் பார்த்தான் மணி.

''வெளிநாட்டுப் பொருட்களை நீ ரொம்பப் பிரியமா வாங்குவேன்னு கேள்விப்பட்டேன். அதான் கூப்பிட்டேன்.''

''ஆமா. அதுக்கென்ன இப்போ? நான் ஃபாரின் சாமான்களை மட்டுமே வாங்கி உபயோகிப்பேன். நம்ம நாட்டுல எல்லாமே போலி, கலப்படம், நேர்மையில்லா மனிதர்கள். நாணயமில்லாத வியாபாரம்! அதனால நம் நாட்டுப் பொருட்களை நான் கையால கூடத் தொட மாட்டேன். சரி! இப்ப நீ எதுக்கு என்னைக் கூப்பிட்டே?''


''என் பேரு கண்ணன். இந்த ஆண்டு தான் பள்ளியில் சேர்ந்திருக்கேன். எங்க சித்தப்பா வீட்ல தங்கியிருக்கேன். எங்க மாமா இங்கிலாந்துல இருக்காரு. ரிங் வாட்ச் அனுப்பியிருக்காரு. அதை வித்துடலாமுன்னு பார்த்தேன். விசாரிச்சதுல நீதான் ரொம்பப் பிரியமா வாங்குவேன்னு நண்பர்கள் சொன்னாங்க. அதான் கேட்டேன்.''

அடுத்த நாள் மாலை. பள்ளி முடிந்ததும், கண்ணனைத் தேடிக் கொண்டு மணி வந்ததையும், இருவரும் ஒன்றாகச் செல்வதையும், குறிப்பாக மணி கண்ணனிடம் குழைந்து குழைந்து பேசியதையும் கண்டு நண்பர்கள் திகைத்தனர்!

''கண்ணன், சொன்னது போல செய்து காட்டிட்டானே! கர்வம் பிடிச்ச மணியைப் பாரு, அவன் பின்னாலேயே போறதை! என்னதான் தந்திரம் பண்ணினானோ அவன் கூடவே போறானே?'' என்று முத்துவும், கந்தரும் வியப்புடன் பேசிக் கொண்டார்கள்.

''கண்ணா! நீ உங்க மாமா வெளிநாட்டுல இருக்காருன்னு சொல்றே! அப்ப நீ ஏன் நம் நாட்டு முரட்டு காட்டன் துணிகளை உடுத்துறே?'' என்று தனது சந்தேகத்தைக் கேட்டான் மணி.

''எங்க மாமாவே சொல்லுவாரு, நம்ம நாட்டு சீதோஷ்ணத்துக்கு பருத்தி துணிதான் உடம்புக்குப் பாதுகாப்பா இருக்கும். டெரிலீன், பாலியஸ்டர் துணிகளை உடுத்தினா தோல் வியாதி வரும். இதய வலி வரும். அதனால, அதுகளை வாங்கி உபயோகிக்காதேன்னு'' என்றான் கண்ணன்.



"இந்த தெருவில் காலையில் வந்தா மெதுவா போகலாம்... ராத்திரி வந்தா வேகமா போக லாம்..."

"ஏன் அப்படி?"

"நாய் துரத்தும்..."

- ஆர். கிருத்திகா.

இதைக் கேட்டதும் மணி ஏதோ யோசிப்பது போலத் தோன்றியது. சைகிளில் சென்றவாறே காலைத் தூக்கி முழங்கால் வரை பேண்டை தூக்கி, ''அப்ப இது கூட அதனாலதான் இருக்குமோ?'' என்று கேட்டான்.

கண்ணன் மணியின் காலைப் பார்த்தான் கருப்பாக திட்டுத்திட்டாக மச்சங்கள். ''அடடே! இதை பத்துன்னு சொல்லுவாங்க. இதுக்கு இன்னொரு பேரு சோரியோ சிசஸ். இதுக்கு உடனே மருத்துவம் பார்க்கலைன்னா உடம்பு பூரா வந்து ரொம்பத் தொல்லைப்படுத்தும்.''

''அப்ப இதுக்கு என்ன செய்யலாம் கண்ணா?''

''மொதல்ல உடம்புல காத்துப் படும்படி பருத்தித் துணிகளைப் போடு. உடனே டாக்டருகிட்டே காட்டி ஊசி போடு. இல்லே, பேயகத்தி இலையை அரைச்சிப் போடு. சரியாப் போகும்.''

அவர்கள் செல்லும் சாலையில் நெரிசல் அதிகமாகவே சிறிது தூரம் இறங்கி நடந்து சென்றார்கள். ஒரு திருப்பத்தைக் கடந்ததும் சிறு சந்து வழியாக மணியை அழைத்துச் சென்றான். கண்ணன் ஒரு வீட்டின் முன்னே சைகிளை நிறுத்தி னான்.

''இப்ப இந்த வீட்டுக்குள்ளே நாம போறோம். இங்கே யாரையும் உள்ளே விடுறது இல்லே. உனக்காக நான் ஸ்பெஷல் பர்மிஷன் வாங்கியிருக்கேன். ஆனால் உள்ளே நடக்கிற வேலைகளை நீ பேசாம பார்க்கணும். எதுவானாலும் வெளியே வந்து பேசிக்கிடலாம். என்ன மணி சரிதானே?'' என்று கேட்டான் கண்ணன்.

''சரி கண்ணா.''

இருவரும் வீட்டினுள் சென்றார்கள். கண்ணன் முதலில் ஓர் அறைக்குள் சென்று ஏதோ பேசி விட்டு வந்தான். பிறகு பின்புறம் உள்ள ஹாலுக்கு மணியை அழைத்துச் சென்றான். அங்கே பெரிய ஹாலில் இருந்த பெரிய மேசையைச் சுற்றி வட்டமாக இளம்பெண்கள் உட்கார்ந்திருந்தனர். ஒவ்வொருவர் முன்பும் ஒவ்வொருவிதமான கைகடிகார உறுப்புகள் சிறு சிறு குவியல்களாக இருந்தன. ஒருவர் ஒரு உறுப்பை மாட்டி அடுத்தவர் கையில் தர, அவர் இன்னொரு உறுப்பை மாட்டி அடுத்தவரிடம் தர, இப்படியாக அது சுற்றிச் சுற்றி ஒரு முழு வாட்சாகத் தயாராகி கடைசியில் ஒரு பெட்டியில் அடுக்கப்படுவதை இருவரும் பார்த்தனர்.

ஆனாலும் பெயர் எண்கள் உள்ள அட்டை மட்டும் பொருத்தப்படவில்லை. கண்ணன் அதிலிருந்து ஒரு வாட்சை எடுத்து மணியிடம் தந்தான்.

''எப்படி இருக்கு மணி?''

மணி அதை வியப்புடன் பார்த்து விட்டு, ''அட! ஃபாரின் வாட்ச் மாதிரியே ரொம்ப நல்லா இருக்கே கண்ணா?''

''சரி வா நாம போவோம்'' இருவரும் வெளியே வந்தனர்.

''உன் வெளிநாட்டு வாட்சைக் கழற்றிக் கொடு'' என்று கண்ணன் கேட்க, மணி தனது வாட்சைக் கழட்டித் தந்தான்.

''இது இங்கிலாந்தில் தயாரானது கண்ணன். எங்க பெரியப்பா வாங்கித் தந்தார். ரெண்டு வருஷம் ஆச்சு. அப்பவே அறுநூறு ரூபாய். பிரமாதமா ஓடுது!''

கண்ணன் சிரித்து விட்டு, ''இது இங்கே தயாரானதுதான்'' என்றான்.

''என்ன கண்ணா சொல்றே! மேடின் இங்கிலாந்துன்னு இதுல போட்டிருக்கே பார்த்தியா?''

''சரிதான் போ! பெயர், நம்பர் அட்டையையும் மேல் கண்ணாடியையும் மட்டும்தான் இன்னொரு இடத்தில் மாட்டி, மேடீன் இங்கிலாந்துன்னு ஒட்டறாங்க. இப்ப நீ கட்டி இருப்பது கூட இப்படி வந்ததுதான்!

மணி சிறிது நேரம் அதிர்ச்சியோடு நின்றான்.

''இந்த வாட்சுகள் எல்லாமே தரமான இந்தியத் தயாரிப்புகள். ஆனா, இதுல நம்ம நாட்டின் பெயர் இருந்தால் உன்னைப் போன்ற வெளிநாட்டுப் பொருள் விரும்பிகள் இதை மதிப்பதில்லை. அதனால, இதைச் சில பேர் வாங்கி மேடீன் இங்கிலாந்துன்னு பெயர் போட்ட முகப்பை மாட்டி பத்து மடங்கு விலை வைத்து உன்னைப் போன்றவர்களிடம் வித்துடறாங்க. இதுல வேடிக்கை என்ன தெரியுமா? இந்த அருமையான நம்ம நாட்டுத் தயாரிப்புகளை இங்கிலாந்து உட்பட வெளிநாட்டுக்காரங்க பிரியமா வாங்கிக்கிறாங்க! இதே மாதிரி இங்கே ரிங் வாட்சும் தயாராகிறது. இதை இங்கேயே வாங்கினால் முன்னூறு ரூபாய். வெளிநாட்டுப் பொருள்னு ஏமாத்தி விக்கறவங்ககிட்டே வாங்கினால் ஆயிரம் ரூபாய். உனக்கு எது வேணும்?''

மணி அசையாது நின்றான்.

''என்ன மணி பேசாம இருக்கே?'' என்றான் கண்ணன்.

''கண்ணா இப்படியும் நடக்குமா! நம்ம நாட்டுலேயும் தரமான பொருள்கள் தயாராகுதுன்னு எனக்குத் தெரியாமே போச்சே. எனக்கு புத்தி வந்திருக்க. இனிமே இந்தியனாவே வாழ்வேன். இந்தியப் பொருட்களையே வாங்கி உபயோகிப்பேன். இப்ப எனக்கு இங்கே தயாராகும் ரிங் வாட்சே போதும்'' என்றான் மணி.

''மிக்க மகிழ்ச்சி மணி!''

மணி கண்ணனின் கையைப் பிடித்துக் குலுக்கினான். தவறான பாதையில் சென்ற ஒரு நண்பனை மீட்டு விட்ட நிறைவு அதில் தெரிந்தது.



பாவம் வெள்ளையப்பன்!

அரசாங்க நோட்டு அச்சடிக்கும் இடத்தில் மிகுந்த பாதுகாப்புடன் அச்சடிக்கப்பட்டு நோட்டுகள் சரக்...சரக் என வெளியே வந்து கொண் டிருந்தன.

ஒரு பத்து ரூபாய் நோட்டிலிருந்து அட்டகாசமான சிரிப்பு வந்தது!

பத்து ரூபாய் நோட்டின் வெள்ளைப் பகுதியிலிருந்துதான் சிரிப்பு வந்தது. அந்த நோட்டின் மற்ற பகுதிகள் அந்த வெள்ளை பகுதி வெள்ளையப்பனைப் பார்த்து, ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று கேட்டன.

''ஹாஹ்ஹா... நான் எவ்வளவு வெள்ளையாக இருக்கிறேன் பார்த்தீர்களா?'' என்று கூறி விட்டு மீண்டும் சிரித்தது பத்து ரூபாய் நோட்டின் வெள்ளை யப்பன்.

அந்த நோட்டின் மற்ற பகுதிகள் தங்களை ஒருமுறை பார்த்துக் கொண்டன.


''ஆமாம்.... நீ சொல்வது உண்மை தான்... நாங்கள் கறுப்புதான்'' என்றன.

அரை மணி நேரம் சென்றிருக்கும்.

இன்னொரு பணியாள் வந்து, நோட்டுகளை வரிசையாக அடுக்கினார்.

நூறு நோட்டுக்களை எண்ணி ஒன்று சேர்த்தார். அதன் மேல் மஞ்சள் காகிதம் ஒன்றை வைத்தனர். வெள்ளைப் பகுதியை முழுவதுமாக மூடினார்.

''பார்த்தீர்களா... எனக்கு மட்டும் எவ்வளவு பாதுகாப்பு'' - வெள்ளைப்



பகுதி வெள்ளையப்பன் செருக்குடன் கொக்கரித்தது.

மற்ற பகுதிகள் தலைகுனிந்தன.

அடுத்த மூன்று நிமிடங்களில் அந்த நூறு நோட்டுகள் கொண்ட கற்றை ஒரு பஞ்சிங் மெஷினுக்குள் வைக்கப் பட்டது.

வெள்ளைப் பகுதியை சரியாக வைத்து வேகமாக பஞ்ச் செய்தார்கள். வெள்ளைப் பக்கத்தின் வயிற்றுக்குள் பலவந்தமாக இறக்கப்பட்ட கம்பி, பின்பக்கம் வளைக்கப்பட்டு அழுத்தப் பட்டது. வெள்ளைப் பகுதி திக்குமுக் காடியது!

நோட்டின் மற்ற பகுதிகள், ''அய்யோ... பாவம்... வெள்ளையப் பன்'' என்று பரிதாபப்பட்டன.

வெள்ளைப் பகுதிக்கு ஒரே வலி. அழுதது.

கொஞ்ச நேரத்தில் வலி சரியாகிப் போனவுடன் மீண்டும் செருக்கு தலைக் கேற மறுபடி கொக்கரித்தது.

பத்து ரூபாய் கட்டு அச்சகத்தை விட்டு வெளியே அனுப்பப்பட்டு, பிரிக் கப்பட்டு ஒவ்வொரு இடமாக மாறி சுமார் ஐநூறு பேர் கை மாறி விட்டது.

இப்போது வெள்ளையப்பன் மேல் நிறைய எழுத்துக்கள்! ஏராளமான பின் குத்துகள்! ஆனால் மற்ற அழுக்குப் பகுதிகள் மட்டும் பழையபடி பளிச் சென்றிருக்க வெள்ளையப்பன் மட்டும் பழசாகிப் போனான்.

நாளாக நாளாக நோட்டுகள் பழ சாகிப் போயின.

வெள்ளையப்பன் மீது பின் குத்தப் பட்டு கொஞ்சம் கொஞ்சமாக ஏரான மான ஓட்டைகள்! வெள்ளையப்ப னுக்கு உடம்பெல்லாம் தாங்க முடியாத வலி.


மற்ற பகுதிகள் பாதிப்பு ஏதும் இன்றி அவனைப் பார்த்தன.

''பாவம்... வெள்ளையப்பா... உன் மீதுதான் எத்தனை குத்துக்கள்!'' என் றன.

''எல்லாம் என் தலைகனத்துக்குக் கிடைத்த தண்டனை.''

உண்மையை உணர்ந்து வருந்தியது வெள்ளையப்பன்.

- பி. ஆர். பார்த்தசாரதி



பெருமாள் மாடு

பெருமாள் மாட்டைக் காணவே
பிரியம் கொண்டு குழந்தைகள்
அருகில் சென்று கைகளால்
ஆசை யோடு தொடுகிறார்


பூம்பூம் என்று மத்தளம்
பேசும் போது குழந்தைகள்
ஆம்ஆம் என்று மகிழ்ச்சியில்
ஆடி ஆடிக் குதிக்கிறார்

மாட்டுக் காரன் சொல்வதை
மாடும் தெரிந்து கொள்வதாய்
காட்டிக் கொண்டு ஆடினால்
கலக லப்புப் பொங்குதாம்

தெருவில் உள்ள குழந்தைகள்
சேர்ந்து வந்து துள்ளிட
உறுமு கின்ற மத்தளம்
ஊரை ஒன்று சேர்க்குதாம்

மாட்டுக் காரன் கேட்டதும்
மக்கள் காசு தருகிறார்
கூட்ட மாகக் குழந்தைகள்
கூடி நின்று சிரிக்கிறார்

- அழகனார்



உங்கள் நூலகம்

வடலூரர் இராமலிங்க சுவாமிகள், திரு சம்பந்தம், பக் 112 ரூ. 12/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

'வள்ளலார்' என்று பெருமையாகப் போற்றப்படும் இராமலிங்க அடிகளாரின் வாழ்க்கை வரலாறு. வெறும் தகவல் நூலாக இல்லாது அவரது வாழ்க்கையின் சுவையான நிகழ்ச்சிகளையும் தந்துள்ளார். நடை மிகத் தெளிவாக சலிப்பின்றி இருப்பது கவனிக்கத்தக்கது. சில அருட்பாக்களை இக் காலத்தவரும் படித்துச் சுவைக்கும் வண்ணம் தக்க இடங்களில் தந்திருப்பதை நன்கு பாராட்டலாம்.

இசைவானில் இளைய தலைமுறை, க.ரா, பக். 156, ரூ. 22/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17,

இன்று இசையுலகில் பிரபலங்களாகத் திகழும் இளைய இசைக்கலைஞர்கள், வயலின் கலைஞர்கள், வீணைக் கலைஞர்கள், புல்லாங்குழல் கலைஞர்கள், லய வாத்தியக் கலைஞர்கள் 61 பேர்களின் வாழ்க்கைக் குறிப்பு, சிறப்பியல்புகள் ஆகியவை இதில் அவர்களது புகைப்படத்துடன் சுவையாகத் தரப்பட்டுள்ளன. முன்னேறி வரும் இளைய இசைக் கலைஞர்களுக்கும் மற்றவர்களுக்கும் தேவைப்படும்; வழிகாட்டும் பல தகவல்கள் உள்ளன.

எடுத்த காரியம் யாவிலும் வெற்றி - என்.சி. ஸ்ரீதரன், பக். 151, ரூ. 20/- வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை - 17.

சுய முன்னேற்றத்திற்கு உதவும் நூல் வரிசையில் இந்த அருமையான நூலும் இடம் பெறுகிறது. மனச் சோர்வுடனும் குழப்பங்களுக்கு இடையேயும் சிக்கி நம்பிக்கை இழந்து சோர்வுற்று வருபவர்களுக்கு, சோர்வை ஓட்டி நம்பிக்கை யூட்டும் மந்திர நூல் இது. முன்னேறத் துடிக்கும் எல்லோர் கரங்களிலும் இருக்க வேண்டிய நூல்.

சிரித்து மகிழ சிறுவர் கதைகள், மலர்க் கொடி, பக். 76, ரூ. 10/- ப்ரியா நிலையம், 32/2, அம்மையப்பன் தெரு, இராயப் பேட்டை, சென்னை - 14.


சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கத்தக்க சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. தான் வளர்க்கும் அழகான பூனையைப் பெண்ணாக்கி வியாபாரி ஒருவன் படும் பாடும் (சுபாவம் மாறாதே கதை), கடைசியில் மீண்டும் பூனையாக்கி விடுவதும் நன்கு சுவைக்கக் கூடியது. புரிய வைக்கும் தெளிவான நடை. சிறுவர் புத்தகம் என்பதால் ஓரிரு படங்களையாவது சேர்த்து மேலும் மெருகூட்டியிருக்கலாம்.


சந்திர மண்டலத்தில் மந்திரவாதி. ஆலந்தூர் கோ. மோகனரங்கன், பக். 64 ரூ. 8/- வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோவில் தெரு, ஆலந்தூர், சென்னை - 16.


சிறுவர்களுக்காக நீண்டகாலமாக எழுதி வரும் ஆசிரியரின் நாவல் இது. நல்ல உள்ளம் கொண்ட சிறுவன் அரசு மணிக்கு நல்ல உள்ளம் கொண்ட மந்திரவாதியின் நட்புக் கிடைக்கிறது. மந்திரக் கோலைப் பெற்று சந்திரமண்டலம் போகிறான். பகை இல்லாத ஒரு இலட்சிய உலகத்தை உருவாக்கி, வாழ்வதற்கு முயற்சி செய்கிறான். குறுகிய மனப்பான்மை கொண்ட அவன் நண்பன் வேம்பு அதற்குத்தடையாக இருக்கிறான். இறுதியில் எல்லாம் கனவில் முடிவடைகிறது. சுவை குறையாது எழுதியுள்ள திறமை பாராட்டுக்கு உரியது.

மதிப்புரைக்கு அறிவியல், பொது நூல்களும், சிறுவர் நூல்களும் மட்டுமே ஏற்கப்படும். இரண்டு பிரதிகளை ஆசிரியர் : கோகுலம், 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடு தாங்கல், சென்னை - 600 097 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கட்டணம் கிடையாது.

பாரதன் அச்சகத்தில் பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிடுபவர் : வி. முரளி.
ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 36/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 140/-; விமானத் தபால் ரூ. 360/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 18/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 180/-.







REGISTERED NO. TN MS (S) 281
Registered as Newspaper in Srilanka

